# சுவடிப்பதிப்பு வரலாறு

தஞ்சாவூர் சட்டப்பேரவை உறுப்பினர்
எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்களின்

## அறக்கட்டளைச் சொற்பொழிவு
## 2

**26-4-90**

சொற்பொழிவாளர்

**புலவர் இரா.இளங்குமரன்**


ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# சுவடிப்பதிப்பு வரலாறு

தஞ்சாவூர்ச் சட்டப்பேரவை உறுப்பினர்
எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்களின்

## அறக்கட்டளைச் சொற்பொழிவு

## 2

**26-4-90**

சொற்பொழிவாளர்

**புலவர் இரா.இளங்குமரன்**

*நிறுவனர், பாவாணர் ஆராய்ச்சி நூலகம்*

திருநகர், மதுரை 6

**ஓலைச்சுவடித்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

ISBN: 81-7090-162-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 128-2
திருவள்ளுவர் ஆண்டு 2021 சித்திரை - ஏப்ரல் 1990

நூல் : சுவடிப்பதிப்பு வரலாறு

ஆசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

விலை : உரு . 10.00

பதிப்பு : முதற்பதிப்பு

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

# பொழிவோன் புகல்வு

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் பதிப்புப் பணியில் ஊன்றிய பயன் வெளிப்பாடு, 'சுவடிபபதிப்பு வரலாறு' என்னும் தலைப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப் புலத்தில் 'நூலாக்கப் பொழிவு' செய்யவைத்தது என்பதை நினைவு கூர்கின்றேன்.

1972, 1973 ஆகிய ஈராண்டு பழம்பதிப்பு நூல்கள் பெரும்பாலும் எல்லாவற்றையும் தேடித்தேடிப் பயிலவும், குறிப்புகள் தொகுத்து அடைவு செய்யவும் முழுமையாக என்னை ஒப்படைத்துக் கொண்ட காலமாகும். அதற்குத் தூண்டல், யாப்பருங்கல விருத்தி, களவியல் காரிகை, புறத்திரட்டு, பாரத வெண்பா முதலான பதிப்புகளில் அக்காலத்தில் ஊன்றியிருந்த வாய்ப்பேயாம்.

வைப்பகத்தில் பணம் சேர்த்து வைத்துக்கொள்வது போலவும், களஞ்சியத்தில் தவசம் சேர்த்து வைத்துக் கொள்வது போலவும் குறிப்புகளைத் தொகுத்து அடைவு செய்து வைத்துக்கொண்டால் நூலாக்கம் செய்தலும் பொழிவு செய்தலும் எளிமையும் இனிமையும் வாய்ந் தனவாம். அவ்வகையில், ஆயிரக் கணக்கான பழநூற் குறிப்புகளை ஒருங்கு தொகுத்து வைத்துக்கொண்ட வாய்ப்பும், சுவடிக்கலை தொடர்பான பெருநூல் ஒன்றை 1972 ஆகிய ஆண்டுகளிலே எழுதியமையும் தமிழ்ப் பல்கலைக்கழக விழைவை இக்கால் விரைந்தும் செவ்வை யாகவும் நிறைவேற்ற உதவிய நிறைவு நினைவில் நிற்கின்றது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப்புலத் தொடர்பு அதன் தொடக்க நாள் முதலே ஏற்பட்டது. அதனை ஏற்படுத்தியவர் முன்னைச் சுவடிப்புலத்தலைவர் புலவர்மணி திருமலி மு. சண்முகனார் அவர்கள் ஆவர்; அக்காலம்

தொட்டே தொடர்பு கொண்டு அவர்கள் வழியே வழியாகச் செயலாற்றிவரும் இந்நாள் ஓலைச்சுவடித்துறைத் தலைவர் திருமலி த.கோ.பரமசிவனார் அவர்கள் அரவணைப்பு சுவடிப்புலத்தில் இரண்டறப் பிணைத்துக் கொள்ள உதவுகின்றது. அவ்வகையில் அவர்களின் விருப்பப்படி இப்பொழிவு நூல் எழுதவும், பொழிவு செய்யவும் ஆகிய தொண்டாற்றுதற்குக் கிட்டிய வாய்ப்புக்கு மகிழ்வொடு நன்றி கூறக் கடப்பட்டுள்ளேன்.

சுவடிப் புல ஆய்வுப் பொழிவுக்கு வைப்பு நிதி வைத்த பெருமகனார் அவர்களுக்கும், இவ்வைப்பு நிதிப் பொழிவு செய்தற்கு இசைந்துதவிய மேதகு துணைவேந்தர், ஆட்சிக் குழுவினர் ஆகியவர்களுக்கும் நன்றியுடையேன்.

இச் சுவடிப்பதிப்பு வரலாறு 1) தமிழ்க் கோயில், 2) தமிழ்த் தொண்டர், 3) ஏடு போற்றிய பீடுடையாளர், 4) ஏடு தொகுத்த ஏந்தல்கள், 5) பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள், 6) பதிப்புப்பணி, 7) செய்யத்தக்கன என்னும் ஏழு பகுப்புகளைக் கொண்டுள்ளது.

தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்துப் பேணிக்காத்த இடங்கள் தமிழ்க் கோயில்கள் என்பதைச் சான்றுகளால் நிறுவுவது முதற்கட்டுரை.

சுவடிகளைப் படியெடுத்தோர், உரைகண்டோர், ஏடு தொகுத்தோர், பதிப்பித்தோர் என்பார் தமிழ்த் தொண்டர்கள் என்பதை விளக்குவது இரண்டாம் கட்டுரை.

வழிவழிப் புலமையர் குடும்பங்கள் ஏடுகளைப் படியெடுத்தும், பாதுகாத்தும், பதிப்பிப்பார்க்கு வள்ளலெனச் சுவடிகளை வழங்கியும் உள்ளமை குறிப்பது மூன்றாம் கட்டுரை.

நான்காம் கட்டுரை ஆங்காங்குத் தொகுப்பாகவும் தனித்தனியாகவும் இருக்கும் சுவடிகளைத் தொகுத்து வைத்துத் தம் பதிப்புக்கும் பிறர் பிறர் பதிப்புக்கும் உதவிய

# 1. தமிழ்க் கோயில்

உலகத்தில் தாய் வழிபாடே தொன்மையானது என்பர். தாய் வழிபாட்டில் இருந்தே தெய்வ வழிபாடு தொடங்கியது என்றும் கூறுவர். பெற்ற தாயையும், பேசும் மொழியையும், பிறந்த நாட்டையும் தெய்வமாகப் போற்றுவது தமிழர்களின் வழக்கமாகும். தாய்வழிபாடே தாய்மொழி வழிபாடாகவும், தாய்நாட்டு வழிபாடாகவும் விரிவடைந்தது என்பது பொருந்தும்.

"தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல் செய்வாம்" என்று தமிழ்த் தெய்வத்தை வழிபட்டு நூல் தொடங்குவது புலவர்கள் வழக்கமாயிற்று. "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"- என்று தமிழ்ப்பணியையே தெய்வத் திருப்பணியாகக் கொண்டு வாழ்ந்த புலவர் பெருமக்களும் இருந்தனர். அவர்கள் தமிழ் ஏடுகளைத் தொகுத்தும் படியெடுத்தும் பாதுகாத்தும் ஆராய்ந்தும் தம் பணியைத் தமிழ்த் தெய்வ வழிபாடாகவே செய்து வந்தனர். தம்மைத் தேடிவந்த மாணவர்களுக்கு உண்டியும் உடையும் உறையுளும் வழங்கி உள்ளார்ந்த அன்பொடும் தந்தை நிலையில் இருந்து தாய்மொழி இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தனர். இத்தகைய தமிழ்த் தொண்டர்களின் தகுதி மிக்க செயல்களாலேயே, "எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்று நாம் பெருமிதத்தோடு இன்று வாழ்த்துப் பாட முடிகின்றது. வாழ்த்துப் பாடுவது நமக்கு எளிமை யானது! ஆனால் தமிழை வாழவைத்த பெருமக்கள் வாழ்வைப் பதற்காகப் பட்டபாடுகள் எத்துணை! எத்துணை! வறுமைக்கும், முதுமைக்கும், நோய்க்கும், பகைக்கும், தீக்கும், நீருக்கும், செல்லுக்கும், அந்துக்கும் இடையே போராடிப் போராடிப் பட்ட அல்லல்கள் எத்துணை! எத்துணை!!

அவர்கள் செய்த செயற்கரும் தொண்டுகளைக் காண்பதே இச்சுவடிப்பதிப்பு வரலாறு ஆகும்.

ஏடுகளைத் தொகுத்தலும் ஆராய்தலும், பதிப்பித்தலுமே தவவாழ்வாகக் கொண்டவர் பெரும் பேராசிரியர் தென்மொழிச் செல்வர் அறிஞர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் ஆவார். தாம் வாழ்ந்த இல்லத்தைத் 'தமிழ்க் கோயில்'ஆக்கிய பெருந்தகை அவர். தாம் கண்டு களிகூர்ந்து கனிந்துருகி வழிபட்ட தமிழ்க் கோயில்களை "என் சரித்திர'த்தில் இயம்புகிறார்.

திருநெல்வேலி "மேலை வீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப் பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. 'தமிழ்ச்சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ?' என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச் சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டி வைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை. தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்".[1]

பத்துப்பாட்டுச் சுவடிகளைத் தேடிக்கொண்டு ஐயரவர்கள் அலைந்த காலம் அது. அச்சுவடி அங்கேயும் முழுமையாகக் கிடைக்கவில்லை! 'இனி வேறு எங்கே கிடைக்கப்போகிறது?' என்று துயருற்றார். "சங்கப் புலவருடைய வீட்டைப்போல விளங்கும் இவ்விடத்தில் தமிழ்ச் செல்வம் முழுவதும் கிடைக்குமென்று முதலில் எண்ணினேன். நான் எதைத்தேடி வந்தேனோ அது முற்றும் கிடைக்கவில்லையே! தமிழுலகத்தில் இந்தத் தமிழாலயத்தைக் காட்டிலும் சிறந்த இடம் எங்கே இருக்கப்போகிறது! இங்கே அகப்படாதது, வேறு எங்கே அகப்படும்! சங்கத்துச்

1. என் சரித்திரம் பக். 873

சான்றோர்கள் இயற்றிய நூல்களைத் தமிழுலகம் இப்படி ஆதரவின்றிப் போக்கிவிட்டதே!"[1] என்று வருத்தத்தோடு கூறினார்.

மிதிலைப்பட்டி என்றவுடன் தமிழாராய்ச்சியாளர்களுக்கு அழகியசிற்றம்பலக் கவிராயர் நினைவே உண்டாகும். அப்புலவர் பெருமகனார் வீட்டுக்கு ஐயர் ஏடு தேடிச் சென்றார். அழகியசிற்றம்பலக் கவிராயர் வீட்டிலுள்ள ஏட்டுச் சுவடிகளைக்[2] கண்டார். அவர் வீடு தமிழ்மகள் ஆலயமாகத் தோற்றியது கண்டு விம்மிதமடைந்தார்.

ஏடுகளைத் தொகுத்துப் பாதுகாத்த • புலவர் பெருமக்கள் இல்லங்களே 'தமிழ்க்கோயில்கள்' என்பது தமிழ்த்தாத்தாவின் தேர்ச்சியுரை. அத்தமிழ்க் கோயில் தொண்டர்களாக விளங்கிய புலவர் பெருமக்களே தமிழ் ஆழ்வார்கள், தமிழ் நாயன்மார்கள், தமிழ்ப்பிக்குகள், தமிழ்த் தீர்த்தங்கரர்கள், தமிழ் அடியார்கள்! 'அவர்கள் அடிப்பொடி எம் முடிமேலன' எனக் கொண்டு எழுப்பப் பெறும் தமிழ்க்கோயில் இச்சுவடிப்பதிப்பு வரலாறாகும்.

1. என் சரித்திரம் பக். 874

2. என் சரித்திரம் பக். 944

# 2. தமிழ்த் தொண்டர்கள்

தொல்காப்பியம் ஏறத்தாழ மூவாயிர ஆண்டுப் பழமையான நூல். அதனை இன்று நாம் அச்சுவடிவத்தில் காண்கிறோம். அதனை முதற்கண் பதிப்பித்த அறிஞர்களுக்கு ஏட்டுச் சுவடிகளே மூலமாக இருந்தன. அந்த ஏட்டுச் சுவடிகள், ஆசிரியர் தொல்காப்பியனார் கையெழுத்தில் இருந்தனவா? இல்லை! தொல்காப்பியனார் கையெழுத்து எவ்வாறு இருக்கும் என்பதை, நாம் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. ஒரு வேளை, தொல்காப்பியனார் எழுதிய எழுத்தே நம் கைக்கு கிடைத்திருக்குமானால் அதனை நாம் படிக்க முடியாமல் போகலாம்! நாம் இப்பொழுது எழுதும் எழுத்தைத் தொல்காப்பியனார் பார்ப்பாரானால், அவரால் படிக்கமுடியாமல் போகவும் கூடும்! ஏனெனில் அவர் காலத்தில் எழுதப்பட்ட எழுத்திற்கும் இப்பொழுது நாம் எழுதும் எழுத்திற்கும் இடைப்பட்ட வேறுபாடுகள் மிகுதியாம். இவ்வாறாகவும், தொல்காப்பியனார் நூலை, அவர் கூறிய முறையில் சரியான பொருளில் அறிந்து கொண்டு படிக்கவும் புலமை பெறவும் ஆராய்ச்சி செய்யவும் நம்மால் முடிகின்றன என்றால் வியப்பாகவே தோன்றும். அந்த வியப்பான வேலையைக் காலந்தோறும் தவறாமல் செய்து வந்த புலமைச் செல்வர்கள் எவர்கள் என்று அறியவும் ஆவல் தோன்றும்!

தொல்காப்பியர் தாம் இயற்றிய நூலைச் சுவடியிலே எழுதிவைத்திருப்பார். அவரிடம் பயின்ற மாணவர்களுக்கு அந்நூலை ஓதியிருப்பார்; அவர்களுக்கு அந்நூல் பாடம் செய்தற்கு வேண்டியதாக இருந்திருக்கும்; ஒரு சுவடியை வைத்துக் கொண்டு பல மாணவர்கள் என்ன செய்ய இயலும்? தத்தமக்கு வேண்டும் என்னும் ஆர்வத்தால் ஒவ்வொரு படி அவர்கள் எழுதிக் கொண்டிருப்பார்கள். பின்னே அவர்கள் வெவ்வேறு இடங்களில் சென்று புலமைத் தொழில் நடாத்த நேர்ந்திருக்கலாம். அவர்களுக்கு மாணவராயினர்

பலராகலாம். அவர்கள் அனைவருக்கும் ஒரு சுவடி போதாதே! ஆதலால் ஆசிரியர் வைத்திருந்த சுவடியைப் பார்த்து அவர் மாணவர்களும் படியெடுத்துக் கொண்டிருப் பார்கள். ஆசிரியர்க்கு நன்பர்களாகிய ஆசிரியர்களும், புலமையாளர்களும் தொல்காப்பியத்தின் அருமை பெருமை களைக் கேள்வியுற்றுத் தாமும் அதனைப் படியெடுத்துக் கொண்டிருப்பார்கள். இப்படியே தொல்காப்பியம் தமிழ் கூறு நல்லுலகத்துப் புலமைச் செல்வர் இல்லங்களிலெல்லாம் கோயில் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏட்டுச் சுவடிகள் எவ்வளவு காலம் தான் அழியாமல் இருக்கமுடியும்! அச்சிட்ட புத்தகங்களே நூற்றாண்டுக் காலம் வாழ்வது அரிதாக இருப்பது கண்கூடு. அவ்வாறாகவும் ஏட்டுச் சுவடிகள் கால வெள்ளத்தை - மூவாயிர ஆண்டுக் கால வெள்ளத்தை - கடந்து வெற்றி கொள்ள முடியுமா? சிறந்த சுவடியாகத் தேர்ந்து சீரிய பாடங்கள் செய்து, போற்றிக் காக்கப்பெற்று வரும் ஏட்டுச் சுவடிகளே முந்நூறு, நானூறு ஆண்டுக்காலம்தான் வாழமுடியும் என்பர்! அவ்வாறாக மூவாயிர ஆண்டுகள் எத்துணையோ முறை, தவறாமல் படியெடுத்துப் பாதுகாத்து வந்தமையால்தான் நம் கையில் தொல்காப்பியனார் அருளிய தொல்காப்பியம் கிடைத்தது. ஒவ்வொருவரும் தாம் படித்துவரும் ஏட்டையே படியெடுத் தமையால் காலந்தோறும் ஏற்பட்டுவந்த எழுத்து மாற்றங்கள் அவர்களுக்குப் புதிதாகத் தோன்றாமல் மயக்கம் உண்டாகாமல் இயல்பாகத் தோன்றின. வழி வழியே படியெடுக்கவும் படிக்கவும் தடையின்றி ஆயிற்று. இத்தகைய படியெடுப்புப் பணி இல்லாது போயிருக்குமானால் தொல்காப்பியனார் கையெழுத்துச் சுவடியே நமக்குக் கிடைப் பினும் நன்மை எளிதில் வாய்த்திராது. கால இடைவெளி வழித்தடத்தையே மாற்றியமைப்பதுபோல, மொழித்தடத் தையும் மாற்றியமைத்துவிட்டிருக்கும் அல்லவா!

பிராமி எழுத்தில் சில கல்வெட்டுக்கள் கிடைத்தன. ஆனால் அவற்றைப் படிக்க முடியவில்லை. படிக்க முடியாத

கல்வெட்டால் ஆகும் பயனென்ன? ஓர் அறிஞர் 'சேம்சு பிரின்செப்' அயராது முயன்றார்! தொடர்பற்றுப் போன பிராமி எழுத்துக் கல்வெட்டைப் படிப்பதற்குத் தாழ்க்கோல் கண்டுபிடித்தார்.

"இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மிகப் பழைய காலத்தில் வழங்கிவந்த நாணயங்களில் ஒரு பக்கம் பிராமி எழுத்தும் மற்றொருபக்கம் கிரேக்க எழுத்தும் எழுதப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்துக்களின் உதவியால் அந்த நாணயங்களில் இருந்த பிராமி எழுத்துக்களை இவர் வாசித்தார். இவ்வாறு சில பிராமி எழுத்துக்களின் ஒலியைத் தெரிந்து கொண்டு பின்னர் மேலும் ஆராய்ந்து மற்றைப் பிராமி எழுத்துக்களின் ஒலியையும் கண்டறிந்தார். இவ்வாறு மறைந்து மறக்கப்பட்டுக் கிடந்த பிராமி எழுத்துக்களைப் படிப்பதற்குத் திறவுகோல் கண்டுபிடிக்கப்பட்ட படியால் பிராமி எழுத்துச் சாசனங்கள் வாசித்துப் பொருள் அறியப்பட்டன"[1] தொடர்பற்றுப்போனால் தொல்காப்பியத்தின் நிலைமையும் இவ்வாறுதானே ஆகியிருக்கும்! இந்நிலை ஆகாமல் வழிவழியே படியெடுத்துப் பாதுகாத்த புலமையாளர்களே நமக்குத் தொல்காப்பியம் என்னும் கருவூலத்தைக் கைம்மேல் தந்த வள்ளல்கள் ஆவர். இவர்கள் தமிழ்த் தொண்டர் வரிசையில் முதல்வர் ஆவர்.

அடுத்துத் தமிழ் இலக்கிய இலக்கணங்களாக நமக்குக் கிடைத்துள்ளவற்றை நோக்குங்கால் சில செய்திகள் புலப்படுகின்றன.

க) பழமையானவற்றுள் மூலமாகமட்டும் இருந்த நூற்சுவடிகள் மிகுதியாக அழிந்துள்ளன.

உ) உரையுடன் கூடிய நூற்சுவடிகளே மிகுதியாக நமக்குக் கிடைத்துள்ளன.

ங) உரையாலேயே மூலப்பாடத்தைக் கண்டு நூலாக அமைத்துக் கொள்ளவும் நேர்ந்துள்ளது.[2]

---

1. 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் பக்.35, 36
2. எ...டு. பத்துப்பாட்டு, என் சரித்திரம் பக். 938

ச) உரைகளாலேயே நாம் இழந்துவிட்ட தமிழ்ச் செல்வங்களின் பெயர்களையோ பகுதிகளையோ குறிப்புக் களையோ அறிந்து கொள்ள முடிகிறது.

இவற்றால் உரைகண்ட பெருமக்கள் மூலநூல் அழிந்து படாமல் பெரிதும் காத்துள்ளார்கள் என்பது விளங்கும்.

மூல நூலில் இருந்த இருண்ட பகுதிகளையெல்லாம் ஒளி விளக்கம் செய்து வெளிப்படுத்தியதுடன் அழியா வாழ்வு தந்தவர்களும் உரையாசிரியப் பெருமக்கள் என்பது ்தகும். ஆதலின் உரையாசிரியர்கள் தமிழ்த்தொண்டர்களுள் இரண்டாமவர் ஆவர்.

நாடறிந்த புலவர்களாக இருந்தவர்களிடமும் எல்லாச் சுவடிகளும் படியெடுக்கப்பெற்றோ, தொகுக்கப்பெற்றோ இருக்கும் என்பதற்கில்லை. பல நூல்களைத் தொகுத் தாரிடமும் சில அரிய நூல்கள் இல்லாமல் இருக்கக் கூடும். சில நூல்களே தொகுத்தாரிடமும், பல நூல்களைத் தொகுத் தாரிடத்தில் இல்லாத நூல்களும் இருக்கக்கூடும். வாழையடி வாழையாக வரும் புலமையாளர் வழியிலும் புலமையில்லார் தோன்றிவிடுவதும் உண்டு. புலமை இல்லார் ஏடுகளின் மேல் அன்பு கொள்வாரோ? போற்றிக் காக்கும் நாட்டமுடைய வராக இருப்பாரோ? இத்தகைய இடர்ப்பாடுகளையெல் லாம் ஒருங்கே போக்கும் வகையாகச் சில சான்றோர்களும், அமைப்புகளும் மடங்களும் ஏடு தொகுத்துப் போற்றும் கடைப்பிடியை மேற்கொண்டன. இக்கடைப்பிடியால் காலக் கோளின்வாய்ப்படாது காக்கப்பெற்ற சுவடிகள் பலப்பல. ஆதலின் ஏடுதொகுத்துப் போற்றிய சான்றோர்கள் தமிழ்த்தொண்டர் வரிசையில் மூன்றாமவர் ஆவர்.

அடுத்த நிலையிலே போற்றத் தக்கவர்கள் ஏட்டுச் சுவடிகளை நூல்களாக்கிய பதிப்பாளர்கள் ஆவர். அவர்கள் அலைந்த அலைச்சலையும் இழந்த இழப்பையும், எடுத்த முயற்சியையும் எளிதில் கூறிவிடத் தொலையாது. வசையம்புகளை ஏவி வாட்டுவார் இடையேயும், அசையாது

நின்று, அமைந்த பணிசெய்த பெருமக்கள் பதிப்புப் பேராசிரியரகள். அவர்கள் காலத்தால் பணி செய்திரார் எனின் 'ஞாலத்தின் மூத்தமொழி' என நாம் கூறும் பெருமிதம் நமக்கு எப்படி உண்டாயிருக்க முடியும்? ஆதலால் இவர்களும் நம் நன்றிக்கு உரியவர்கள். இந் நாற்கூறுபட்ட நன்மக்களும் தமிழ்த்தெய்வ வழிபாட்டில் தலைசிறந்த தொண்டர்கள் என்பது விளங்கும். இவர்க்ளே தமிழ்த் தெய்வத்திற்கு எழுப்பப்பெற்ற சுவடிப்பதிப்புத் திருக்கோயிலின் நான்கு தூண்கள் போன்றவர்கள்.

# 3. ஏடு போற்றிய பீடுடையாளர்

## க. அழகியசிற்றம்பலக் கவிராயர்

பழந்தமிழ் ஏடுகளைப் பாதுகாத்துப் பதிப்பிப்பவர்களுக்கும் ஆராய்பவர்களுக்கும் வரையாது வழங்கும் வள்ளலெனத் திகழ்ந்தவர்களுள் தலையாயவர் மிதிலைப் பட்டி அழகியசிற்றம்பலக் கவிராயர் வழிமுறையினர் ஆவர்.

மிதிலைப்பட்டி என்பது அண்மைக்காலத்தில் சிவகங்கைக் குறுநில மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. புதுக்கோட்டையைச் சார்ந்த திருமெய்யத்திற்குச் சில கல் தொலைவில் உள்ளது. அவ்வூர் அழகியசிற்றம்பலக் கவி ராயருக்கு முன்னோரான மல்லைச் சிற்றம்பலக் கவிராயருக்கு வெங்களப்ப நாயக்கர் என்னும் குறுநில மன்னரால் வழங்கப் பெற்றது.

மிதிலைப்பட்டிக் கவிராயர் வழியினர் செவ்வூர், காரைச்சூரான்பட்டி ஆகிய இடங்களுக்குச் சென்றும் வாழ்ந்தனர். அங்கும் தம் பழஞ்செல்வங்களைப் போற்றி வந்தனர்.

அவர்கள் வீடுகளில் இருந்த ஏடுகள் பல நூற்றாண்டுகளாகச் சேர்த்து வைத்த பழமையானவை. சிறந்த புலமையாளர்களால் எழுதப்பெற்றவை யாதலால் செம்மை யாகவும் திருத்தமாகவும் இருந்தன. தமிழ் தந்த வளத்தால் வாழ்ந்து வரும் அவர்களிடம் பெருங்குணமும் பொருந்தி யிருந்தது. ஆதலால் தக்கார் எவரும் தமிழ்ச்சுவடி தேடிவரின் தடையின்றி உதவினர். புலவர்கள் புகழும் புகழுக்கு உரியவர் களாகத் திகழ்ந்தனர்.

"மிகப் பழமையானதும், பரிசோதனைக்கு இன்றிய மையாததாக இருந்ததும், மற்றைப் பிரதிகளில் குறைந்தும்

பிறழ்ந்தும் திரிந்தும் போகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும், கோப்புச் சிதைந்து அழகு கெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவள் அணிந்து கொள்ளும் வண்ணம் செப்பம் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டிப் பிரதியே" என்று டாக்டர் சாமிநாதையர் அவர்கள் மிதிலைப்பட்டிப் பிரதியைப்பற்றி மணிமேகலையின் முகவுரையில் குறிப்பிடு கின்றனர். மேலும், "தமிழ் நாட்டில் எவ்வளவோ புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன; சிவஸ்தலங்களும், விஷ்ணுஸ் தலங்களும், சுப்பிரமணிய ஸ்தலங்களும் பல உள்ளன. அவற்றைப்போல் தமிழ்த்தெய்வம் கோயில்கொண்டுள்ள ஸ்தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதியிருக்கிறேன்"[1] என்று வியந்து பாராட்டுகின்றனர்.

குறுந்தொகையை முதற்கண் பதிப்பித்த பெருந்தகை திருமாளிகை சௌரிப்பெருமாள் அரங்கனார். அவர் குறுந்தொகை ஏடு தேடிக்கொண்டு மிதிலைப்பட்டி சென்றார். அப்பொழுது கவிராயர் குடும்பத்தார் நடந்து கொண்ட பெருந்தகைமையை உரைக்கின்றார்.

"பழந்தமிழ்ப் புலவர்கள் வீட்டில் சீரிய பிரதி இருக்குமெனக் கருதி மிதிலைப்பட்டி, செவ்வூர் முதலிய இடங்களுக்குச் சென்று தேடினேன். தங்கள்பால் பிரதிகளை நாடி வருவார் திறத்துத் தாம் வழக்கமாகச் செய்வதேபோல என்னை மறைத்திடக் கூடிய அத்தனை ஏடுகளை எடுத்து என் முன்னர்ப் போட்டுவிட்டுத் 'தாங்கள் விரும்பும் ஏடுகள் கிடைப்பின் எடுத்துக் கொள்க' என்று தம் தொழில் மேற் செல்வாராயினார்"[2].

அழகியசிற்றம்பலக் கவிராயர் ஏடுகளுள் மணிமேகலை மூலம் ஏடு 1, சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரை ஏடு2, புறநானூறு மூலமும் உரையும் ஏடு2,

1. நான் கண்டதும் கேட்டதும் பக். 45
2. குறுந்தொகை-முகவுரை

சிலப்பதிகார மூலம் ஏடு1,மூவருலா ஏடு1, திருவிளையாடல் பயகர மாலை ஏடு1 ஆகியனவும் வேறுசில ஏடுகளும் டாக்டர் சாமிநாதையர் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் வழங்கிய ஏடுகளுள் ஒன்றில் 'முச்சங்க வரலாறு' பற்றிக் கூறும் அகவல் ஒன்று கிடைத்தது![1] திருவிளையாடல் பயங்கர மாலை என்பது 'பயகர மாலையே' என்று தெளிவாக்கியது அவர்கள் வழங்கிய ஏடே; மணிமேகலையின் காதைகள் பாட்டென்றே அவர்கள் ஏட்டில் குறிக்கப் பெற்றிருந்தன. "மணிமேகலை ஆறைம்பாட்டு" என்பதன் பொருத்தத்தை அச்சுவடி விளக்கிற்று. புறநானூற்றின் பழையவுரை 266 ஆம் பாடல் வரை கிடைத்துள்ளது. அவ்வுரை அவ்வளவு முழுமை யாகக் கிடைத்தது அவர்கள் வழங்கிய சுவடியாலேயாம். இக்கொடைகளெல்லாம் அழகிய சிற்றம்பலக் கவிராயரையும் அவர் வழிமுறையினரையும் சேர்ந்தனவேயாம்.

## உ. அம்பலவாண கவிராயர்

இப் பெரும்புலவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். திருநெல்வேலி மேலை வீதியில் வாழ்ந்தவர். அவர் வழி முறையைச் சேர்ந்த பெருமக்கள் கவிராச நெல்லையப்பப் பிள்ளை, கவிராச ஈசுவர மூர்த்திப்பிள்ளை என்பவர்கள். இவர்கள் வீட்டில் ஏடுகள் வைக்கப் பெற்றிருந்த செவ்விய முறையைத் தொடக்கத்திலேயே கண்டிருக்கிறோம். ஏடுகளைப் போற்றிய இப்பெருமக்கள் ஏடுதேடி வருவார்க்கும் அவற்றை இனிதுவந்தளித்து இசை பெற்றனர்; பாடிவருவார்க்குப் பரிசில் வழங்கியுதவும் புரவலர்களாகவும் திகழ்ந்தனர்.

புறநூனூற்றின் நானூறு பாடல்களும் ஒருங்கே கிடைத்த சுவடிகள் நாடெல்லாம் கூட்டியும் நான்கேயாம். அவற்றுள் ஒன்று அம்பலவாண கவிராயர் சுவடி. மற்றும் சிந்தாமணி, குறுந்தொகை, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சுவடிகளும் ஆங்குக் கிடைத்தன. ஐயரவர்கள்

---

1. சிலப்பதிகாரப் பதிப்பில் இடம் பெற்றுள்ளது.

பதிப்புக்கும், 'சைவசித்தாந்த சமாசப்' பதிப்புக்கும் துணையாயின.

அம்பலவாண கவிராயர் ஏடுகளுள் வேறு எங்கும் கிடையாத ஒன்று 'கொங்குவேள் மாக்கதை' என்னும் பெருங்கதை அதற்குரிய மற்றொருபடி திருநெல்வேலி 'வண்ணாரப்பேட்டையிலுள்ள திருப்பாற்கட னாத கவிராயர் படியாகும். முன்னதைப் பார்த்துப் படி எடுத்தமையால் முதிர்ந்த படியின் சிதைவை. ஈடுசெய்வதற்குத் துணையாக அஃது இருந்தது. முதலும் ஈறும் இல்லாத பெருங்கதையை, முழுவதும் இல்லாது போகாவண்ணம் காத்துக் கன்னித் தமிழுக்கு உதவியவர்கள் அம்பலவாண கவிராயர் வழியினரும், அவர்தம் அறிவறிந்த மாணவர் திருப்பாற் கடனாத கவிராயர் வழியினரும் ஆவர். நன்மக்கள் தேடிக்காக்கும் பொருள் நாட்டுப் பொருளாக விளங்கும் என்பதற்கு இவ்வேட்டினும் வேறு சான்று வேண்டுவதில்லை.

அம்பலவாண கவிராயர் படிகளில், சிந்தாமணி நச்சினார்க்கினியர் உரையுடன் கிடைத்தது. அன்றியும் 'சிந்தாமணித் தெரிவு' என்னும் நூலும் கிடைத்தது. அது சிந்தாமணியில் இருந்து சுவைமிக்க பாடல்களாகத் திரட்டி வைக்கப்பட்ட திரட்டு நூலாகும். இந்நூலால் ஓர் அரிய கலைச்சொல் தமிழுலகுக்குக் கிடைத்துள்ளது. தேர்ந்து தேர்ந்து பொருட்சுவை கெழுமத் தொகுக்கப் பெற்ற நூலைத் 'தெரிவு' என்பது எவ்வளவு பொருத்தமானது! 'திரட்டு' என்பதினும் 'தெரிவு' என்பது பொருள் பொதிந்த சொல் என்பது எளிதில் விளங்கும்.

## ௨. திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை 2

திருநெல்வேலியினராகிய இவர் அம்பலவாண கவிராயர் மாணவர்களுள் ஒருவர். பிற்காலத்தில் மயிலாப் பூரில் வாழ்ந்துவந்தார். தமிழ் நூல்களில் அழுத்தமான தேர்ச்சியும் பாடம் பயிற்றும் திறமும் இவருக்கு மிகுதியும்

உண்டு. ஏட்டுச் சுவடிகள் பலவற்றை எழுதியும் தொகுத்தும் வைத்திருந்தார்.

திரிசிரபுரம்பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவரிடம் சில நூல்களைப் பாடங்கேட்டுள்ளார். மயிலாப்பூர் பகுதியிலும் நெல்லைப் பகுதியிலும் இவர் புகழ் நன்கு பரவியிருந்தது. இவருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. அதனால் அவர் வைத்திருந்த ஏடுகள் அண்ணாசாமி உபாத்தியாயர் என்பவரால் போற்றிக் காக்கப் பெற்றன.

இவர்தம் ஏடுகளாக மணிமேகலை, பத்துப்பாட்டு, சிந்தாமணி ஆகியவை தமிழுலகுக்குக் கிடைத்துள்ளன. திருமுருகாற்றுப்படை உரையொன்றும் கிடைத்தது.

## சு. திருப்பாற்கடனாதன் கவிராயர்

இவர் திருநெல்வேலி வண்ணார்பேட்டையைச் சார்ந்தவர். அம்பலவாண கவிராயர் மாணவர்களுள் ஒருவர். பெரும்புலவர்; ஏடுகள் பலவற்றைத் தொகுத்து வைத்தவர். முத்துவீரியத்திற்கு உரை செய்தவர்.

திருப்பாற்கடனாதன் கவிராயர் பேரர் திருப்பாற் கடனாதன் கவிராயர். பொருட் செல்வமும் அருட்செல்வமும் பொருந்தியவர். 'செல்விருந்தோம்பி வருவிருந்து' பார்த்திருப் பார்போல ஏடு தேடி வருவார்க்கு உதவும் வள்ளன்மையாளர். அவர் வீட்டில் ஏறத்தாழ 500 சுவடிகள் இருந்தன. பெரும்பாலும் கவிராயர் கையால் எழுதியவையே. அவற்றுள் அருமையான சில ஏடுகள் பழந்தமிழ்ச் செல்வங்களாக நாட்டுக்குப் பயன்பட்டுள்ளன.

அக்காலத்தில் திருநெல்வேலியில் உதவி நீதிபதியாகக் கனகசபை முதலியார் என்பவர் இருந்தார். அவர் தம் அன்புக் குரிய பதிப்பாளர்களுக்கு, ஏடுதேடித் தந்துதவும் பெரும் குணத்தினராக விளங்கினார். அவருக்குக் கவிராயர், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும்

மூன்று தொகுதி ஏடுகளையும் தந்தார். ஏறத்தாழ சங்க இலக்கியம் முழுமையும் திருப்பாற்கடனாதன் கவிராயர் இல்லத்தில் இருந்தமை இதனால் புலப்படும். பின்னர் டாக்டர் ஐயரவர்கள் ஏடுதேடிச் சென்றார். பத்துப்பாட்டு முழுமையும் அமைந்த சுவடி கிடைத்தது. அச்சுவடியின் இறுதியில் ''ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் கவிராயரிடத்தே தொல் காப்பிய ஏட்டைக் கொடுத்துக் கொல்லமாண்........வாங்கி வந்தேன்'' என்னும் குறிப்பு இருந்தது. அவ்வேடு 150 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்றது என்றும் ஏடு எழுதிய காலம் அதற்கு முன்னர் 200 ஆண்டுகள் இருக்கக்கூடும் என்றும் ஐயர் எண்ணினார். மேலும் சிந்தாமணியும், கொங்குவேள் மாக்கதையும் வேறு சில சிறு நூல்களும் கிடைத்தன. ''பத்துப்பாட்டு முழுவதும் உள்ள பிரதி கிடைத்ததில் என்மனம் மிக்க இன்பமடைந்தது'' என்று ஐயர் குறிப்பிடுமாறு கவிராயர் ஏடு நன்மை பயந்தது.

## ரு. அண்ணாசாமி உபாத்தியாயர்

திருவம்பலத்தின்னமுதனார் திருமயிலையில் வாழ்ந்த காலத்தில் அங்கே ஆசிரியப் பணி நடாத்தி வந்த பெருமகனார் இவர். அமுதனாரிடம் அணுக்கராக இருந்து அருந்தமிழ் நூல்கள் பல கற்றிருக்கக்கூடும். அன்றியும் அவரை அறிவுத் தந்தையாகக் கொண்டு வாழ்ந்திருத்தலும், போற்றியிருத்தலும் கூடுவதே. ஏனெனில் அமுதனார்க்கு மக்கட் பேறு வாய்க்கப் பெறவில்லை ஆதலின்.

அமுதனார் அன்பில் ஈடுபட்ட ஆசிரியர் அண்ணா சாமி அன்னைத்தமிழ் கற்பதில் ஊன்றினார். அவர் செய்த தொண்டு பள்ளியில் பாடம் கற்பிக்கும் அளவில் நின்று விடவில்லை. அக்காலஆசிரியர்களுள் பெரும்பாலோர் அவ்வாறு நின்றாரும் அல்லர். அம்முறைப்படியே இலக்கிய இலக்கணங்களைக் கற்றலும் கற்பித்தலும் கடனாகக் கொண்டார். இவற்றினும் மேலாகப் பழஞ்சுவடிகளைப் பேணிக் காத்தலையும், படியெடுத்துப் போற்றுதலையும்

பிறவிப் பெருங்கடமையாக ஏற்றார். அவ்வகையால் அவர் ஏற்றம் பெற்றதுடன் தமிழ் மொழியின் ஏற்றத் திற்கு ஓர் அரிய ஏந்தாகவும் வாய்த்தார்.

திருமயிலையில் அம்மை ஆண்டியப்பக் கிராமணி என்பார் ஒருவர். அவர்தம் மக்களுள் அண்ணாசாமி ஒருவர். அவர்தம் வழியினர் மந்தைவெளியில் வாழ்கின்றனர். அவர்கள், "பழம் பொருளைப் போற்றுவார் கையில் இருத்தலே பொருந்தும்; வீணே காத்தல் வேண்டா" என்னும் குறிப்பினர். ஆகலின் அண்ணாசாமி ஆசிரியர் காலமான தற்குப் பின்னர் ஏடு தேடி வந்த ஐயரவர்களிடம் வழங்கி 'ஈத்துவக்கும் இன்பம்' எய்தினர். இவ்வகையால் தொல். சொல். இளம்பூரணம், தொல். சொல். நச்சினார்க்கினியம், தொல். பொருள். நச்.பேராசிரியம், பொருநராற்றுப் படை,சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை, சிலப்பதிகார மூலம், சிலப்பதிகார அடியார்க்குநல்லார் உரை, மணிமேகலே ஆகியன கிடைத்தன.

## சா. திருமயிலை சண்முகம்பிள்ளை

சென்னைப் புரசவாக்கத்தில் இருந்த அட்டாவதானி சபாபதி முதலியார் மாணவர் பலர். அவர்களுள் திருமயிலை சண்முகம்பிள்ளை ஒருவர். சபாபதி முதலியார் மனப்பாடத் திறனே அவரை எண்கவனகர் (அட்டாவதானி) ஆக்கி வைத்தது. அப்புலமை அவர்தம் மாணவர் சண்முகம் பிள்ளைக்கும் அமைந்து கிடந்தது. இவரிடம் பயின்று சிறந்தோர்களுள் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவர்.

ஐம்பெருங்காவியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை மூலத்தை முதற்கண் வெளியிட்ட பெருமை திருமயிலை சண்முகம் பிள்ளையையே சாரும். அந்நூல் 1894-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. அதன் முகப்பில், "புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் மாணவர் திருமயிலை சண்முகம் பிள்ளை பார்வையிட்டு, கயப்பாக்கம் இரத்தின

செட்டியார் குமாரர் முருகேச செட்டியாரால் பதிப்பிக்கப் பட்டது. விஜய ஞூ தனுர்ரவி" என்னும் குறிப்புகள் உள்ளன.

இவர்தம் புறநானூற்றுச் சுவடி பேராசிரியர் சுந்தரம் பிள்ளை வழியாகவே உ.வே. சாமிநாதையருக்குக் கிடைத்தது. இவர்தம் ஐந்திணை ஐம்பது ஏட்டுச் சுவடியும், செல்வக் கேசவராய முதலியார் ஏட்டுச் சுவடியுமே மதுரைத் தமிழ்ச்சங்க வழியாக ஐந்திணை ஐம்பது பழைய உரையுடன் வெளிவருவதற்கு வாய்ப்பளித்தன. தமிழ்ச்சங்கத்தின் முதல் வெளியீடு இந் நூலேயாம். தொல். நச்.உரை சங்கப் பதிப்புக்கும் இவர் சுவடி பயன்பட்டது.

## எ. தே. இலட்சுமண கவிராயர்

இவர் திருக்குருகூர் எனப்பெறும் ஆழ்வார் திருநகரி யைச் சேர்ந்தவர். வாழையடி வாழையாகப் பெரும்புலவர் வழியில் வந்தவர். மாறனலங்கார உரையாசிரியர் தென்திருப்பேரை காரிஇரத்தின கவிராயர், புலவராற் றுப்படை இயற்றிய சிறிய இரத்தின கவிராயர், தீராதவினைதீர்த்த திருமேனி கவிராயர் என்பவர்கள் வழியில் வந்தவர்.

பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறு நூறு, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லாருரை, புறப் பொருள் வெண்பாமாலை முதலிய சுவடிகள் ஐயருக்கு கிடைத்தன.

இவற்றுள் பரிபாடல் சுவடிகள் இரண்டு. பதிப்புக்குக் கிடைத்த மொத்தப் படிகளே மூன்றுதாம். அன்றியும் பரிபாடல் 2 முதல் 22 பாடல்முடிய உரையுடன் இருந்த படிகள் இவை. இவ்வளவே பரிபாடலில் நம் கைக்குக் கிடைத்துள்ள அளவு எனின் அதன் முழுப் பெருமையும் இலக்குமண கவிராயரைச் சேர்ந்ததேயாம்.

ஐங்குறுநூற்றுப் பதிப்புக்குக் கிடைத்த சுவடிகள் நான்கேயாம். அவற்றுள் மற்றைச் சுவடிகள் மூன்றும் மூலமும் கருத்துரையும் மட்டுமே உள்ளவை. இலக்குமண கவிராயர்

வழங்கிய சுவடியே மூலமும் கருத்துரையும் பழையவுரையும் பரிந்தளித்துப் பைந்தமிழை வளமாக்கியது.

இக்கவிராயர் குடும்பத்தின் ஏடுகளே திருக்கோவை யார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அல்லர்; பேராசிரியரே என்றும், தாமோதரனார் வெளியிட்ட தொல்காப்பியச் செய்யுளியல் முதலாய பின்னான்கியல் உரை நச்சினார்க்கினியர் உரையன்று பேராசிரியர் உரையே என்றும், பரிபாடல் உரையாசிரியர் பரிமேலழகர் என்றும் அறிந்து கொள்ளச் செய்தன.

இன்னொரு சிறப்பையும் குறிப்பிடவேண்டும். இக்கவிஞர் பெருமான் வீட்டில் மூவாயிரம் சுவடிகளுக்கு மேல் இருந்தன. அவை என்னென்ன சுவடிகள் என்பதற்கு அடங்கல் செய்து தனியே ஒரு சுவடியில் எழுதி வைத்திருந்தனர். நூலகக் கலையே தோன்றாத நாளிலேயே அவர்கள் கண்டிருந்த நுண்கலை இஃதன்றோ!

இலக்குமணகவிராயர் பண்பால் சிறந்தவர்; தொண் டால் உயர்ந்தவர். அவர் இல்லத்திலே பித்தராக விளங்கினார் டாக்டர் ஐயர்! "நிலா ஒளி நன்றாக வீசியது. அப்பொழுது லக்ஷ்மண கவிராயர் எதையோ தம் மேலாடையால் மறைத்துக்கொண்டு மிகவும் வேகமாக எங்களை நோக்கி வந்தார். திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று அவற்றை மறைத்துக் கொண்டு வருகிறார் என்று நான் நினைத்தேன். வந்தவர், 'இந்தப் புஸ்தகத்தைப் பாருங்கள். இந்த ஒன்று தான் என் மாமனாரிடம் இருக்கிறது; பார்த்துவிட்டுத் திருப்பி அனுப்பிவிடுவதாகச் சொல்லி வாங்கிவந்தேன்" என்று கூறி மேல் வஸ்திரத்தால் மூடியிருந்த சுவடியை எடுத்தார். அவர் என்னிடம் கொடுப்பதற்கு முன்பே ஆத்திரத்தால் நான் அதனைப் பிடுங்கினேன். மேலே கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து அந்த நிலவின் ஒளியிலேயே பிரித்தேன். சட்டென்று முல்லைப் பாட்டு என்ற பெயர் என் கண்ணிற்பட்டது. நிலவில் மலர்ந்த அம் முல்லையினால் என்

உள்ளம் மலர்ந்தது. எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையில்லை. மிகவும் விரைவாக முதலிலிருந்து திருப்பித் திருப்பிப் பார்த்தேன். ஆரம்பத்தில் திருமுருகாற்றுப்படை, அப்பால் பொருநராற்றுப்படை, அதன்பின் சிறுபாணாற்றுப் படை-இப்படி நெடுநல்வாடை முடிய ஏழுபாட்டுக்கள் இருந்தன. ஒவ்வோர் ஏட்டையும் புரட்டிப் புரட்டிப் பார்க்கையில் என்னையே மறந்துவிட்டேன். சந்தோஷ மிகுதியினால் அப்பொழுது என் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அருகில் இருந்தவர்களுக்குப் பொருள்பட்டிரா. அந்தச் சமயத்தில் மட்டும் என்னை யாரேனும் புதிதாகப் பார்த்திருந்தால் எனக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகவே கருதியிருப்பார். என்னுடைய மன உணர்ச்சி அவ்வளவு தீவிரமாக இருந்தது.'' என்பது அது.

## அ. தி. த. கனகசுந்தரம் பிள்ளை

இவர் இலங்கையிலுள்ள திரிகோணமலையில் பிறந்தவர். இவர் தந்தையார் தம்பிமுத்து என்பவர். இவர் சென்னைக் கிருத்தவக் கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவர் ஏடுகள் சிலவற்றைத் தொகுத்தலையும், படி யெடுத்துப் பாதுகாத்தலையும் கடமையாகக் கொண்டிருந் தார். இவர்தம் ஏடுகளுள் புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை என்பன டாக்டர் சாமிநாதையர் பதிப்ப களுக்குப் பயன்பட்டன. நற்றிணைச் சுவடிகள் இரண்டு பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்புக்குப் பயன்பட்டன. குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகியவற்றின் கடிதப் படிகள் சைவசித்தாந்த சமாசத்தின் சங்க இலக்கியப் பதிப்புக்குப் பயன்பட்டன. பதிப்பாசிரியராகத் தாமும் இருந்துகொண்டு பிறர் பதிப்புக்கு உள்ளார்ந்த அன்புடன் ஏடுகள் உதவிய இவர்தம் பண்புநலம் போற்றத் தக்கதாம். இத்தகைய நலம் வாய்த்தல் அருமையாம்.

## பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

நடமாடும் சுவடிச் சாலையாக விளங்கிய இப்புலவர் பெருமானை அறியாதவர் இரார். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுப் புலவர்கள் என்று விளங்கியவர்களுள் பெரும்பாலோர் இவர் வழங்கிய புலமைச் செல்வத்தை அள்ளிக் கொண்டவர்களே. பாவேந்தராகத் திகழ்ந்த இப்புலவர் பெருமான், பண்டையோர் ஏடுகளைப் படியெடுத்தலைப் பிறவிக் கடமையாகக் கொண்டு போற்றினார்.

கடல்போல் விரிந்த கம்பராமாயணத்தை ஒருவர் ஒருமுறை முழுமையாகப் படியெடுப்பதே அரிது. ஆனால் இவர் அதனை மூன்று முறை படியெடுத்துள்ளார்! ஏறத்தாழ 56000 பாடல்களைப் பாடிய இவர்தம் கையெழுத்து எத்தகையது! முத்துக் கோத்தாற் போல்வது!

பழைய தமிழ் நூல்களில் இவர் கையெழுத்தால் பயன்படுத்துவதற்கு அமைந்த சுவடிகள், தொல். எழுத்து. இளம்பூரணம், பத்துப்பாட்டு நச். உரை, சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லார் உரை, சிலப்பதிகாரம் மூலம், சிந்தாமணி நச். உரைச் சுவடிகள் இரண்டு ஆகியவை.

இவர் வழங்கிய ஏட்டுச் செல்வங்கள் இவையே. எனினும் இத்தமிழ் வழங்கு நிலமெல்லாம் வழங்கும் ஏடுகளையெல்லாம் தொகுத்து, இணையற்ற அச்சுப் பதிப்பாகக் கொணர்ந்த பெரும்பேராசிரியர் உ.வே. சாமிநாதையரைக் கொடையாக வழங்கிய புலவர்கோமான் இவராகலின் தமிழர் போற்றுதலுக்குரிய தமிழ்த்தெய்வமும் இவராவார்!

## பழந்தமிழ்ச் சுவடி உதவியவர்களும் -- சுவடிகளும்

| | |
|---|---|
| அண்ணாசாமிப் பிள்ளை, திரிசிரபுரம் | சிலப்.மூலம்; புறத்திரட்டு. |
| அப்பன் செட்டியார் சூ.சென்னை | சிலப்.அடியார்க். |
| அப்பாசாமி நயினார், வீடூர் | சிந்தா.நச். |

அப்பாசாமி பிள்ளை, சேலம் — சிந்தா. நச்.

அய்யாசாமி நயினார் கலவை — நீலகேசி - திரட்டு

இராதாகிருஷ்ணையர், புதுக்கோட்டை — குறுந்தொகை

இராசகோபாலாச்சாரியார்
சக்கரவர்த்தி, தேரழுந்தூர், — சிலப். அரும்.

எட்டையபுரம் - பெரிய அரண்மனை — மணிமேகலை

கருப்பையாத் தேவர், டொம்மிச்சேரி — நற்றிணை

கவிராச பண்டாரம், செங்கோட்டை — சிந்தா. நச்.

கனகசபைப் பிள்ளை, — புறம். மூலம்; பத்துப்
சிலப். அடியார்க் ; சிலப். மூலம்.

ம.வி.யாழ்ப்பாணம்
குமாரசாமி செட்டியார் — சிலப். அடியார்க்;
யாழ்ப்பாணம் — சிலப். மூலம்.
(கையெழுத்துப்படி) சிந்தா. நச்.

குமாரசாமி ஐயர், வேலூர் — பத்துப். நச்.

குமாரசாமிப் பிள்ளை, — புறம். உரை
தூத்துக்குடி — (இரண்டு சுவடிகள்)
சிலப். மூலம் : பத்துப். நச்.
சிந்தா. நச்.

குருசாமி ஐயர், — சிலப். அடியார்க். சிலப்
சென்னை. — (கையெழுத்துப் படி)
அரும்பத வுரை சில ஏடுகள்.

கைலாச பிள்ளை, சிற்-நல்லூர், — மணிமேகலை
யாழ்ப்பாணம்

கொண்டப்ப வாத்தியார் — திருக்குறள்

கோவிந்தசாமி ரெட்டியார், சீர்காழி — ஐங்குறுநூறு

சங்கர சுப்பிரமணிய தத்தசுவாமி
மந்தித் தோப்பு மடம் — குறுந்; புறம். மூலம்.

சபாபதி முதலியார்
அட்டாவதானம், சென்னை — சிந்தா. நச்.

சரவணப் பெருமாளையர், திருத்தணிகை — புறம்.
சாமி ஐயங்கார், சிதம்பரம் — சிலப். அடியார்க்.
சாமிநாத தேசிகர் - களக்காடு — பத்துப். மூலம் - உரைப்பிரதி சில.
சாமிநாதையர், அரியூர் — புறம். - மூலம்
சாலிவாடீசுவர ஓதுவார், திருநெல்வேலி — சிலப். அடியார்க், சிலப். மூலம் சிந்தாமணி,நச்.
சிதம்பரம் பிள்ளை, வ.உ. — தொல். இளம். பொருள்.
சிவகுருநாதன், திருவாரூர் — கலித்தொகை
சிவன் பிள்ளை, பொள்ளாச்சி — பத்துப். நச்.
சின்னசாமி பிள்ளை — சிந்தா. நச்.
சுந்தர மூர்த்திப் பிள்ளை, ஆறுமுகமங்கலம் — மணிமேகலை
சுப்பராய செட்டியார், சோடசாவதானம் — சிந்தா. நச்.; குறுந்.
சுப்பிரமணிய பிள்ளை, உடையூர் — சிந்தா. நச்.
சுப்பையா பிள்ளை, தென்காசி — புறம் - (மூன்று குறைச் சுவடிகள்) சிற்றட்டகம் (சில ஏடுகள்)
சுவாமிநாத பண்டிதர், யாழ்ப்பாணம் — புறம். - உரை
செங்கோல் மடம் — குறுந்தொகை
சோமசுந்தர் தேசிகர், இலக்கண விளக்கப் பரம்பரை — தொல். பொருள். நச்.
ஞானியார் மடம், திருப்பாதிரிப் புலியூர் — தொல் -பொருள் - நச். பேரா.
தருமலிங்க செட்டியார், சிதம்பரம் — சிந்தா. நச்.
தாமோதரம் பிள்ளை — புறம், சிந்தா. நச். சிலப். அடியார்க்.
தாய்வலந்தீர்த்த கவிராயர், ஆழ்வார் திருநகரி — புறம் - உரை; தொல் பொருள். செய் - நச். (சுவடி 2)
தியாகராச செட்டியார் -

| | |
|---|---|
| திரிசிரபுரம் | சிலப். - அடியார்க்; சிந்தா - நச். |
| துரைசாமி முதலியார் எம்.பி.எஸ்., | முருகு. மூலம் |
| தேவர்பிரான் கவிராயர், ஆழ்வார் திரு நகரி | பத்துப். |
| நமச்சிவாய முதலியார் - கா-ரா. | |
| சென்னை, | பத்துப் (கூடிதப் பிரதி) |
| பச்சையப்ப வாத்தியார் | சிந்தா. நச். சிந்தா. மூலம் - |
| பார்சுவநாத நயினார் | மணிமேகலை சுவடி 2 |
| பெரிய திருவடிக் கவிராயர், | |
| ஆழ்வார் திருநகரி | சிலப். (கையெழுத்துப்படி) |
| | தொல் - பொருள் - |
| | நச். பேரா - |
| பொன்னுசாமித் தேவர், இராமநாதபுரம் | சிந்தா. - மூலம். |
| மகாலிங்கையர், மழவை, சென்னை | சிந்தா. நச். |
| மருதமுத்து உபாத்தியாயர், தஞ்சை | சிந்தா, நச். |
| முத்துகிருஷ்ண வாத்தியார், கடையநல்லூர் | சிந்தா. நச். |
| முத்துக் குமாரசாமி முதலியார், சென்னை | மணிமேகலை |
| முத்தையா செட்டியார், சிவ.மு.மு., புதுப்பட்டி | நற்றிணை |
| வானமாமலைத் தாதர் (கணக்கு), நான்குனேரி | சிந்தா - நச். |
| விசயபால நயினார், கூடலூர் | சிந்தா. நச். |
| விருஷபதாச முதலியார் சிந்தா. நச். | |
| வேலாயுத முதலியார், தொழுவூர், | |
| சென்னை | சிலப். அடியார்க் - குறுந். |
| வேலுப்பிள்ளை ஜே.எம். | பதிற்; ஐங்குறும் - |
| | மூலமும் கருத்துரையும். |

இவ் வேடுகள் அல்லாமல் வேறு பல ஏடுகளும் பதிப்பாளர்களுக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவற்றைப் பறறிய விளக்கங்கள் கிடையாமையால் கிடைத்த அளவில் குறிப்பிடப் பெற்றுள்ளன. இப்பட்டியல் முழுமையானது எனக் கொள்ளுதல் கூடாது என்று கருதியே இதனைக் குறிப்பிடலாயிற்று.

இவ்வரிசையுள் இரண்டு சுவடிகளைக் குறிப்பிடல் இன்றியமையாதது. அவ்விரண்டும் தனிச் சிறப்பு வாய்ந் தவை. ஒன்று களக்காடு சாமிநாத தேசிகர் வழங்கிய பத்துப் பாட்டு மூலச் சுவடி. அதற்கு முன் மூலச் சுவடி பத்துப் பாட்டுக்குக் கிடைக்கவில்லை. அதனைப் பெற்ற மகிழ்வில் ஐயர் எழுதுகின்றார் - "பத்துப் பாட்டு மூலம் முழுவதும் அடங்கிய பழைய பிரதி அங்கே கிடைத்தது. ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். இதற்காக நான் எவ்வளவு அலைந்திருக்கிறேன். முன்பே கிடைத்திருந்தால் எவ்வளவு அனுகூலமாக இருந்திருக்கும்! இரண்டாவது பதிப்புக்கு இதை உபயோகித்துக் கொள்வேன்! என்று கூறி அதைப் பெற்றுக் கொண்டேன்." கூறியவாறே இரண்டாம் பதிப் பிற்குக் களக்காட்டுச் சுவடியைப் பயன்படுத்திக் கொண்டார். பத்துப்பாட்டுக்கு ஒரே முழு மூலச் சுவடியாகத் தமிழ் உலகுக்குக் கிடைத்தது களக்காட்டுச் சுவடியே எனின் அதன் பெருமை அளப்பரியது தானே!

மற்றொரு சுவடி சிலப்பதிகார அரும்பதவுரைச் சுவடியாகும். அதனை வழங்கியவர் தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார். இச் சுவடியொன்றே அரும் பதவுரைக்குக் கிடைத்தது. பின்னே சரவணப் பெருமாளையர் கொள்பேரர் குருசாமி ஐயர் வீட்டில் அரும்பதவுரையின் பத்து ஒற்றையேடுகள் மட்டுமே கிடைத்தன. ஆதலால் சிலப்பதிகார அரும்பதவுரை என்னும் அருமையான உரை நமக்குக் கிடைக்க உதவியவர் தேரழுந்தூராரே: இருக்கும் ஒன்றைக் கொடுப்பதும் உயர்ந்ததே எனினும், பத்தொடு பதினொன்றாகவே எண்ணப் பெறும்! ஒன்றே ஒன்று எனின் 'கண்ணே கண்' என்று போற்றப்பெறும் அன்றோ!

# 4. ஏடு தொகுத்த ஏந்தல்கள்

புலவர்களின் வீட்டுப் பரணையில் கிடந்த ஏடுகள், அவ்வாறே கிடந்து அழிந்துபடாமல் காத்த பெருமைக் குரியவர்கள் 'ஏடு தொகுத்த ஏந்தல்கள்' என்னும் இப்பகுதியில் இடம் பெறுகின்றனர்.

புவிவேந்தராகவும், கவிவேந்தராகவும் திகழ்ந்த சேது பதிகளால் நூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் போற் றிக்காக்கப்பட்டனர். அவர்கள் பாடிய நூல்கள் தனிப் பட்டியல் இட்டுக் காட்டும் தகைமையன. சேதுவேந்தர்கள் வளமனை ஏடுகள் நிரம்பக் கொண்ட திருமனையாகத் திகழ்ந் தது. தமிழ்ச் சங்கம் மதுரையில் தோற்றுவிக்கும் முன்னரே சேது அரண்மனையில் மிகுதியாகச் சுவடிகள் இருந்துள்ளன.

சிவகங்கைக் குறுநில மன்னரும் செந்தமிழ் வளர்த் தவர்கள் ஆவர். மங்காப் புகழ்கொண்ட மருது பாண்டியர் அவையில் 21 புலவர்கள் இருந்தனர் என்பர். பலப்பல தனிப்பாடல்களும், நூல்களும் இயற்றினர். அரிய சுவடி களையும் தொகுத்துப் போற்றினர்.

எட்டையபுரம் குறுநில மன்னர்கள் தமிழ்மொழிக்குச் செய்துள்ள தொண்டு மிகப் பெரியதாகும். கடிகை முத்துப் புலவர் முதலாகப் பல புலவர்களைப் புரந்து பாமாலை சூடிக் கொண்டுள்ளனர். பாரதியார் தொடர்பு பாரறிந்த செய்தி. அவர்கள் வளமனையிலும் ஏடுகள் பல தொகுக்கப் பெற்றிருந்தன.

'சேறை' எனப்பெறும் சேற்றூரின் மன்னர்கள் நிலப்பரப்புச் சிறிதே எனினும், புலப்பரப்புப் பெரிதாக இலங்கினர். 'ஒரு குடியில் ஏழு புலவர்' என ஏற்றம் பெற்ற முகவூர்க் கவிராயர்களையும், எண்ணற்ற பிற புலவர்களையும் தாங்கித் தாமும் அவைக்களப் புலவருள் ஒருவராக வீற்றிருந்து பாடுபுகழ் பெற்றனர்.

இன்னும் சிவகிரி, சொக்கம்பட்டி, ஊற்றுமலைக் குறுநில மன்னர்களும், வரதுங்கராம பாண்டியர், அதி வீரராம பாண்டியர், வடமலையப்ப பிள்ளையன் ஆகியோ ரும் ஏடு தொகுத்து வைத்தவர்களே ஆவர. ஆயினும் இவர்கள் தொகுத்துவைத்த ஏடுகளுள் பெரும்பாலான பிற்காலச் சிறுநூல்களும், அவர்களைப்பற்றிப் பல்வேறு புலவர்கள் பாடிய நூல்களுமே இருந்தன. அரிதாகவே அரிய நூல்கள் இருந்தன.

சைவ மடங்களுள் திருவாவடுதுறைக்குத் தனிப் பெருமையுண்டு. இம்மடத்தில் இருந்த சுவடிகள் ஆயிரக் கணக்கின. அவற்றுள் வளையாபதியும் ஒரு காலத்தே இருந் திருக்கக் கண்டிருக்கிறார் சாமிநாதையர். ஆனால் பின் னாளில் ஏடு தேடுங்கால் அகப்படாது போயிற்று. அக நானூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரி பாடல், ஐங்குறுநூறு, புறநானூறு, சிந்தாமணி, சிலப் பதிகாரம், மணிமேகலை, நன்னூல் சங்கர நமச்சிவாயருரை முதலியன - ஆங்குக் கிடைத்துள்ள சுவடிகளாகும். மற்றைப் பிற்காலச் சுவடிகளாகக் கிடைத்தவை எண்ணற்றவை. இவர் கள், ஐயர் பதிப்புக்குத் தேடிக் கொடுத்த அரிய சுவடிகளும் பலவாகும்.

தருமபுர மடமும் பழஞ்சுவடிகளைப் போற்றிக் காத்த இடமேயாகும். "ஆயிரக் கணக்கான ஏட்டுச் சுவடிகள் இருந்தன"...... எல்லாம் பழைய ஏடுகளே. புதிதாக எழுதப் பட்ட ஏடு ஒன்றேனும் அதில் காணப்படவில்லை!"

இந்தச் சுவடிகளிலும் பத்துப் பாட்டின் சுவடி இல்லை. ஆனால் பதினெட்டாம் பெருக்கில் விடுதற்கு அள்ளிக் கொண்டு போனவற்றிலிருந்து சில சிதறல் ஏடுகளை எடுத்துச் சுவாமிநாதத் தம்பிரான் என்பார் கட்டி வைத்திருந்தார். அந்த ஏடுகளுள் ஒன்றிலே பத்துப் பாட்டில் அகப்படாத பகுதி எதுவோ அது கிடைத்தது. குறிஞ்சிப்பாட்டில் வந்துள்ள பூக்கள் 99. அவற்றுள் உதிர்ந்து போயவை மூன்றே மூன்றாக

இருந்தால் என்ன? முப்பதாக இருந்தால் என்ன? குறை குறை தானே! குறை நீக்கிய நிறையேடாகிய ஒற்றையேட்டைக் குறிக்கிறார் உ.வே.சா. "இழந்த குழந்தையைக் கண்டெடுத்த தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியைத் தான் நான் அதற்கு உவமையாகக் கூறலாம்".[1]

இழந்த குழந்தையைத் தேடிக் கண்டுகொள்ள உதவிய தருமபுர ஆதீனம், சிந்தாமணிச் சுவடிகள் 2, பரிபாடல் (இரண்டு ஒற்றை ஏடுகள்), தக்கயாகப் பரணி உரை ஆகியவற்றையும் வழங்கியது. தக்கயாகப் பரணி - உரை தருமபுரத்திற்குத் தனிச்சிறப்புத் தருவதாம். ஏனெனில் அவ்வுரைச் சுவடி அவ்வொன்றேயாம்.

குமரகுருபர அடிகளால் தோற்றுவிக்கப் பெற்ற பெருமையுடையது திருப்பனந்தாள் மடம். மற்றும் காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், மதுரைத் திருஞான சம்பந்தர் மடம், நெல்லைச் செங்கோல் மடம், திருக்கோவலூர் ஞானியார் மடம் ஆகியனவும், குடந்தை, சிதம்பரம், திருவண்ணாமலை, துறையூர், மயிலம் முதலாய இடங்களில் உள்ள வீர சைவ மடங்களும் ஏடுகள் தொகுத்தும் வெளியீடுகள் புரிந்தும் தமிழ்த் தொண்டு செய்துள்ளன.

இனி ஏடுகள் தொகுத்தலையும், ஆராய்தலையும், நூல் வெளியிடுதலையுமே நோக்கமாகக் கொண்டு தொடங்கிய சில அமைப்புகளும் உள்ளன. அவ்வமைப்புகளுள் சென்னை 'அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையம்' , தஞ்சை 'சரசுவதி மால் நூல் நிலையம்', 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' என்பவை தனிச் சிறப்பு வாய்ந்தன.

கர்னல் காலின் மெக்கன்சி என்பார் 'காத்லாந்து' நாட்டினர். அவர் 1753ஆம் ஆண்டில் பிறந்தார். தமக்குப் பத்தொன்பதாம் அகவை நடக்கும் போது அதாவது 1772 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தில் பொறியியல் துறையில் அலுவல் பெற்று இந்தியாவுக்கு வந்தார். வரும் போதே ஒரு நோக்கத்தைக் கொண்டும் வந்தார்.

---
1. உதிர்ந்த மலர்கள் டாக்டர். உ.வே.சா.

இங்கிலாந்தில் இருந்து நேப்பியர் பெருமகனார் ஒரு நூல் இயற்றினார். அந்நூல் அவர் தம் முதுதையராகிய 'சான் நேப்பியர்' வரலாற்று நூலாகும். சான் நேப்பியர் கணக்கில் பேரறிஞர்; இந்திய நாடு கணக்குத் துறையில் மேம்பட்ட நாடு என்பதை அறிந்திருந்தார். ஆதலால் இந்திய நாட்டில் கணக்கியல் தொடர்பான சில ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தொகுத்து அனுப்புமாறு மெக்கன்சிக்கு அறிவுறுத்தியிருந்தார். நேப்பியர் பெருமகனார் விருப்பை நிறைவேற்றுவதில் பேரார்வம் கொண்டார் மெக்கன்சி. ஏனெனில் அவர்தம் தொடர்பே அவ்வளவு பெருமைக் குரியதாக மதிக்கப் பெற்றது.

மெக்கன்சி 1818ஆம் ஆண்டுவரை தென்னாட்டில் இருந்தார். சில ஆண்டுகள் இலங்கைக்கும், சாவாவுக்கும் சென்றிருந்தது தவிர்த்து, ஏறத்தாழ 31 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். பின்னர், 'இந்தியாவின் சர்வேயர் செனரல்' என்னும் பதவி உயர்வு பெற்றுக் கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே தாம் தொகுத்த ஏட்டுச சுவடிகளையும் கல்வெட்டுப் படிகளையும் கொண்டு சென்றார். அவற்றை முறைப்படுத்திப் பட்டியற் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அங்கு சென்ற மூன்றாண்டுகளில் அதாவது 1821 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

செயற்கரிய செய்த இப் பெருமகனார் தொகுப்புகளை நாடு அறிந்திருந்தது. ஆட்சியாளரும் அறிந்திருந்தனர். அவற்றின் அருமை பெருமைகளையும் உணர்ந்திருந்தனர். அவர் தேடிவைத்த நயத்தகு செல்வம் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என அந்நாள் அரசப் பேராளர் ஹேஸ்டிங்ஸ் எண்ணினார். கிழக்கிந்தியக் குழுமத்தின் இயக்குநர்களின் இசைவைப் பெற்று மெக்கன்சி அவர்களின் மனைவியாரிடம் பதினாயிரம் பொன் (பவுன்) விலை கொடுத்து வாங்கினார். அத்தொகுப்பில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, அரபி, பாரசீகம், வடமொழி ஆகிய மொழிகளில்

சுவடிகள் இருந்தன. இச்சுவடிகள் கல்கத்தாவில் இருந்த ஆசிய சங்கத்தாரிடம் ஒப்படைக்கப் பெற்றன. இவற்றுக்கு அறிஞர் எச்.எச்.வில்சன் என்பார் ஒரு பட்டியல் அமைக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப் பெற்றார். பின்னர்த் தென்னிந்திய எழுத்துக்களில் உள்ள சுவடிகள் 1828-ஆம் ஆண்டில் சென்னைக் கல்விச்சங்கம் என்னும் சங்கத்திற்கு அனுப்பப் பெற்றன.

பயனுள்ள சுவடிகள் வந்தும் படுத்துறங்கின. ஆதலால் கல்விச் சங்கத்தில் உள்ள ஏடுகளைத் தம்மிடம் தந்துதவுமாறு சென்னை இலக்கியச் சங்கத்தினர் வேண்டினர். அரசும் அதனை ஏற்றுக் கொண்டு 1830 ஆம் ஆண்டு மெக்கன்சியின் சுவடிகளை வழங்கியது. அதன் பின்னர்க் கல்விச்சங்கத்தின் சுவடித் தொகுப்பு, டாக்டர் லைடன் என்பார் தொகுத்து இங்கிலாந்தில் இருந்த சுவடித் தொகுப்பு, சென்னைக் கல்விச் சங்கத்தின் தொகுப்பு,[1] இலக்கியச்சங்கத்தின் தொகுப்பு ஆகியன வெல்லாம் மெக்கன்சியின் தொகுப்புடன் இணைக் கப்பெற்றன. எல்லாமும் மீண்டும் சென்னைக் கல்விச் சங்கத்துக்கே தரப் பெற்றன. இந் நிலையில் 1858 ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்பார் விளக்கமான ஒரு பட்டியல் எழுதினார். பிறகு சென்னை மாநிலக் கல்லூரி நூல் நிலையத்துடனே இணைக்கப் பெற்றது. இந் நூல் நிலையம் "அரசினர் கீழை நாட்டுக் கையெழுத்து நூல் நிலையம்" எனப் பெற்றது. சுருக்கமாக 'அரசினர் ஓலைச் சுவடி நூல் நிலையம்' என் றும் வழங்கப் பெறும்.

ஓலைச் சுவடி நூல் நிலையம் ஆங்குள்ள சுவடிகளுக்கு விளக்கப பட்டியல் வெளியிட்டுள்ளது; நூல்களுக்குப் படியெடுக்கும் பணியும் செய்கின்றது; ஆராய்வார்க்குச் சுவடிகள் வழங்கியும் உதவுகின்றது; அவ்வப்போது சில நூல்களையும் அச்சிடுகின்றது.

சௌரிப்பெருமாளரங்கனாரின் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் நற்றிணைப்

1. 19ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம்

பதிப்பு, டாக்டர் சாமிநாதையரின் மணிமேகலை, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, குறுந்தொகைப் பதிப்புகள், வையாபுரிப் பிள்ளையின் சங்கஇலக்கியப் பதிப்பு (சை.சி.சமாசம்) முதலியவற்றுக்குச் சுவடி வழங்கியுள்ளது.

ஆங்குள்ள தொல்காப்பியம், பாட்டு, தொகை முதலியவையுள்ள சுவடிகள் எண்ணிக்கையைக் குறிப்போம். இவை சிதைவாகாதவை என்றோ, முற்றும் உள்ளவை என்றோ கொள்ள வேண்டா. அரைகுறையானவையும், சிதைவானவையும் உண்டு. முற்றும் உள்ளவையும் உண்டு. இக்குறிப்பு மேலே வரும் அமைப்புக்களிலுள்ள சுவடிகளுக்கும் பொருந்தும்.

| | | |
|---|---|---|
| பொருநராற்றுப் படை | சுவடி | 1 |
| சிறுபாணாற்றுப்படை | சுவடி | 1 |
| பெரும்பாணாற்றுப்படை | சுவடி | 1 |
| முல்லைப்பாட்டு | சுவடி | 1 |
| மதுரைக் காஞ்சி | சுவடி | 1 |
| பட்டினப் பாலை | சுவடி | 1 |
| மலைபடு கடாம் | சுவடி | 1 |
| நற்றிணை | சுவடி | 1 |
| குறுந்தொகை | சுவடி | 1 |
| ஐங்குறுநூறு | சுவடிகள் | 2 |
| பதிற்றுப்பத்து | சுவடிகள் | 3 |
| கலித்தொகை | சுவடிகள் | 4 |
| அகநானூறு | சுவடி | 1 |
| புறநானூறு | சுவடி | 1 |
| சிலப்பதிகாரம் | சுவடிகள் | 2 |
| மணிமேகலை | சுவடிகள் | 2 |
| சிந்தாமணி | சுவடிகள் | 6 |
| சூளாமணி | சுவடி | 1 |
| திருக்குறள் | சுவடிகள் | 17 |

இலக்கண, இலக்கிய, இதிகாச, புராண, சமய தத்துவ நூற் சுவடிகளாக 1867 எண்ணிக்கை ஓலைச்சுவடி நூல் நிலையத்தில் உள்ளன.[1]

## தஞ்சைச் சரபோசி மன்னர் சரசுவதி மால் நூல்நிலையம்

மராத்திய மன்னர் சிவாசியின் வழிமுறையில் வந்தவர்கள் தஞ்சைப் பகுதியை கி.பி.1676 முதல் 1855 வரையிலும் ஆட்சி செய்துள்ளனர். அவ்வேந்தர்களுள் ஒருவர் சரபோசி மன்னர். சரபோசி கலைச்செல்வர்; பன்மொழிப் புலமையாளர்; அறம் பேணும் ஆர்வலர். அவர் தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தை நிறுவியவர்.

சரசுவதி மால் நூல்நிலையத்தில் பல்வேறு மொழி நூல் சுவடிகளும், கலைநூல் சுவடிகளும் பல்லாயிரம் உள்ளன. ஆனால் பழந்தமிழ்ச் சுவடிகள் ஆங்கே விரல்விட்டு எண்ணக் கூடியனவாகவே உள்ளன. எவ்வளவுதான் ஆர்வங் கொண்டாலும் எவ்வளவுதான் செலவிட்டாலும் அவ்வத் துறையில் புலமை மிக்கார்க்கே அவ்வவற்றின் அருமை புலப்படுவதாம்! டாக்டர் சாமிநாதையர் நூல் நிலையச் செல்வங்கள் 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி போல்' சேர்க்கப் பெற்றவை! அதன் மாண்பு அப்பெருமகனார் கொண்டிருந்த

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்னும் கொள்கை மாண்பு!

சரசுவதி மால் நூல்நிலையத்தில் இருக்கும் பழந்தமிழ்ச் சுவடிகளாக அறியப் பெறுவன வருமாறு:

தொல்காப்பியச் சுவடிகள் 8 (மூலம் முழுமையானது ஒன்றே; எஞ்சியவை சிதைவுகளும், குறைச்சுவடிகளுமேயாம்), திருமுருகாற்றுப்படைசுவடி 2, சிலப்பதிகாரச் சுவடி 1,

---

1. Descriptive Catalogues Vol I to IV

சிந்தாமணிச் சுவடி 8, திருக்குறள் சுவடி 9, நாலடியார் உரைவளம், இலக்கண விளக்கம் முதலாக இப்பொழுது வெளிவரும் நூல்கள் பயன்மிக்கன. நூல் நிலையத்தைப் போற்றும் மாண்பு எடுத்துக் காட்டாக இலங்குகின்றது! அதனுள்ளே நுழைந்ததும் சரபோசியின் மேதகைமை கண்டாரை வயப்படுத்திக் கட்டுண்ணச் செய்தல் ஒருதலை.

### மதுரைத் தமிழ்ச்சங்கம்

1901 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கியது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை முதலியனவும் சங்கச் சார்பில் தனித்தனியே தொடங்கப் பெற்றன.

செந்தமிழ் முதல் இதழிலேயே ஐந்திணை ஐம்பதும், நேமிநாதமும் ஆய்ந்து வெளிவரத் தொடங்கின. கல்வெட்டு, வரலாறு இவற்றின் களஞ்சியமாகச் செந்தமிழ்த் தொகுதிகள் விளங்கின. ஆராய்ச்சிக் கருவூலம் என்னுமாறு அரிய கட்டுரைகள் வெளிப்பட்டன.

சௌரிப்பெருமாள் அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஔவை சு.துரைசாமி பிள்ளை ஆகியவர்களின் நற்றிணைப் பதிப்பு, டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் புறநானூற்றுப்பதிப்பு, கம்பர்விலாசம் அ.இராசகோபாலையங்கார் அகநானூற்றுப் பதிப்பு சைவசித்தாந்த சமாசத்தின் சங்கஇலக்கியப் பதிப்பு ஆகியவற்றுக்கும் பிறவற்றுக்கும் மதுரைச்சங்கச் சுவடிகள் பயன்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கில் இருந்த ஏட்டுச் சுவடிகளில் இப்பொழுது 207 சுவடிகளே உள்ளன. அவற்றுள் தொல்காப்பியச் சுவடிகள் 6. மற்றவை பிற்காலத் தவை. அவை:

| | | |
|---|---|---|
| நன்னூல் | சுவடிகள் | 6 |
| இறையனார் களவியல் | சுவடிகள் | 7 |

| | | |
|---|---|---|
| புறப்பொருள் வெண்பாமாலை | சுவடி | 1 |
| இலக்கணவிளக்கம் | சுவடிகள் | 3 |
| வீரசோழியம் | சுவடி | 1 |
| நேமிநாதம் | சுவடிகள் | 2 |
| யாப்பருங்கலக் காரிகை | சுவடி | 1 |
| தண்டியலங்காரம் | சுவடி | 1 |
| திருக்குறள் | சுவடிகள் | 4 |
| நாலடியார் பதுமனார் உரை | சுவடிகள் | 4 |
| இராமாயணம் | சுவடிகள் | 9 |

எஞ்சியவை பல்வேறு நிகண்டுகள், பாட்டியல்கள், புராணங்கள், மருத்துவ, சமய நூல் சுவடிகள் ஆகும்.

ஏடுகள் தொகுத்த இம்மூன்று அமைப்புகளை அல்லாமல் தனிப்பட்ட சிலரும் ஆராய்ச்சி நோக்கில் தொகுப்பதையும் படிஎடுப்பதையும் இனியபொழுது போக்காகக் கொண்டிருந்தனர். அவர்களுள் அய்யம்பேட்டை முத்துரத்தின முதலியார், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை, காவல்துறை ஆணையர் பவானந்தம் பிள்ளை, சேலம் இராமசாமி முதலியார் ஆகிய பெருமக்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

# 5. பழந்தமிழ்ப் பதிப்பாளர்கள்

இவ்வரிசையில் இடம் பெறத்தக்கார் பலராவர். எனினும் ஒரு நால்வர் இவண் குறிக்கப்பெறுகின்றனர்.

"பழந்தமிழ் இலக்கிய வெளியீடுகளுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர்: சுவர் எழுப்பியவர் தாமோதரப்பிள்ளை; கூரைவேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்"[1] என்று திரு.வி.க.வினால் குறிப்பிட்ப் பெறும் மூவரே ஆவர்.

## ஆறுமுக நாவலர்

நாவலர் கி.பி. 1822இல் பிறந்தார். இவர் தந்தையார் கந்தப்பபிள்ளை. ஊர் ஈழத்தைச்சேர்ந்த நல்லூர். நாவலர் சமயநூல்கள் இலக்கணநூல்கள், பாடநூல்கள் எனப் பலவகையில் பதிப்பித்துள்ளார். அவற்றுள் பழந்தமிழ் வளமெல்லாம் ஒருங்கு செறிந்த திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாம். அதனை இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர் வேண்டுகோளின்படி துன்மதி ஞூ வைகாசி மீ பதிப்பித்து உள்ளார். அதற்குத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, சி. தியாகராசச் செட்டியார், ச. தெய்வநாயகம் பிள்ளை, சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

தொல்காப்பியம், திருக்குறள், பெரியபுராணம் முதலிய அவர் பதிப்புக்களின் பக்க எண், பாடல் எண், தலைப்பு எண் ஆகிய எல்லாமும் தமிழ் எண்ணாகவே இருத்தல் ஒரு தனிச் சிறப்பாகும். தொல்காப்பியம் சேனாவரையர் உரை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை, திருக்கோவையார் பேராசிரியர் உரை என்பனவும் நாவலரின் பதிப்பால் வெளிப்பட்டன.

1. வாழ்க்கைக் குறிப்புகள் பக். 160

இவற்றுள் இவராய்ந்த தொல்காப்பியம் சேனா வரையர் உரை அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்றது. சேனாவரையத்தின் முதற்பதிப்பு அதுவேயாகும். ஆனால் அதே 1868ஆம் ஆண்டிலேயே கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையாலும் தொல். சேனாவரையம் வெளியிடப்பெற்றது. இரண்டிற்கும் இடைப் பட்ட திங்கள் ஒன்றேயாம்.

நாவலர் பதிப்பில் அடிக்குறிப்புகள் மிக அரியவை. "இருள்சேர் இருவினை" என்னும் திருக்குறள் உரையின் அடிக்குறிப்பாக, "ஈண்டு நல்வினை என்றது அழிதன் மாலையவாய துறக்கவின்ப முதலிய காமியங்களைப் பயப்பனவாகிய வேள்வி முதலியவற்றை. இவை வீட்டுக்கு நேரே வாயிலாகிய தத்துவ ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாது தடைசெய்து நிற்றலுமுடையனவாம். ஆதலால், இந் நல்வினை தீவினை இரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்த முறுத்தற்கண் பொன்விலங்கும் இரும்பு விலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாம் என்க. சரியை, கிரியை, யோகங்கள் ஞானம் வாயிலாக வீடு பயத்தலின் ஈண்டு நல்வினை என்றது அவற்றையன்றென்க" என்று விளக்கம் வரைகின்றார். இது பொருள் விளக்கம்.

'பழியஞ்சி' என்பதற்குப் பரிமேலழகர் பழியையஞ்சி என உரை விரிப்பதற்கு, 'பழியஞ்சி என்பதனைப் பழியையஞ்சி பழியினஞ்சி என விரிக்கலாம் என்பது 'அச்சக்கிளவிக் கைந்துமிரண்டும்' எச்சம் இலவே பொருள் வயினான' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறிக என்கிறார். இஃதிலக்கண விளக்கம்.

'எந்நன்றி கொன்றார்க்கும்' என்னும் திருக்குறள் உரை விளக்கத்தில் "பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுத்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல்"

என்று பரிமேலழகர் எழுதுவது புறநானூற்றுப் பாடலை அடியொற்றியது என்பதை அறியச் செய்வதுடன் அப்பாடலையும் எடுத்துக் காட்டுகிறார். அது வருமாறு:

*"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்*
*மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்*
குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கில் கழுவாயும் உளவே
*நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்*
*செய்தி கொன்றார்க்குய்தி யில்லென்*
*றறம்பா டின்றே ஆயிழை கணவ"* *(புறம்.34)*

இதில் வரும் தடித்த எழுத்திலுள்ள ஈரடிகளும், "பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும். வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென," என்றே சாமிநாதையர் புறநானூற்றுப் பதிப்பிலும், வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பிலும் உள்ளன. பாடவேறுபாடாகக் கூடக்காட்டப்பெற்றில. இஃதாய்ந்து கொள்ளத்தக்க திருத்தமாம்! பரிமேலழகர்காலத்திற்கு முன்னமே இப்பாடம் அமைந்துவிட்டது.

## சி.வை. தாமோதரம் பிள்ளை

தாமோதரம் பிள்ளை ஈழத்திலுள்ள சிறுப்பிட்டி என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தந்தையார் வைரவநாத பிள்ளை; தாயார் பெருந்தேவியம்மாள். இவர் பிறந்தநாள் கி.பி. 1832 செப்டம்பர் 12.

தாமோதரனாரின் தமிழ்நூற் பதிப்புக் காதல் இவ்வளவு அவ்வளவு அன்று. நாட்டிலுள்ள ஏடுகளையெல்லாம் ஒருங்கே தொகுத்தல் வேண்டும்; அனைத்தையும் அச்சிட்டு விடவேண்டும்; தமிழறிந்தோர் கைகளில்எல்லாம் அவை தவழவேண்டும்; நல்லோர் உள்ளத்தெல்லாம் தமிழ்ப்பற்று களிநடம் புரிய வேண்டும். இருக்கும் நூல்களில்

எவ்வொன்றேனும் இறந்துபட்டுவிடுதல் ஆகாது! உழைப்பு! உழைப்பு! அயரா உழைப்பு! என்று காற்றாடி எனச் சுழன்று கடமையாற்றினார்.

"பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்துபோகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப் பெற்ற வித்வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கிறாளில்லை. திருவுடையீர்! நும் கருணை இந்நாள் தவறினல் பின்பு தவம் புரிந்தாலும் ஒரு தரம் அழிந்த தமிழ்நூல்களை மீட்டல் அரிது. யானைவாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது? காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின்தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமும் தான் மீறும். அரைக் காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுள் சில இப்போது தானும் கிடைப்பது சமுசயம். முப்பால் அப்பாலாய்விட்டது. என் காலத்தில் யான் பார்க்கப் பெற்ற ஐங்குறுநூறு இப்பொழுது தேசங்கள் தோறும் தேடியும் அகப்பட்டிலது. எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் கலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா! ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கினும் மனம் தளம்புகின்றதே. தமிழ் மாது நும் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்ன? என்று வாளா இருக்கின்றீர்களா?"

இப்பகுதியில் தாமோதரனார் ஆர்வமும் கடமை உணர்வும் நன்கனம் வெளிப்படும். தாமோதரனார் பதிப்புத் துறையில் ஈடுபட்ட காலநிலை எத்தகையது? இதனை மற்றொரு பதிப்பாசிரியராகிய பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அருமையாக விளக்குகின்றார்.

"ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவ சமய நூல்கள், குறள், பாரதம் வெளியிடுவதோடு அமைந்து விட்டார்கள்.

வித்துவான் தாண்டவராய முதலியார் திவாகரம் முதலிய நூல்களையும் பள்ளி மாணவர்களுக்கு வேண்டும் வசன நூல்களையும் அச்சியற்றுவதில் ஒடுங்கிவிட்டார்கள். மழவை மகாலிங்கையர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வேறுசில நூல்களையும் வெளியிட்டு அத்துடன் நின்று விட்டார்கள். களத்தூர் வேதகிரி முதலியார் நாலடி, நைடதம் முதலிய நூல்களை வெளியிட்டு அவ்வளவில் திருப்தியுற்றார்கள். திருத்தணிகை விசாகப்பெருமாளையர் முதலியோர் குறளுக்குத் தெளிபொருள், பிரபுலிங்க லீலை, சூடாமணி நிகண்டு முதலியவற்றைப் பிரசுரித்து அவ்வளவில் தங்கள் முயற்சியைச் சுருக்கிக்கொண்டார்கள். திருவேங்கட முதலியார், இராசகோபாலப் பிள்ளை முதலானவர்கள் இராமாயணம் வெளியிடுவதிலும், நாலடி முதலியன பதிப்பித்தலிலும் ஈடுபட்டு நின்றனர். ஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயரவர்கள் அப்பொழுதுதான் சீவகசிந்தாமணிப் பதிப்பு முயற்சியில் போராடிக்கொண்டிருந்தார்கள். ஆகவே நமது பிள்ளையவர்கள் தன்னந் தனியாய்ப் பண்டைத் தமிழ்ச் செல்வப் புதையலைத் தமிழ்மக்களுக்கு அகழ்ந்தெடுத்து உதவும் பெருமுயற்சியை மேற்கொண்டனர்.[1]

தாமோதரனாரை "எமக்கு நீர் தாமோ-தரர்" என்று இடித்தாரும், அவர் எழுதும் பதிப்புரையைப் பதிப்-புரை" எனப் பிரித்துப் பொருள்கொண்டாரும், "நும் குழறுபடை விரிப்பிற் சாலப் பெருகும்"[2] என இகழ்ந்தாரும், இவற்றை யெல்லாம் வாயளவில் ஒழியாமல் அச்சிட்டு நிலைப் படுத்தினாரும் இருந்தனர். இவ்விடிபாட்டுக்கு இடையேதான் தாமோதரனார் தமிழ்ப்பணி இயற்றினார்.

தாமோதரனார் நீதிநெறி விளக்கம், வீரசோழியம், தணிகைப்புராணம், இலக்கணவிளக்கம், சூளாமணி, கலித் தொகை, தொல்காப்பியம் ஆகியவற்றை வெளியிட்டார்.

1. தமிழ்ச் சுடர் மணிகள் பக். 233– 34
2. திராவிடப் பிரகாசிகை பக். 31 – 46

தொல்காப்பியத்தை முற்றும் பதிப்பித்த பெருமை இவருக்கே உண்டு.

தாமோதரனார் பதிப்புப்பணியில் உள்ளந் தோய்ந்து திரு.வி.க. உரைத்ததை முன்னே கண்டோம். சைவ சித்தாந்த சமாசம் சங்கஇலக்கியப் பதிப்பை அடக்கவிலையில் வெளியிட்டது; அதன் வெளியீட்டுச் செலவை ஏற்றுக் கொண்டவர் சைவ இளைஞர் நாராயணசாமி. அவர் அப்பதிப்பைத் திரு வி.க.வின் நினைவுக் குறியாக்க விழைந்து வேண்டினார். "உம் தந்தையர் நினைவுக்கோ தாமோதரம் பிள்ளை நினைவுக்கோ பதிப்பை அர்ப்பணஞ் செய்யுங்கள்" என்று திரு.வி.க. கூறினார். தாமோதரம் பிள்ளையைத் திரு.வி.க. மதித்த மதிப்பின் சான்று இது.

### உ.வே. சாமிநாதையர்

தமிழ்ப் பதிப்புத்துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஒரு தனி ஓங்கிய பெருமகனார் உ.வே. சாமிநாதையர். எவ்வாறு இத்திறம் வாய்க்கப் பெற்றார்? என்னும் வியப்பு நோக்கு எவருக்கும் எழும்புதல் இயற்கை! அத்தகைய பதிப்பாக்கங்களை அவர் செய்தார்.

பதிப்புத்துறையில் ஈடுபட்ட பெருமக்களுள் பெரும் பாலோர் தமிழ்ப்பற்றாலும், ஏடுகள் அழிந்துபடாமல் காக்கவேண்டும் என்னும் ஆர்வத்தாலும் ஈடுபட்டவர்கள்; அவர்கள் இளமை முதலே அழுத்தமான தமிழ்ப் புலமையைப் பெற்றிருந்தாரல்லர்! அந்நிலையிலும் அவர்கள் செய்த பணி போற்றத் தக்கதேயாம்.

சில பதிப்பாசிரியர்கள் பயின்றதுறை வேறாகவும், பதிந்ததுறை தமிழாகவும் இருக்கும்; அல்லது பணி செய்த துறை ஒன்றாகவும் அணிசெய்த துறை ஒன்றாகவும் இருக்கும். ஆதலால் முழுமையாக ஈடுபடுதற்கு அவர்கள் வேலைநிலை இடம் தருமாறமையவில்லை.

சில பதிப்பாளர்களின் சமயச்சார்பு அவர்களைப் பழமை நூற்பக்கம் - சமயஞ்சாரா நூற்பக்கம்-பார்க்க

விடவில்லை. ஆதலால் குறிப்பிட்ட நூல்களை ஆராயும் அளவுடன் நின்றனர்.

பதிப்பாளருள் சிலர் பன்மொழிப் புலமை எய்தி நின்றனர். அப்பன்மொழியறிவு தமிழுக்கு ஆக்கந்தந்ததே எனினும், முழுமையாகத் தமிழ்நூல்ஆய்வுக்கே தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விடவில்லை.

அரிய ஆராய்ச்சித் திறம்மிக்கார்க்கும் மனப்பாடத் திறம் வாய்ப்பது அரிது. நூல் நூலாகவே மனப்பாடம் செய்து கொண்டவர்களுக்கு நூலில் வரும் மேற்கோள்களையும் ஒப்புமைப் பகுதிகளையும் நொடிப் பொழுதில் கண்டு குறிப்பதற்கு வாய்க்கும். பிறர்க்கு அவ்வாய்ப்புக் கூடுவது இன்று.

தாமே உழல்வதினும் தக்க துணைவர்களை வைத்துக் கொண்டு ஆராய்வதிலே அவ்வனைவர் நல்லறிவையும் ஒருங்கு தொகுத்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. அதற்கு அணுகி வேலை கொள்ளும் திறமும் பொறுமையும் போற்றுதலும் ஆகியனவெல்லாம் அமைதல் வேண்டும்.

உழைப்பின் செம்மை ஒன்றைக் கருதுதல் அல்லாமல் - கால விரைவு காட்டல் - பதிப்பின் சிறப்புக்குப் பயன்படாது. கால விரைவுடனும், ஒரு குறிப்பிட்ட நோக்குடனும் செய்யும் பதிப்பு அவர் மற்றைப் பதிப்புடன் ஒப்பு நோக்கப் பெரிதும் வேற்றுமைப் படுதல் கண்கூடு.

களஞ்சியத்தில் வைத்துக்கொண்டு ஆக்கியுண்பார் நிலைக்கும், அவ்வப்போது கடைக்குச் சென்று வாங்கி ஆக்கியுண்பார் நிலைக்கும் உள்ள வேற்றுமை ஏடுகளைத் தொகுத்து வைத்துக்கொண்டு ஆய்வார்க்கும், அவ்வப்போது ஆராயும் நூல்களைத் தேடித் தேடித் தொகுத்து ஆய்வார்க்கும் உண்டு. முன்னது இனிமையும், நிறைவும், பயனும் மிக்கதாம்.

பதிப்பு நூல்களில் எண்ணிக்கை பெருகப் பெருக அவற்றின் அடைவுகளும் மேற்கோள்களும் பெருகும்

வண்ணம் வரன்முறையான தொகுப்புகள் வைத்திருத்தல் பதிப்பை எளிமையாக்குவதுடன், அருமையாக்கவும் செய்யும்.

நல்லவை எவரிடத்துக் காணினும் எந்நிலையில் காணினும், அவற்றையெல்லாம் தம்மவையாகப் போற்றி ஏற்றுக் கொள்ளும் நிறைமனமும், நன்றியுணர்வும் பதிப்பின் மணத்தைப் பெருகப் பரப்பும் சாமிநாதையர் எத்தகைய பதிப்பாளராக விளங்கினார்?

"சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார்; தமிழிலே வளர்ந்தார்; அவர் பிறப்பும் தமிழ்; வளர்ப்பும் தமிழ்; வாழ்வும் தமிழ்; அவர் தமிழாயினார்; தமிழ் அவராயிற்று; அவர் தமிழ்; தமிழ் அவர்"

"ஐயர் புலமை தமிழ்த்தொண்டில் புகுத்தியது. அத்தொண்டு அவரை மஹாமஹோபாத்தியாயர் ஆக்கிற்று. தாக்ஷிணாத்திய கலாநிதி ஆக்கிற்று. டாக்டர் ஆக்கிற்று. தமிழ்த்தாத்தா ஆக்கிற்று; தமிழ்க்கோயில் ஆக்கிற்று."

இம்மணி மொழிகள் திரு.வி.க.வினுடையவை என்பதைக் கூறவேண்டியது இல்லை. சிந்தாமணிப் பதிப்பில் ஐயர் கருத்துச் சென்றது. ஆய்ந்து ஒப்பிட்டுச் சுவடி அணியம் செய்திருந்தார். பாட்டு, பொழிப்புரை, விசேடவுரை எல்லாம் ஒன்றாக இருந்தமையால் அவற்றை வேறு பிரித்து அறிவதும், அறியும்படி செய்வதும் மிகவும் அரிய செயல்கள் என்று அக்காலத்தில் ஐயர் எண்ணினார்; அச்சுக் கலையில் தேர்ந்த தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலச்சாரியார் என்பவர் "அவற்றை மிகவும் சுலபமாகத் தனித்தனியே அமைத்து விடலாம். மூலத்தைப் பெரிய எழுத்திலும் உரைகளைச் சிறிய எழுத்திலும் அச்சிட வேண்டும். பொழிப்புரையையும் விசேட உரையையும் தனித்தனியே பாரா பாராவாக அமைத்து விட்டால் அவை வேறுவேறு என்று தெரியவரும். ஏட்டுப் பிரதியிலுள்ள குழப்பங்களையெல்லாம் அச்சில் மாற்றிவிடலாம். அதைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலையடைய வேண்டாம்" என்று தெளிவு படுத்தினார்.

சிந்தாமணி அச்சுவேலை தொடங்கிய போதும் சில மயக்கங்கள் ஐயருக்கு உண்டாயின. இராசகோபாலாச்சாரியார் எளிமையாகத் தீர்த்துவைத்தார் அவர் பயின்ற கலை அஃதாகலின்.

"நூற்பெயர், இலம்பகப்பெயர், தலைப்பு, மூலம் உரை என்பவற்றை வெவ்வேறு எழுத்துக்களில் அமைக்கும்படி ராஜகோபாலாச்சாரியார் திட்டம் செய்தார்".

"முதற்பாட்டிற்குரிய உரையில் மேற்கோள்கள் பல இருந்தன. அவற்றை அடிக்குறிப்பிலே எவ்வாறு தெரிவிப்பதென்று நான் மயங்கினேன். அவர் உடுக்குறி முதலிய அடையாளங்களை முறையே போட்டு அவற்றின் பெயரை எனக்குத் தெரிவித்தார்".

பின்னே பத்துப்பாட்டுப் பதிப்பு நடைபெற்றது. பத்துப் பாட்டுப் பதிப்புக்கு மூலமே கிடைக்கவில்லை. நச்சினார்க்கினியர் வரைந்த உரையின்வழியேதான் மூலத்தைத் துலக்க வேண்டியதாயிற்று. இவ்விடர்ப்பாடு ஐயருக்கு மலைப்பைத் தந்தது. 'மலையேல்' என வாழ்த்துக் கூறினார் இராசகோபாலாச்சாரியார். அவர் சட்டென்று ஒருவழி கூறினார். "அந்தச் சிறு பகுதிகளான மூலங்களை யெல்லாம் தனியே எழுதி வைத்துக்கொண்டால் பிறகு பொருளைக் கொண்டும் வேறு ஆதாரங்களைக் கொண்டும் ஒழுங்கு படுத்திக் கொள்ளலாமே" என்றார். அவர் முல்லைப் பாட்டில் சில பகுதிகளை எழுதிக் காட்டினார்.

பத்துப்பாட்டின் பெருமையை உணர்ந்தார் இராசகோபாலாச்சாரியார். அதிலுள்ள அருஞ்சொற்களையும் அருந்தொடர்களையும் தொகுத்து அகராதியாக வெளியிடலாம் என்று வழிகாட்டினார். அகராதி அமைத்தற்குக் கருவியாகவுள்ள பெட்டி ஒன்றைக் கொணர்ந்து, அகராதி செய்யும் முறையையும் காட்டினார். மிக எளிமையாக அகராதி முடிந்ததைப் பார்த்து ஐயர் வியந்தார். தமக்கென அப்பெட்டியைப்போல் இரண்டு பெட்டிகளைச் செய்து கொண்டார்.

பதிப்புத் துறையினால் தமக்கு உண்டாகிய வளர்ச்சி முறையை ஐயர் குறிப்பிடுகிறார்.

"சிந்தாமணிப் பதிப்பைக் காட்டிலும் பத்துப்பாட்டில் சில புதிய பகுதிகளைச் சேர்த்தேன். அதைக் காட்டிலும் சிலப்பதிகாரத்தில் சில புதிய பகுதிகளை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவியாகச் சேர்க்க வேண்டுமென்று தோற்றியது. அவற்றிற்குரிய விஷயங்கள் சிலப்பதிகார மூலத்திலும் உரையிலும் பல இருந்தன. அடியார்க்கு நல்லார் உரையினால் தெரியவரும் நூல்களைப் பற்றிய குறிப்புகளை அவசியம் எழுதவேண்டுமென்ற ஆசை எனக்கு மிகுதியாக எழுந்தது. நூலாலும் உரையாலும் அறியப்படும் அரசர் முதலியோர் பெயர்களை வகைப்படுத்தி அகராதி வரிசையால் அமைக்கவேண்டும் என்பது மற்றொரு விருப்பம். இப்படி என்னுடைய ஆராய்ச்சிவகை விரிந்து கொண்டே சென்றது".[1]

"பதிப்பிக்கத் தொடங்கிய நூல் எனக்கு ஒரு தெய்வ விக்கிரகம் போல் இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே என் ஆசை; "கை, கோணி இருக்கிறது வேறு விதமாக அமைக்கலாம்; நகத்தை மாத்திரம் சிறிது திருத்தலாம்." என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோர் அணுவிலும் தெய்வீக அம்சம் இருக்கிறது என்றே நம்பினேன். அழுக்கை நீக்கி விளக்குவதற்கும் அங்கத்தையே வேறுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தேன்". என்று தம் கொள்கையை வரையறுத்துக் கொண்டு பதிப்புப் பணி செய்தார் ஐயர்.

சாமிநாதையரின் தந்தையார் வேங்கடசுப்பிரமணிய ஐயர். தாயார் சரஸ்வதி அம்மையார். ஊர் உத்தமதானபுரம். 1855ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் நாள் பிறந்தார்.

---

* என் சரித்திரம் பக். 964.

சாமிநாதையர் பதிப்பித்த நூல்கள் மிகப்பல; எழுதிய உரைநடை நூல்களும் பல. அவற்றுள் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு, குறுந்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்பவை குறிப்பிடத் தக்கவையாம்.

இவர் தொகுத்துவைத்த சுவடிகள் நாட்டின் செல்வமாகப் போற்றத்தக்கன. அருமையாகப் பேணி அடைவு செயது வைத்த அச்சுவடிகள், அடையாறு பிரம்மஞான சபைக்கு வழங்கப்பெற்றன. பெறலரும் அப்பெரும் பொருளைப் பெற்ற அச்சபை திருவான்மியூரில் டாக்டர் சாமிநாதையர் நூல்நிலையத்தை நிறுவி ஆங்கு வைத்தது. ஐயர் திருப்பெயர் விளங்க வெளியீடுகளையும் தொடர்ந்து செய்கின்றது. ஆராய்ச்சியாளர்க்கு அருமருந்தன்ன கருவூலமாகத் திகழ்கிறது ஐயர் சுவடிச்சாலை.

பழந்தமிழ்ச் சுவடிகளாகச் சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ள சுவடிகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் | சுவடிகள் | 25 |
| முருகாற்றுப்படை | ” | 18 |
| பொருநராற்றுப்படை | ” | 2 |
| சிறுபாணாற்றுப்படை | ” | 4 |
| பெரும்பாணாற்றுப்படை | ” | 4 |
| முல்லைப் பாட்டு | ” | 2 |
| குறிஞ்சிப் பாட்டு | ” | 2 |
| மதுரைக்காஞ்சி | ” | 3 |
| நெடுநல்வாடை | ” | 3 |
| பட்டினப்பாலை | ” | 2 |
| மலைபடுகடாம் | ” | 2 |
| ஐங்குறு நூறு | ” | 1 |
| பதிற்றுப் பத்து | ” | 1 |
| பரிபாடல் | ” | 1 |

| | | |
|---|---|---|
| கலித்தொகை | ” | 3 |
| அகநானூறு | ” | 5 |
| புறநானூறு | ” | 9 |
| சிலப்பதிகாரம் | ” | 5 |
| மணிமேகலை | ” | 6 |
| சிந்தாமணி | ” | 15 |
| பெருங்கதை | ” | 1 |
| சூளாமணி | ” | 1 |
| திருக்குறள் | ” | 12 |

இவ்வரிசையில் இடம் பெறத்தக்க பெரியார் ஒருவர் உளர். அவர் எவர்? திரு. வையாபுரிப் பிள்ளை.

“இப்பொழுது வையாபுரிப்பிள்ளை தமிழ்நாட்டுப் பதிப்பாசிரியர் உலகிலே ஒரு வான்மணியெனத் திகழ்கிறார்; ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, சாமிநாதையர் ஆகியவர் இனத்தில் சேர்ந்தவரானார்”[1.]

“சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்புக்களாகிய சங்க இலக்கியம், சிந்தாமணி, திருமந்திரம் முதலிய நூல்கள் நன்முறையில் வெளிவர ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கியும் பாடபேதங்களை ஒழுங்கு செய்தும், பிழை திருத்தியும் உதவி புரிந்தவர் வையாபுரிப் பிள்ளை என்பதை யான் நன்கறிவேன். யான் பெரியபுராணம் இரண்டாம் பதிப்பு முயற்சியில் தலைப்பட்டபோது, தமிழ் நாட்டிலுள்ள பல ஏட்டுப் பிரதிகளைத் திரட்டி என்னிடம் சேர்ப்பித்தது வையாபுரியின் தமிழன்பேயாகும்” என்று சான்றோர் பாராட்டும் சீர்மையைப் பதிப்புத் திறத்தால் பெற்றவர் வையாபுரியார்.

வையாபுரியார் கல்லூரியில் பயிலும்காலையிலேயே ஏடு தேடினார்; ஆராய்ந்தார்; படியெடுத்தார்; பின்னே வழக்கறிஞராகப் பயின்றும், பணியாற்றப் புகுந்தும்,

1. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் பக். 208

அவரைத் தமிழ்த்துறையே ஆட்கொண்டது! அவர் தம் தமிழ் ஈடுபாடு அது.

"எப்.எ.," படிக்கும் போதே, கலித்தொகை முழு வதையும் ஏட்டுப்படியுடன் ஒப்பிட்டுப் பயின்றார் வையாபுரியார். 'பி.ஏ.,' தேர்ச்சி பெற்றதும் தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரைச்சுவடியைத் த.கனக சுந்தரம் பிள்ளையிடமிருந்து பெற்று உரை முழுவதும் படியெடுத்துக்கொண்டார். இளமையில் கொண்ட இவ் வுணர்வு வாளா ஒழியுமோ? வ.உ.சியின் தொல்காப்பியப் பதிப்புக்குத் துணையாயது. திரு.வி.கவின் பதிப்புக்கு உதவியது. சங்க இலக்கியப்பதிப்பைச் சால்புற முடித்தது. சிந்தாமணி, புறத்திரட்டு, களவியல்காரிகை, அரும்பொருள் விளக்க நிகண்டு முதலாக நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தது; பல்கலைக்கழக அகராதிப் பணியை முடித்து வெளியிட்டது.

வையாபுரியார் கடிய உழைப்பாளர்; ஏடுகளை இடைவிடாது ஆய்ந்தவர்; அச்சிட்ட நூல்களையும் ஏடுகளுடன் ஒப்பிட்டுப் பாடம் தேர்ந்தவர்; பிறர் பதிப்பிக்க விரும்பும் நூலையும், பொழுதையும், பொருளையும் கருதாமல் ஆய்ந்து தந்தவர்; தம்மிடம் இருக்கும் சுவடிகளைத் தட்டாமல் பிறர் ஆய்வுக்கு வழங்கியவர்; எவரெவர் எதிர்ப்பினும் தமக்குத் தோன்றிய கருத்தைத் துணிந்து உரைத்தவர்; நூலுக்குச் சிறப்புச் செய்யும் அரிய ஆராய்ச்சி முன்னுரையை வரைந்தவர். இவர் தம் ஆராய்ச்சி முன்னுரைகளைத் தொகுப்பின் ஓர் அரிய ஆராய்ச்சி நூலாகத் திகழ்தல் உறுதியாம். இவர் பதிப்புத் துறையில் கொண்டிருந்த கொள்கைகள் மிகப் போற்றத்தக்கன.

1. அகராதி நினைவுகள் பக். 6

## 6. பதிப்புப் பணி

வாழ்வு 'நீர்மேல் எழுத்துப்' போன்றது. அவ்வாழ்வைக் 'கல்மேல் எழுத்து' ஆக்கிக் கொண்ட பெருமக்கள் பதிப்புத் துறையில் ஈடுபட்டவர்கள் ஆவர். இவர்களை 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத் தம் புகழ் நிறீஇய' பெருமக்கள் எனலாம்.

அச்சு எழுத்து, வார்க்கப்பட்ட எழுத்து, மரக்கட்டைகளில் எழுத்தைச் செதுக்கிப் பக்கம் பக்கமாக அச்சிட்ட காலமும் இருந்தது. பின்னர்த் தனித்தனி எழுத்தை அமைத்து அடுக்கும் வளர்ச்சியுற்றது. எழுதாமல் பதிக்கும் இவ்வெழுத்தை நம்முன்னோர், 'எழுதா எழுத்து' என்றனர். 1883-ஆம் ஆண்டில் வெளிவந்த சீவக சிந்தாமணிப் பதிப்புக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கிய புரசை. அட்டாவதானம் சபாபதி முதலியார்,

> "கனக சபைமால் தனதுநல் லுதவியால்
> எழுதா எழுத்தில் இயைவித் தனனால்"

எனக் குறிப்பிடுகிறார். இதனைத் 'தீட்டுதலிலா எழுத்து' என்றும் கூறினார். ஆறுமுக நாவலரின் திருக்குறள் பதிப்புக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

> "தீட்டுதலி லாவெழுத்தி லியைவியென உலகுபுகழ் செம்பிநாடன்"

என்பதால் இதனை அறியலாம்.

முதற்கண் வெளியிட்ட அச்சுநூல்கள் பல ஏட்டுச் சுவடியில் எழுத்துக்கள் இருப்பது போலவே இருந்தன. நிறுத்தக் குறிகளோ, ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடுகளோ, மெய்எழுத்தில் புள்ளிகளோ இல்லை. சான்றாக, 1812-ஆம் ஆண்டில் அறிஞர் எல்லிஸ் (F.W.Ellis) வெளியிட்ட திருக்குறள் பதிப்பைக் குறிப்பிடலாம்.

பட்டறிவு முதிரமுதிர எழுத்தின் வடிவம் செப்பமாகியது. குறியீடுகளும் பயன்படுத்தப் பெற்றன. குறியீட்டு விளக்கத்தை ஒரு நூல் விளம்பரப்படுத்துகின்றது.

இம்முளை கூட்டுச் சொல் முதலியவற்றின் பின்னும் இச் சிறு கீற்று சொற்களின் பிரிவுக்குப் பின்னும் -- இப் பெருங் கீற்று பதசாரத்திற்குப் பின்னும், ( ) இவ் விருதலைப்பிறை வருவிக்கப்பட்ட சொற்களுக்கும், இக் குத்து முற்றுச் சொல் லுக்குப் பின்னும் [ ] இவ் விருதலைப் பகரம் தாத்பரியத் துக்கும், இத்தாரகை அடியிற் காட்டப்பட்டவற்றிற்கும் வைக்கப்பட்டன.

இது 1875-ஆம் ஆண்டில் சென்னை, பூமகள் விலாச அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்ட 'நிட்டானுபூதி' என்னும் நூலில் காட்டப்பட்டுள்ளது ஆகும்.

பழந்தமிழ் நூல்கள் அச்சிடப்பெற்ற வரலாற்றை அவற்றின் காலமுறைப்படி காண்போம். இத் தொடக்கத்திற்கு முன்னரும், இடையிடையேயும் இடைக்கால, பிற்கால இலக்கிய இலக்கணங்களும், உரைநடை நூல்களும், பிறவகை நூல்களும் வெளிப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் வரன் முறையே குறிப்பிடவில்லை. நாம் ஆராய்வது பழந்தமிழ் நூல்களின் பதிப்புக்களைப் பற்றியே யாம்.

### திருக்குறள் நாலடியார் மூலம்
### 1812.

'திருக்குறள் மூலபாடம்' 'நாலடியார் மூல பாடம்' என்னும் இரண்டு நூல்களும் ஒன்றாக 1812-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. திருக்குறள், நாலடியார் ஆகிய இரண்டன் முதற்பதிப்பு இந்நூலே ஆகும்.

மர எழுத்தால் அச்சிடப்பெற்ற நூல்கள் இவை. முற்றுப்புள்ளி, கீற்று ஆகிய குறிகள் மட்டும் உள்ளன. மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியிடப்பெறவில்லை. ஒற்றைக்

1. நாம் எழுதும் முறையில் எழுதப்பெற்றது இது.

*கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடுகள் இல்லை. ஏறக் குறைய ஏட்டுப்படி எழுத்தெனவே அமைந்துள்ளது.*

இதன் முதற்பக்கம் வருமாறு;

திருக்குறள்

மூலபாடம்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்தது.

'2இது பொத்தகம் இலக்கண விலக்கிய வாராய்ச்சி யுடையவர்களா லிகிதப் பிழையற வாராய்ந்து சுத்த பாடமாக்கப்பட்டது.

தொண்டை மண்டலம்

சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம்

மலையப்பபிள்ளை குமாரன்

ஞானப்பிரகாசனால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

மாசத தினச்சரிதையின் அச்சுக்கூடம்

இ. ஆண்டு கஅகஉ

1812

*இந்நூலின் இரண்டாம் மூறாம் பக்கங்களில் நூல் வரலாறு, ஆராய்ந்த முறை, ஆராய்ந்தவர், ஒப்புக் கொண் டவர் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இதனை ஆராய்ந்து பதிப்பித்தவர் திருநெல்வேலி அம்பலவாண கவிராயர்.*

*உரைநடைப் பகுதியில் நிறுத்திப் படிக்கவேண்டிய இடங்களுக்குக் கீற்றுக் குறியிடப்பட்டுள்ளது. காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலாய நிறுத்தக் குறிகள் பயன்படுத்தப் பெறவில்லை. மூலபாடத்தில் முற்றுப் புள்ளி யுண்டு. ஆனால் ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்ற இக் காலப் பதிப்புகளிலும் குறியீடுகள் செப்பமாகப் போற்றப் பெற்றுள்ளன. அதனை எல்லிசரின் திருக்குறள் பதிப்பிலே காணலாம்.*

---

*1. ஒன்றனுள் ஒன்று அடங்கிய இருவட்டங்களின் இடையே அமைந்துள்ளது.*

திருக்குறளுக்கு அமைந்த வரலாறு, ஆராய்ச்சி முதலி யனவெல்லாம் நாலடியார்க்கும் உண்டு. முதற்பகுதி திருக்குறளும் பிற்பகுதி நாலடியாரும் அச்சிடப்பெற்று ஒரே நூலாக வெளிப்பட்டன. இதே ஆண்டில் அறிஞர் எல்லிசு திருக்குறள் பதிப்பு வெளிவந்தது. இரண்டிலும் 1812-ஆம் ஆண்டே குறிப்பிடப் பெற்றுத் திங்கள் குறிக்கப் பெறா மையால் எப்பதிப்பு முன்னையது, எப்பதிப்புப் பின்னையது என்பதைத் தெளிவு செய்ய முடியவில்லை. ஆனால் திருக்குறளின் முழு மூலப்பதிப்பு அம்பலவாண கவிரா யருடையது. ஆகலின், அதனை முதற்கண் வைக்கப் பெற்றது.

திருக்குறள் 1812

**TIRUKKURAL**

**ON VIRTUE**

**F.W.ELLIS' COMMENTARY**

**FIRST EDITION**

**1812.**

இது தலைப்புப் பக்கம். இதன் முதற்பக்கச் செய்தி வருமாறு. தமிழ் எழுத்து அதிலுள்ளவாறே அமைக்கப்பட்டுள்ளது.

அறப்பால்

**ON VIRTUE**

**CHAP 1**

கடவுள் வாழ்த்து The Praise of god.

The literal meaning of the title of this chapter is preserved in the translation. According to established rule all Tamil compositions ought and with few exceptions all do commence by an invocation of the deity, varying according to the sect of the writer. Tiruvalluvar has devoted the whole of this chapter to this subject.

**1**

அகர முதல வெழுதெ்தலலா மாதி
பகவன முதறறே யுலகு (க)

As ranked in every alphabet the first the self–same vowel stands, so in all words.

The eternal God is chief

முதற்குறளுக்கு மூன்று பக்க அளவில் உரை விளக்கம், ஆங்கிலம் தமிழ் மேற்கோள்கள் ஆகியனவற்றைத் தந்துள்ளார்.

பிறவிப் பெருங்கடல் என்னும் குறளுக்கு 9 பக்கங்களில் உரை விளக்கம் வரைந்துள்ளார். திருவாய்மொழி, திருவாசகம், சிவவாக்கியர் பாடல்கள், தேம்பாவணி முதலியவற்றில் இருந்து 26 செய்யுள்களை மேற்கோள் காட்டி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலப் பதிப்புகளில் அந் நாளிலேயே கொள்ளப் பெற்றிருந்த செப்பங்களெல்லாம் எல்லீசர் திருக்குறள் பதிப்பால் புலப்படுகின்றன. எல்லீசர் பதிப்பில் அம்பலவாணர் பதிப்பில் காணாத ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடுண்டு; ஆதலால் அதற்கு இது பிற்பதிப்பு ஆகலாம். மேலும் தமிழ் எழுத்துக்களில் மெய் எழுத்திற்குப் புள்ளியும் உண்டு; புள்ளியில்லாமையும் உண்டு. இவ்வாறு ஒருபாற்படாது அமைந்துள்ளன.

1830இல் திருத்தணிகை சரவணப்பெருமாளையர் பதிப்பும், 1840இல் இராமாநுச கவிராயர் பதிப்பும், 1849இல் வேதகிரி முதலியார் பதிப்பும், 1861இல் ஆறுமுக நாவலர் பதிப்பும் வெளிவந்துள.

### நாலடியார் வெளியீடுகள்

நாலடியார் மூலம் 1812ஆம் ஆண்டு வெளிவந்த செய்தியை அறிந்துள்ளோம். அதனைத் தொடர்ந்த நாலடி வெளியீடுகளைக் காண்போம்.

'நீதி மொழித் திரட்டு' என்னும் தொகுப்பில் நாலடியாரையும் இணைத்து வாக்கர் என்பவர் (J.Walker) அச்சிட்டார். அது 1841 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இதற்கு அடுத்த பதிப்பு 1843 இல் வெளிவந்தது. 'நாலடி நானூற்றின் மூலம்' என்பது அதன் பெயர். 'காஞ்சிபுரம் லக்ஷ்மண முதலியாரால் திருத்தி வெளியிடப் பெற்றது'. வெளியிடப் பெற்ற காலம் "சாலிவாகன ஞூ க எ க சா; நிகழ்கின்ற சோபகிருது பங்குனி மீ 1" என்றுள்ளது. சாலி வாகன 1796 சோபகிருது ஆண்டு என்பது கி.பி. 1843 ஆம் ஆண்டாகும்.

இப் பதிப்பில் அச்சடுக்கியவர் இன்னார் என்னும் குறிப்புள்ளது. இவ்வழக்கம் அக்காலத்து இருந்தமை சிறப் பாகக் கருதுதற்கு உரியதாம். "இப்புத்தகம் வேங்கடாசல முதலியாரால் அச்சடுக்கப்பட்டது" என்பது அக்குறிப்பு.

### நாலடியார் மூலமும் உரையும்
### 1844

இப்பொழுது கிடைத்துள்ள அளவில் நாலடியார் மூலமும் உரையுமாக வெளிப்பட்டதில் இப்பதிப்பே முதலா வதாகும். இதற்குப் பதுமனார் உரையைத் தழுவி உரை வரைந்தவர் புதுவை நயநப்ப முதலியார் ஆவர். இதன் தலைப்புப் பக்கத்தில் உள்ள செய்திகள் வருமாறு:

"முநிவர்கள் அருளிச் செய்த நீதி நூலாகிய நாலடியார் இதற்குக் கூடலூர் சபாபதிமுதலியார், சிறுவர் முதலிய யாவரும் எளிதில் உணரும் படி, பதுமானார் உரையை வெளிப்படையாக்கிப் பதப் பொருளுங் கருத்துமாக உரை செய்து, தருகவெனக் கேட்டுக் கொண்டதால் சென்னைக் கல்விச்சங்கத் தமிழ்ப் புலவராகிய புதுவை நயநப்ப முதலியார் அவர்களால் உரை செய்யப்பட்டு வளவனூர் சுப்பராய முதலியார் அவர்கள் குமாரராகிய முத்துசாமி முதலியாரால் ரிக்கார்டு அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. சாலிவாகன சக வருடம் க எ க எ நிகழும் குரோதி ஞூ கார்த்திகை மீ இதன் விலை ரூ. ... எ"

இந்நூலின் உரைப்பாயிரத்தில் நாலடியாரின் பெயர்க் காரணம் செவ்விதிற் கூறப்பட்டுள்ளது. நாலடித் தொலைவு

வையையாற்றில் சென்ற நானூறு ஏடுகளைத் தொகுத்து அமைக்கப் பெற்றது நாலடியார் எனும் கதை வழக்கை மறுக்குமாப் போல அக் குறிப்புள்ளது.

"நூலடி முறைமுறை நுவலள வதனால்
நாலடி எனப் பெயர் நாட்டினர்"

என்பது அது "அளவினால் பெற்ற பெயர் நாலடி நானூறு" என்று இலக்கண நூலார் குறிப்பிடுவதற்குத் தக்க விளக்கமாக இவ்வுரைப் பாயிரப் பகுதி அமைந்துள்ளமை உணரத் தக்கதாம்.

**தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம்**

இந்நூல் சாலிவாகன 1770 க்குச் சரியான பிலவங்க ஆவணியில் வெளியிடப் பெற்றது. பல பிரதிகளைக் கொண்டு மழவை மகாலிங்கையர் ஆராய்ந்து, திருவண்ணா மலை வீரபத்திர ஐயரால் தமது கல்விக் கடல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

மழவை மகாலிங்கையர், "கனம் பொருந்திய கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட யூனிவர்சிட்டி யென்னும் சகலசாஸ்திரசாலைத் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய வர்."

"கரலிகிதங்களாலாய வழுக்களை நீக்கி அச்சிட்டுத் தருகவெனச் சில வித்துவான்கள் கேட்டுக்கொண்டபடி செய்யப் பெற்றதாக" இந்நூல் முகப்பில் குறிப்பிடப்பட்டுள் ளது. இதற்குத் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார். இந்நூல் கையால் செய்யப்பட்ட தாளால் அச்சிடப் பெற்றது. நூலின் இறுதியில் எழுத்ததிகார இயல்கள் ஒன்பதன் பெயரும் ஒரு வெண்பாவிலும், நூற்பாக்களின் தொகை ஒரு வெண்பாவிலும் குறிக்கப்பட்டுள்ளன.

## தொல்காப்பிய நன்னூல்
## 1858

தொல்காப்பிய நன்னூல் ஒப்புமை வேற்றுமை விளங்கச் செய்யப்பெற்றது இந்நூல். இது முதற் பகுதியாகும். இதன் முகப்புக் குறிப்பு:

**Comparitive Reference Edition**
**of the**
**Tholcapyam and the Nunnool**
**S.Samuel Pillay**
**Revised By**
**Walter Joya Esq.**
**Part-I, Madras 1858.**

நன்னூல் மூலம் 1835ஆம் ஆண்டிலேயே வெளிவந்தது. இலக்கணப் பஞ்சகம் என்னும் தொகுப்பில் தாண்டவராய முதலியாரால் அச்சிடப்பெற்றது. 1840இல் விசாகப் பெருமாளையர் காண்டிகையுரை அவரது கல்விவிளக்க அச்சுக்கூடத்தின்வழி வெளிவந்தது. 1847 ஆம் ஆண்டில் முகவை இராமாநுச கவிராயரால் விருத்தியுரை எழுதப் பெற்று அவர்தம் அச்சகத்தின் வழியே வெளிவந்தது. அடுத்த ஆண்டிலேயே (1848) நன்னூல் ஆங்கில விளக்கத்துடன் ஜோயஸ், சாமுயல் பிள்ளை என்பவர்களால் வெளியிடப் பெற்றது. 1851இல் நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை ஆறுமுக நாவலரால் வெளியிடப் பெற்றது. 1855இல் சிவஞான முனிவர் விருத்தியுரை தில்லையம்பூர் சந்திரசேகர பண்டிதர் பார்வையில் வெளிவந்தது. ஆதலால் நன்னூற் பயிற்சி பெருகிய நிலையில் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யும் நிலைமை உண்டாயிற்று.

இத் தொல்காப்பிய நன்னூற் பதிப்பில் 'ஆங்கிலேய துரைத்தனத்தார்' என்பது 'ஐங்கிலிய துரைத்தனத்தார்' என்றுள்ளது.

### தொல். சொல். சேனாவரையம்

### 1868

இப்பதிப்பை ஆராய்ந்தவர் நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவர். இதனைப் பதிப்பித்தவர் இராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை. இது, 'ஊ.புஷ்பரதச் செட்டியாரது கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்' பதிப்பிக்கப் பெற்றது. காலம் 'விபவ ஹூ புரட்டாசி மீ. இதில் முன்னுரை, பதிப்புரை ஆகிய எவையும் இல்லை.

### தொல். எழுத்து. இளம்பூரணம்

### 1868

இப்பதிப்பு, "மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கர்களில் ஒருவராகிய சென்னைக் கவர்ன்மெண்ட் நார்மல் பாடசாலைத் தமிழ்ப் புலவர் திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் பல ஏடுகளைக் கொண்டு பரிசோதித்து" வெளியிடப் பெற்றதாகும்.

சென்னை, "மலைச்சாலையில்" இருக்கும், அத்திநியம் அண்ட் டெலிநியூஸ் பிரான்ச் அச்சுக் கூடத்தில்" பதிப்பிக்கப் பட்டது.

இப்பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, கும்பகோணம் தியாகராச செட்டியார், திரிசிரபுரம் பெரியண்ணப் புலவர் ஆகியவர்கள் வழங்கியுள்ளனர்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, 'Mount Road' – 'மலைச் சாலை' என்று குறிக்கப் பெற்றுள்ளமை வியப்புத் தருவதாம்.

விபவ ஹூ கார்த்திகை மீ இப்பதிப்பு வெளி வந்தது. இதே ஆண்டில் பூவிருந்தவல்லி சு.கன்னியப்ப முதலியார் தொல். எழுத்து. இளம்பூரணம் வெளியிட்டார். அது பொழிப்புரையாக அமைந்தது.

## தொல். சொல். சேனாவரையம்
## 1868

சி.வை.தாமோதரம் பிள்ளை வெளியீடாகிய சேனாவரையம் வெளிவந்த ஒரு திங்கள் இடைவெளிக்குப்பின்னே இப்பதிப்பு வெளிவந்தது. இதனைக் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை ஆராய்ந்தார். இதன் முகப்பிலுள்ள குறிப்பு வருமாறு.

"கா. பச்சையப்ப முதலியார் தர்ம விசாரணை சபாத்தியக்ஷகராகிய மேலைமணம்பேடு சீனிவாச சடகோப முதலியாரவர்கள் வேண்டுகோளின்படி சென்னை நார்மல் ஸ்கூலெனும் போதனா சக்தி விர்த்தி வித்தியாசாலைத் தமிழ்த் தலைமைப் புலவர் கோமளபுரம் இராசகோபால பிள்ளையவர்களால் பல ஏடுகளைக் கொண்டு வழுவறப் பரிசோதிக்கப்பட்டு வர்த்தமான தரங்கிணி சாகை அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது. "விபவ ஷு கார்த்திகை மீ"

இப்பதிப்பில் சாற்றுகவி, முன்னுரை முதலிய எவையும் இல்லை.

## தொல் பொருள் நச்சினார்க்கினியம்
## 1885

இப்பதிப்பு சி.வை.தாமோதரம் பிள்ளையால் கொண்டு வரப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர், யாழ்ப்பாணம் சதாசிவப் பிள்ளை, திருநெல்வேலி தாசில்தார் சின்னத் தம்பிப் பிள்ளை ஆகியோர் ஏடுகள் தேடித் தந்துள்ளனர்.

திருத்தணிகை சரவணப் பெருமாளையர் பேரர் துரைசாமி ஐயர் பிரதி, புரசவாக்கம் சாமுவேல் பண்டிதர் பிரதி, தொல்காப்பியம் வரதராஜ முதலியார் பிரதி 1 இவை முதலாகப் பன்னிரண்டு பிரதிகள் கொண்டு ஆராயப் பெற்றது என்னும் குறிப்பு நூலில் உள்ளது.

பார்த்திப ஆண்டு ஆவணித் திங்களில் இப்பதிப்பு வந்துள்ளது. இதிலுள்ள செய்யுளியல், மெய்ப்பாட்டியல், உவமஇயல், மரபியல் ஆகியவை நச்சினார்க்கினியர் உரையாகவே குறிக்கப் பெற்றுள. ஆனால் அவை பேராசிரியர் உரை என்று செந்தமிழ்த் தொகுதி 1, பகுதி1, செந்தமிழ்த் தொகுதி2, பகுதி II ஆகியவற்றிலும், தமிழ்ச் சங்க வெளியீடாகிய தொல்-நச். உரைப் பதிப்பிலும் பெரும்புலவர் இரா. இராகவ ஐயங்காரால் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது.

இதன் பதிப்புரை விரிவானது. அதிலுள்ள சில பகுதிகள் வருமாறு:

“திரவிய லாபத்தை எவ்வாற்றானும் கருதி முயன்றிலேன். நஷ்டம் வாராதிருப்ப தொன்றே எனக்குப் போதும். இதுவரையில் பதிப்பித்த நூல்களால் எனக் குண்டான நஷ்டம் கொஞ்சமல்ல. இவ்வித முயற்சியில் கையிடுவோர் நஷ்டமுறாதிருத்தற் பொருட்டுச் சர்வகலா சாலைப் பரீட்சையில் தேறி ஆங்காங்குப் பெரும் உத்தியோகம் வகித்திருப்போர் தத்தம் சுயபாஷையில் அச்சிடப்படும் பூர்வகிரந்தங்களில் ஒரு பிரதி வாங்குதல் அவர் கடமை என்றெண்ணுகின்றேன்.”

இக் குறிக்கோள் தமிழ்ப்பட்டம் பெற்றுத் தக்க நிலையில் இருப்பார் உள்ளத்தை அசைத்திருந்தால்கூட அரிய பழந்தமிழ் நூல்கள் ஒரு முறையில் 5000 படிகள் செலவாகக் கூடும். ஆனால் 1000 படிகள் 5 ஆண்டுகளில் செலவாவது கூட இன்றும் அரிதாகவே உள்ளது!

தம் பதிப்புக் குறித்து ஒரு கருத்தை வெளியிட்டு விளக்கம் செய்கிறார் தாமோதரனார்:

“வழுவுற அச்சிட வேண்டியதென்னை? என்று யாரும் வினவுவராயின், வழுச் செறிந்ததாயினும், அடியோடழிந்து போகிற நூலை அடியேன் பாதுகாத்தது பேருபகாரம் அன்றோ என்க.

"அன்றியும் சும்மா கிடந்த அம்மையார்க்கு அரைப் பணத்துத் தாலி போதாதா? காண்டற்கும் அரிய நூலைக் கைக்கெட்டப் பண்ணினது கேடாமா? பிரதி கிடைப்பதே மிக அருமையாயும் கிடைப்பினும் குறைப்பிரதிகளாயும், அவைதாமும் ஒரோ ஒரு வரிக்குப் பல வழுவாக ஆயிரக்கணக்கான வழு உடையனவாகவும் இருக்க அடியேன் அவ்வழுத் தொகையைக் குறைத்து நூற்றுக்கணக்காக்கி விட்டதா என்மேற் குறையாயிற்று."

நூல் திருத்தமாக வரவேண்டும் என்பதிலே தாமோதர னார்க்கு இருந்த பேரார்வம் கீழ்வரும் பகுதியால் விளங்கும்.

"ஐம்பது புதுத்திருத்தங்களுக்கு ஒரு பிரதி என் நன்றியறிவிற்கோர் அடையாளமாக அனுப்புவேன். இந்நூல் பிழையற வழங்கச் செய்தல் ஓர் பெரும் லோகோபகார மென்று உணர்வாராக."

**தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்.**

**1891.**

1847-இல் மழவை மகாலிங்கையர் தொல். எழுத்து. நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்டார். அதற்குப் பின்னர் வந்த இரண்டாம் பதிப்பு இஃதாகும். இதனைப் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளையே. புதுக்கோட்டை நீதிபதி ம. அண்ணாமலைப் பிள்ளையின் பொருளுதவிகொண்டு இப்பதிப்பு வெளிவந்துள்ளது. வெளிவந்த காலம்: "கரவருடம் 29ம் வைகாசி மீ".

**சீவகசிந்தாமணி முதற்புத்தகம்**

**1968.**

**நாமகள் இலம்பகம் நச்சினார்க்கினியம்.**

இப்பதிப்பு திருத்தகு எச்.பவர் (Rev.H.Bower) வெளியீடாகும். இவ்வெளியீட்டுக்கு உதவியவர் திருநெல் வேலித் தமிழ்ப் புலவர் இ. முத்தையா பிள்ளை.

நச்சினார்க்கினியர் உரை, ஆங்கிலத்தில் எழுதிய முன்னுரை, குறிப்பு விளக்கம் ஆகியவற்றையுடைய பதிப்பு இது. இதன் முன்னுரை 42 பக்கங்களாகும்.

ஒவ்வொரு பாடலிலும் சில ஆங்கிலக் குறிப்புகள் உள்ளன. (எ.டு) "முந்நீர் Also three kinds of water, viz the spring, the rain and river water." இது முந்நீர்ப் பிறந்த என்னும் பாடலில் (5) அமைந்துள்ள குறிப்புரை.

மிக அருமையான-பதிப்பாசிரியர்களுக்கு வழிகாட்டு வதான-பின்னிணைப்பு இந்நூலில் உள்ளது.

இணைப்பு

**Index**

எண்கள் செய்யுள் எண்கள்

அகம்-உள், இடம் Inside *40,281.*

அஃகுதல்-சுருங்குதல் to reduce *255.*

அகலம்-மார்பு brest *256.*

அகலல்-to remove *23.*

வெளவுதல்-அபகரித்தல் to usurp *38.*

இவ்வாறு எட்டுப்பக்க அளவில் உள்ளன.

உரையில்காணும் அருஞ்சொல்அடைவுகள்-ஆங்கில இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

இதன் முன்னுரையின் ஒரு பகுதி இந்நூல் வந்த வரலாறு குறிக்கின்றது.

"இருபதாண்டுகளுக்குமுன் திருத்தகு.எச்.துறு(H.Drew) என்பவர் சீவகசிந்தாமணி முழுமையும் அச்சிட விரும்பி அறிக்கை ஒன்று வெளியிட்டார். அவரிடமும் என்னுடனும் தமிழ்ப் புலமைப் பணியாற்றிவந்த திரு சாஸ்திரமையர் என்னும் சமணத் தமிழ்ப்புலவர் திருத்தகு எச்.துறு அவர்களின் கருத்தைத் தெரிவித்துச் சிந்தாமணியை

அச்சிடுமாறு கூறினார். அதன்படி ஏட்டுச் சுவடியில் இருந்து முழு நூலையும் காகிதத்திலே படிஎடுக்கச்செய்து ஒப்பிட்டுத் திருத்தம் செய்யப்பட்டது. அதனைத் தாம் வெளியிடுவதாகச் சொல்லி அமெரிக்கன் சமயக் குழுவைச் சார்ந்த திருத்தகு. டாக்டர் எச்.எம்.ஸ்கடர் விலை கொடுத்துப் பெற்றனர். பின்னர் உடல் நலமின்மையால் அமெரிக்காவுக்கு அதனை எடுத்துச்சென்று நூலக மொன்றிலே சேர்த்துவிட்டதாகத் தெரிகிறது. முன்னமே என்னிடமுள்ள ஏட்டுச்சுவடியில் இருந்து வேறு ஒரு படி காகிதத்தில் எழுதப்பெறலாயிற்று. அதனைச் சரிபார்த்துத் திருத்தித்தந்த சமணப் புலவரும் இரண்டாண்டுகளில் காலமானார். அவர் காலமான தற்குப்பின் திருநெல்வேலித் தமிழ்ப்புலவர் திரு.வி. முத்தையாபிள்ளையின் உதவி கொண்டு முதல் இலம்பகத்தை மட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். இதனை வாங்கி உதவினால் முழுநூலையும் அச்சிட்டு வெளிப்படுத்த ஊக்கமூட்டுவதாகும்.''

### சீவக சிந்தாமணி முதற்பாகம்
### முதல் ஐந்து இலம்பகங்கள்
### 1883.

இது புதுக்கோட்டை அரசவைப் புலவர் ப.முருகேச கவிராயர் உடன் பிறந்த ப.அரங்கசாமிபிள்ளை பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து வெளியிட்ட பதிப்பு ஆகும். சென்னை அட்ட லட்சுமி அச்சுக் கூடத்தில் பதிப்பிக் கப்பட்டுள்ளது. இவர் ஊர் பனையஞ்சேர்; தந்தையார் பரசுராமபிள்ளை.

இப்பதிப்புக்குச் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஈ. சீனிவாசராகவாச்சாரியார், புரசை அட்டா வதானம் சபாபதி முதலியார், பல்கலைக்கழகத் தமிழ்ப்புலவர் கோ.இராசகோபால பிள்ளை, மீனாட்சிசுந்தரம் பிள்ளை மாணவர் வேங்கடசுப்பு பிள்ளை ஆகியோர் சாற்றுக்கவி வழங்கியுள்ளனர்.

"பதிப்பித்தான் பிரதிகளிற் கரலிந்த
வழுக்களைந்து பாவ லோருள்
உதிப்பித்தான் பேருவகை யஃதேபோற்
கொல்லாத ஒழுக்கத் தோரைக்
குதிப்பித்தான் தம்மதநூல் எம்மதத்தும்
பரவலருங் கொள்கை யாலே
மதிப்பித்தான் தனையுலகில் எழிலரங்க
சாமிநல்லோன் வல்லோன் மாதோ"

என்பது வேங்கட சுப்புபிள்ளை பாடியது.

இப்பதிப்பில் பதுமையார் இலம்பகம் முடிய (பாடல் 1406) உள்ளது.

சீவகசிந்தாமணி.

**1887.**

இது டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பாகும். சேலம் இராமசாமி முதலியாரின் தூண்டுதலால் சிந்தாமணி ஆராய்வதற்கு ஐயர் தொடங்கினார்.

"சிந்தாமணியின் முதற்பதிப்பு 1887 ஆம் வருஷ முடிவில் நிறைவேறியது. அப்பொழுது உண்டான மகிழ்ச் சிக்கு இணையாக என் வாழ்க்கையில் இதுகாறும் வேறொன் றைக் கண்டிலேன்" என்று சாமிநாதையர் மகிழ்ந் துரைக்கும்அளவுக்கு நிறைவு தந்த பதிப்பு இச்சிந்தாமணி. பழந்தமிழ்நூல் பதிப்புஉலகில் ஐயர் இறங்கி வெளியிட்ட முதல் வெளியீடு இது. இப்பதிப்பே அவருடைய மற்றைப் பதிப்புகள் தொடர்ந்து வெளிவருவதற்கு வழிவகுத்துத் தந்த மாண்பினதும் ஆகும். இதனை ஆராய்தற்குக் கொண்ட முயற்சியே தமிழ் இலக்கியப்பரப்பை யெல்லாம் உணர்த்தி, அவர்தம் பணியின் விரிவை எடுத்துரைத்தது.

சிந்தாமணியை நெடுங்காலம் ஐயர் ஆராய்ந்தார். ஏடுகளை மிகுதியாகத் தொகுத்து, ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிந்தார். சமண சமயப் புலமை, வடமொழிப் புலமை மிக்கவர்களை அணுகித் தெளிவு செய்தார். அதன் பின்னர்ச்

செபமாகக் கைப்படி எழுதி எடுத்துக் கொண்டு கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு அச்சிடச் சென்றார். 'ராயல்' எட்டுப் பக்க அளவில் ஐந்நூறு பிரதிகள் அச்சிடுவதென்றும், ஒரு படிவத்திற்கு 3-50 ரூபா அச்சுக் கூலி என்றும் முடிவு செய்தார். சென்னையில் இருந்த தமிழறிஞர்களைக் கண்டு தாம் சிந்தாமணி வெளியிட வந்திருக்கும் கருத்தை உரைத்துக் கலந்துரையாடினார். அவர்களுள் ஒருவர் புரசபாக்கம் அட்டாவதானம் சபாபதி முதலியார் என்பவர்.

"என்ன ஐயா! சிந்தாமணியுரையாவது நீங்கள் பதிப்பிக்கிறதாவது? அஃது எளிய செயலா? இம்முயற்சியை நிறுத்திக் கொள்வது நல்லது" என்றார், சபாபதி முதலியார். அவர் மேலும், "நானும், என் ஆசிரியர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரும் இதைப் பதிப்பிக்க எண்ணினோம். படிக்கவும் தொடங்கினோம். கடினம் என்று நிறுத்திவிட்டோம். துறு என்னும் பாதிரியார் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு அதனை விளக்கி விளம்பரம் செய்தார். அதை நிறைவேற்ற அவரால் முடியவில்லை போப் முயன்றார். அவராலும் முடியவில்லை. ஆறுமுக நாவலர் பதிப்பிக்க எண்ணினார். திருச்சிற்றம்பலக் கோவையார் முதற்பதிப்பில் 'இனிவெளிவரும் நூல்கள் என்ற விளம்பரத்தில் சிந்தாமணியின் பெயர் காணப்படுகிறது. அவரும் பதிப்பிக்கவில்லை. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும், சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பதிப்பிக்க எண்ணினர். இது பெரிய தொல்லை எனக் கைவிட்டனர். இப்படி யார் தொட்டாலும் நிறைவேறாத நூலைப் பதிப்பிக்கத் துணிந்தீர்களே" என்று பலப்பல கூறினார். ஐயர் உள்ளம் தமிழ் செய்த தவப்பயனால் அசையாமல் அயராமல் துணிந்து நின்றது. பதிப்பைத் தொடங்கினார்; தொடர்ந்து நடத்தினார்.

சிந்தாமணியை ஆராயத் தூண்டிய சேலம் இராமசாமி முதலியார், விரைந்து வெளியிடத் தூண்டிய சி.வை. தாமோதரம் பிள்ளை, சமண சமயக்கோட்பாடுகளை

விளங்கவுரைத்த வீடூர் சந்திரநாத செட்டியார், பதிப்பு முறைக்கு வழிகாட்டிய தேரழுந்தூர் சக்ரவர்த்தி இராச கோபாலசாரியார், ஒப்புநோக்கி உதவிய திருமானூர் கிருஷ்ணையர், ஏடுகள் பலவற்றைத் தந்தும் தருவித்தும் உதவிய திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் ஆகியவர்களை நினைவுகூர்ந்து பாராட்டுகிறார் சாமிநாதையர்.

"சிறந்த நூலாகிய சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தக்க தகுதி சாமிநாதையர்க்கு இல்லை" என்பது ஒரு புரளி. "சிந்தாமணி நச்சினார்க்கினியருரையுடன் பதிப்பாகிக் கொண்டிருக்கிறது; விரைவில் வெளிவரும்" என்று வேறொரு 'கட்டுக்கதை'. "சாமிநாதையர் சிந்தாமணியை உரையுடன் பதிப்பிப்பதாகத் தெரிகிறது. அது நச்சினார்க்கினியர் உரையாக இருந்தால்தான் தமிழ் நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப் படும்; சாமிநாதையர் உரையாக இருந்தால் பயன்படாது" என்பது இந்து செய்தித்தாளில் ஒருவர் எழுதிய மறுப்புரை;"சைவமடத்துக்கு வேண்டிய சாமிநாதையர் உமாபதி சிவாச்சாரியார் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி' என்று சொல்லியிருக்கும் சைன நூலை அச்சிட்டது தவறு" என்று மடத்திலேயே கண்டித்தனர். கண்டித்த அளவுடன் நில்லாமல், அந்நூல் பரவாமல் இருப்பதற்குத் தக்க முழுமுயற்சியும் செய்தல் வேண்டும் என்று சீரடியார்கள் தீர்மானமும் செய்தனர். இவ்வளவுக்கும் மேலேயும் சிந்தாமணிப் பதிப்புப் பற்றிய எதிர்ப்பு தாவியது. பதிப்பில் இவை இவை பிழையெனச் சிலர் எழுதினர். எழுதினவற்றுள் உண்மையான பிழைகளும் உண்டு. திருத்தத் தக்கனவும் உண்டு. ஆனால் பிழை கூறியவர்கள் நோக்கம் 'திருந்த' வேண்டும் என்பதனைப் பார்க்கிலும், பதிப்பாசிரியர் 'வருந்த' வேண்டும் என்பதிலே மிக்கிருந்தது. அவர்கள் வெளிப்படுத்திய துண்டுவெளியீடுகள் பெருநகரங்களிலெல்லாம் பரவின. சிந்தாமணிப் பதிப்புக்கு உதவியவர்கள் வீடுகளுக்கெல்லாம் தேடிச் சென்றன. சாமிநாதையர் பணியாற்றிய கும்பகோணத்து வீதிகளில் எல்லாம் உலாக்

கொண்டன. பதிப்புப் பணியில் ஈடுபடுவதா? பழிப்புரைக்குப் பதிலெழுதிப் பொழுதைக் கழிப்பதா?

இவ்வளவு மறுப்புக்கும் கண்டனத்திற்கும் இடையே சிந்தாமணி தமிழ்க்கடல் என்னும் பொருள் தரும் 'திராவிட ரத்னாகரம்' என்னும் அச்சுக்கூடத்தில்இருந்து வெளிப்பட்டுத் தண்ணொளி பரப்பிக் கொண்டிருந்தது! என்றும் பரப்பிக் கொண்டும் இருக்கும்.

சிந்தாமணியின் முதற்பதிப்பு 1887 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளிப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1907 ஆம் ஆண்டு திசம்பர் மாதமும், மூன்றாம் பதிப்பு 1922 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதமும், நான்காம் பதிப்பு 1942 ஆம் ஆண்டு அக்டோபர் மாதமும் வெளிப்போந்தன. ஒவ்வொரு பதிப்பும் புதுப்புது விளக்கங்களையும் வளர்ச்சியையும் பெற்றன.

### சிலப்பதிகாரம்
### புகார்க்காண்டம் 1876

ஐம்பெருங் காவியங்களுள் முன்னதாகிய சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டம் 1876 இல் வெளிவந்தது. இது மூலம் மட்டுமே அமைந்த வெளியீடாகும். இதனை வெளியிட்டவர் சென்னை மாநிலக் கல்லூரி முதன்மைத் தமிழ்ப் பேராசிரியர் தி.ஈ. சீனிவாச ராகவாசாரியார். இந்நூல் ஊ. புஷ்பரத செட்டியாரின் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றது.

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாரால் செய்யப் பெற்றது என்பதை எவரும் அறிவர். ஆனால் அந்நூல் நிலைமை அஃதன்று. "சேரமான் பெருமாணாயனார் இயற்றிய சிலப்பதிகாரம்" என அச்சிடப்பெற்றது. ஆசிரியர் இயற்பெயர் முதலாகிய சரித்திரம் ஒன்றும் தெரியவில்லை. இவருடைய தமயன் பெயர் செங்குட்டுவன் என்பது மாத்திரம் தெரிகிறது என முகவுரையில் பதிப்பாசிரியர் எழுதினார்.

"கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி – அரும்பவிழ்தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி"

என்னும் காப்புப் பாடலைக்கொண்டு இம்முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

சேரமான் என்றதும் பதிப்பாசிரியர் எண்ணம் சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்தது. பின்னர்த் தவறென உணர்ந்தது. இதனை "இந்தச் சேரமான் அறுபத்து மூவருள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனாராய் இருக்கலாம் என்று முன் முகவுரையில் ஒருவாறு எழுதினேன். ஆயினும் நன்றாய் நோக்குமளவில் அது தவறாய் முடிகின்றது" என்று எழுதுகின்றார்.

காதைப் பெயர்களுள் அரங்கேற்று காதை 'அரங்கேற்றக் காதை' என்றும், இந்திரவிழவூர் எடுத்த காதை 'இந்திரன் விழவூர் எடுத்த காதை என்றும், கடலாடு காதை 'கடலாட்டுக் காதை' என்றும் அச்சிடப் பெற்றுள்ளன. "தகுந்த பிரதிகள் கிடைக்காமையால் சிறிது பிழை இருக்கக் கூடும்" என்கிறார். பாடவேறுபாடுகள் காட்ட முயன்றிருக்கிறார். அம்முயற்சியால் கானல்வரியில் ஒன்றும், கனாத் திறத்தில் ஒன்றும் ஆக இரண்டு பாட வேறுபாடுகளே காட்டப் பெற்றுள்ளன. ஆதலால் ஒத்துப்பார்ப்பதற்கு ஒரு பிரதியேனும் கிடைத்திருக்கிறது என்பது புலப்படுகின்றது. ஆய்வுக்குக் கிடைத்த சுவடிக் குறிப்பு ஒன்றும் இல்லை.

### சிலப்பதிகாரம்
### புகார்க்காண்டம் உரையுடன் 1880

இதனை வெளிப்படுத்தியவர் பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மாணவர் தி.க. சுப்பராயசெட்டியார். இவர் கானல் வரிக்கு எழுதிய உரையுடன் இப்பதிப்பு வெளிவந்தது. மற்றைப் பகுதிக்கு

அடியார்க்குநல்லாருரையை அடிப்படையாக வைத்துக் கொண்டு இவ்வரே உரை வரைந்துள்ளார். இப் புகார்க் காண்டம் சென்னை மெமோரியல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. பதிப்பிக்கப் பெற்ற காலம் "விக்கிரம ஸு சித்திரை மீ".

### சிலப்பதிகாரம்
### அடியார்க்கு நல்லாருரை
### அரும்பதவுரை ஆகியவற்றுடன்
### 1892

சிலப்பதிகார முதற்பதிப்பு வெளிப்பட்டுப் பதினாறு ஆண்டுகளின் பின்னே வெளிவந்த பதிப்பு இது. இதனைப் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர். ஒன்றிரண்டு சுவடிகளையே கொண்டு ஆராய்ந்து மற்றவர்கள் பதிப்பித்தனர். இவர்தம் முதற்பதிப்புக்குப் பதினான்கு உரைச் சுவடிகளும், எட்டு மூலச் சுவடிகளும், இரண்டாம் பதிப்புக்கு மூன்று கையெழுத்துப் படிகளும் கிடைத்தன. இதற்காகப் பட்ட பாடுகள் இவ்வளவு என்று கூறமுடியாது. சிலப்பதிகார அரும்பத உரைச் சுவடி ஒன்றே ஒன்று கிடைத்தது. அதுவும் சிதைவு உடையது. அதனை வழங்கியவர் தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாசாரியார் என்பவர்.

சிலப்பதிகாரத்தின் இரண்டாம் பதிப்பு 1920 ஆம் ஆண்டு வெளியாயிற்று. முதற்பதிப்பில் நூலின் இறுதியில் தனியே அச்சிடப் பெற்றிருந்த அரும்பதவுரை அவ்வப்பக்கத்திலேயே அச்சிடப் பெற்றது. 'என' என்று முடிந்த அகவற்பாவின் ஈறுகள் 'என்' என, மாற்றப் பெற்றன. மேற்கோள் பகுதியும் அவ்வப்பக்கத்திலேயே அச்சிடப் பெற்றது. முகவுரையை அடுத்து இருந்த தொகையகராதி முதலியன 'அரும்பத முதலியவற்றின் அகராதி' என நூலின் இறுதியில் இணைக்கப் பெற்றது. இவ்வாறே பல செப்பங்களை இரண்டாம் பதிப்புப் பெற்றது. பிற்பதிப்புகளிலும் இவ்வாறே சிலச்சில திருத்தங்கள் இடம் பெற்றன.

ஐந்தாம் பதிப்பு 1950 ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்பொழுது ஐயர் தம் நூற்பதிப்பை மேற்கொண்டிருந்தவர் அவர் திருமகனார் கலியாணசுந்தரையர் அவர்க்குச் சென்னை அரசினர் கையெழுத்துச் சுவடி நூல்நிலையத்தில் அரும்பத உரைப் பிரதி ஒன்று இருப்பது அறியவந்தது. ஆங்குச் சென்று அதனைப் படியெடுத்துப் பதிப்பிட்ட அரும்பதவுரையுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். அதில் கண்ட வேறுபாடுகளை அப்பதிப்பிலே பின்னிணைப்பாக இணைத்தார்.

## கலித்தொகை மூலமும் உரையும்
## 1887

கலித்தொகையின் முதற்பதிப்பு 1887ஆம் ஆண்டில் வெளிவந்ததே ஆகும். இதனைச் சுவடிகளில் இருந்து ஆய்ந்து வெளியிட்டவர் அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆவர். இவ்வெளியீடு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும்.

கலித்தொகையின் பதிப்புரை முப்பத்து நான்கு பக்கங்களைக் கொண்டது. அதில் மற்றைப் பதிப்பாளர் நோக்கம் யாது என்பதையும் தம் நோக்கம் யாது என்பதையும் ஒரு பகுதியில் வெளிப்படுத்துகிறார்.

"இக்காலத்தில் புத்தகங்களைத் தேடிப் பரிசோதித்து அச்சியற்றும் வித்துவான்களோ தமக்குப் பொருள் வரவையே கருதி விரைவில் விலைபோகும் விநோத நூல்களையும், பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான பாடப்புத்தகங் களையும், சர்வகலாசாலையாரால் பற்பல பரிக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட போதனா பாகங்களையுமே அச்சிடு கின்றனர். சரஸ்வதியின் திருநடனம் சொலிக்கப் பெற்றன வாகிய சங்க மரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் அவர்களுக்குச் சற்றேனும் திருட்டி சென்றிலது.

"இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்து போகும் சுவடிகளை இயன்றமட்டும் தேடி அவற்றுள்

தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல். சொல். சேனாவரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், திருத்தணிகைப் புராணமென்று இன்னவற்றைப் பல தேசப் பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன். இதனால் எனக்குப் பிரதிகள் விலை போகாமல் மூவாயிரத்தைந்நூறு ரூபாவரை திரவிய நஷ்டம் நேரிட்டது''.

கலித்தொகை ஏடுகள் தொகுக்க அவர் பட்ட துயரும் சுவடிகள் இருந்த நிலைமையும் பிறவும் முன்னுரையில் விள்ங்கும். "ஏடு எடுக்கும் போது ஓரஞ்சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால் வாலும் தலையுமின்றி நாலுபுறமும் பாணக் கலப்பை மறுத்துமறுத்து உழுது கிடக்கிறது'' என்று இவர் எழுதும் பகுதி தன்மைநவிற்சியணிக்கு ஒப்பற்ற ஓர் எடுத்துக்காட்டாக இலங்கத்தக்கது; உண்மையாக உணர்ந்த உணர்வே உரை வடிவு கொண்டு திகழ்கின்றது.

கலித்தொகை முதலாய சங்கநூல் மாண்பைப் பதிப்புரையில் சுட்டியுள்ளார். "ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ? என்று இலக்கணக் கடலாகிய ஈசான தேசிகர் கூறியது இந்நூல்களில் பயிலாமைக்குச்சான்று'' என்றும், "இது சமஸ்கிருத மொழி தமிழோடு வந்து கலக்கப் பெறாத தூய தமிழ்க் காலத்ததென்பது இப்பாடல்களுள் வடமொழி மணமும் இல்லாமையே தெரிவிக்கும். நற்றிணை முதல் புறநானூறு ஈறாகக் கிடந்த தொகையனைத்தும் இப்பெருஞ் சிறப்பு வாய்ந்தனவாகும்'' என்றும் கூறுகிறார்.

### கலித்தொகை மூலமும் உரையும்

### 1924

இப் பதிப்பு இ.வை. அனந்தராமையருடையதாகும். தஞ்சை மாவட்டம் இடையாற்றுமங்கலம் என்னும் ஊரினர் இவர். வைத்தீசுவர ஐயர் தைலம்மாள் என்பார் இவர்தம்

பெற்றோர். பல்வேறு உயர்நிலைப்பள்ளிகளிலே பணி யாற்றிய இவர் பின்னே மாநிலக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறையிலும் அமர்ந்தார். சாமிநாதர் பதிப்புக்கு உடனிருந்து உதவினார். இவர்தம் பதிப்பு சாமிநாதர் பதிப்பை நினைவூட்டுவதாக உள்ளது. கைந்நிலை, ஐந்திணை எழுபது, களவழி நாற்பது என்பனவும் இவர் பதிப்பித்தார்.

"ஸ்ரீ மான் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பதிப்பித்த கலித்தொகையை ஊன்றிப் படிக்கும் காலத்தில் பலவிடத்து மூலமும் உரையும் செய்திகளும் பொருந்தாமை கண்டு பல்வேறு வழிகளில் மிக முயன்று அவற்றின் உண்மைகளை யறிந்து அமைத்துக் கொண்டேன். அவற்றுட் சிற்சில பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் உ.வே. சாமிநாதையர் அவர்களுடன் நான் வேறு நூலாராய்ச்சி செய்யும் காலத்தில் அவர்களிடம் சொல்லும்படி நேர்ந்தன. அவற்றைக் கேட்ட பொழுது அவர்கள் இவ்வரிய விஷயங்கள் விளங்கும்படி குறிப்புகள் எழுதி நீங்கள் இந்நூலைப் பதிப்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

இக்கலித்தொகையைப் பதிப்பிக்க என் அகத்தே துணிவைத் தந்தது புறத்தின் ஓரடியாகிய,

'பெரிதே உலகம் பேணுநர் பலரே'

என்பது" என்கிறார். புதிய பதிப்பு வருதலின் தேவையை இம் முன்னுரை தெளிவிக்கின்றது.

### சூளாமணி

### 1889

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான சூளாமணி 1889ஆம் ஆண்டில் அறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளையால் முதற்கண் வெளிப்படுத்தப் பெற்றது. தாமோதரனார்க்குக் கிடைத்த சூளாமணிச் சுவடிகள் 8. அவை:

| | |
|---|---|
| திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் சுவடி | 1 |
| திருவாவடுதுறை ஆதீனம் மகாலிங்கையர் சுவடி | 1 |

| | |
|---|---|
| கரூர் வேங்கட ராமையங்கார் சுவடி | 1 |
| பெருமண்டூர் சைனர் ஒருவர் சுவடி | 1 |
| வேதாரணியம் அனந்தவிசய முதலியார் சுவடி | 1 |
| வீடூர் அப்பாசாமி சாத்திரியார் சுவடி | 1 |
| வி. கனகசபைப் பிள்ளை சுவடி | 1 |
| காஞ்சிபுரம் சுவடி | 1 |

இவற்றுள் ஐந்தாம் சுவடி தஞ்சை நீதிபதி கனகசபை முதலியார் உதவியால் கிடைத்தது. ஆறாம் சுவடி விழுப்புரம் முன்சீப் இராமச்சந்திர ஐயர் உதவியால் கிடைத்தது. ஏழாம் சுவடியைத் திருச்சிராப்பள்ளியில் இருந்த ஒரு தமிழாசிரியர் வாங்கி வைத்திருந்தார். அவர் இறந்து போகக் கும்பகோணம் தலைமைக் காவலர் ஒருவரிடம் அஃதிருந்தது. அதனை ஆங்கு ஆய்வாளராக இருந்த கிருஷ்ணசாமி நாயுடு என்பார் வாங்கியனுப்பியிருந்தார்.

இப்பொழுதுபோலப் பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு, பெருங்காவியம், சிறுகாவியம் என்பன எவை என்பதைத் தெளிவாக அறியாதிருந்த காலம் அது. ஆகலின் "சூளாமணி இரண்டாவது காவியமென அதன் பிரதிகளிலிருக்கும் குறியீட்டினால் தெரிய வருகின்றது. முதலாவது காவியம் எது வென்றும் மற்றைய காவியங்களின் வரிசைக் கிரமம் இன்னதென்றும் விளங்கவில்லை." எனத் தாமோதரனார் எழுதினார்.

தாமோதரனார் சூளாமணிப் பதிப்பைத் தொடங்கு முன்னரே பல நூல்களைப் பதிப்பித்திருந்தார். 1881இல் வீரசோழியமும், 1883இல் தணிகைப் புராணமும், 1885இல் தொல். பொருளதிகாரமும், 1887இல் கலித்தொகையும் பதிப்பித்திருந்தார். இச் சூளாமணிப் பதிப்பை எடுத்துக் கொண்ட இவ்வாண்டிலே இலக்கண விளக்கப் பதிப்பையும் மேற்கொண்டிருந்தார்.

## சூளாமணி குறிப்புரையுடன்
## 1954

இப்பதிப்பு டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக வந்ததாகும்.

சூளாமணிப் பிரதி ஒன்று டாக்டர் ஐயரால் ஆராய்ந்து குறிப்புகள் எழுதி வைக்கப் பெற்று இருந்தது. அச்சுவடி அவர் பெயரால் அமைந்துள்ள நூல் நிலையத்தில் இருந்தது. அதனை மூலமாக வைத்துக்கொண்டு, மற்றைப் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பாட வேறுபாடு குறிக்கப் பெற்றது. இவ்வகையில் ஒப்பிட்டு ஆராய்வதற்குக் கிடைத்த சுவடிகள் 5 ஆகும்.

## சூளாமணி மூலமும் உரையும்
## 1962

சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த சூளா மணியை ஏட்டுப்படிகளுடன் ஒப்பிட்டுத் திருத்தம் செய்த பதிப்பு இது. ஓரோ ஓர் செம்மையான சுவடி கிடைப்பினும் நல்ல பல திருத்தங்கள் கிடைத்தலுண்டு. அவ்வகையில் சில சுவடிகளைத் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தொகுத்தார். அப்பொழுது அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கினார். அத்துறையில் பணியாற்றிய ஔவை சு. துரைசாமி பிள்ளையும், க. வெள்ளைவாரணனாரும் அச்சுப்படியைக் கைச்சுவடி களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து திருத்தம் செய்திருந்தனர். பாடவேறுபாடுகளும் காட்டியிருந்தனர். அத்திருத்தப் புத்தகத்தைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பெற்றது. கழகப் புலவர் சு.அ. இராமசாமிப் புலவர், பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் ஆகியவர்களைக் கொண்டு உரையும் விளக்கமும் எழுதச் செய்து வெளியிட்டது. ஏட்டுச்சுவடிகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பெற்ற பதிப்பு இஃதாகலின் இதனைக் குறித்தலும் வேண்டுவதாயிற்று.

இவ்வாராய்ச்சிக்குப் பயன்பட்ட சுவடிகள் நான்கு என்பதும் அவற்றை வீடூர் பூர்ணசந்திர நயினார் உதவினார் என்பதும் கழக வெளியீடாகிய புறநானூற்றின் முன்னுரையால் விளங்குகின்றது.

### பத்துப்பாட்டு

பத்துப்பாட்டின் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை சமயப் போற்றுதலும், ஓதுதலும் உடைய நூலாகலின் அதுமட்டும் தனியே மிக முற்பட்டே வெளிப்போந்தது. அதன் பலப்பல பதிப்புகளும் வந்தன.

### திருமுருகாற்றுப்படை
### 1839

இவ்வாண்டில் வந்த இப் பதிப்பே முதற்பதிப்பு ஆகலாம். இதற்கு முன்னே ஏதேனும் பதிப்பு உண்டா என்பது தெரியவில்லை. இது பதவுரையுடன் கூடிய பதிப்பாகும். நச்சினார்க்கினியர் உரையைத் தழுவிச் செய்யப்பட்ட பதவுரை என்னும் குறிப்பு நூலில் உள்ளது.

இதனை ஆராய்ந்து அச்சிட்டவர் இலக்குமணன் என்பவர். இவர்தம் தந்தையார் அரங்கனார் என்பவர். இதனை இந்நூலில் உள்ள கட்டரம்பாக்கம் சுப்பராமையர் சொல்லிய சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

"எழுதா எழுத்தில் எழுது வித்தனன்
அரங்க மகிபன் அளித்தருள் புதல்வன்
இலக்கு மணனென் றியம்பு நாவலன்"

என்பது அது.

### திருமுருகாற்றுப்படை
### 1853

இதனை ஆராய்ந்து பதிப்பித்தவர் நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவார். இவ்வுரையும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி ஆறுமுக நாவலரால் எழுதப் பெற்றது

என்பது அறியக் கிடக்கிறது. இந்நூல் பிரமாதீச ஹு ஐப்பசி மீ வெளியிடப் பெற்றுள்ளது.

**பத்துப்பாட்டு**
**நச்சினார்க்கினியர் உரை**
**1889**

இப்பதிப்பை முழுமையாக முதற்கண் வெளிக் கொணர்ந்தவர் டாக்டர் சாமிநாதையர் ஆவர். பத்துப் பாட்டுள் முருகாற்றுப்படை மட்டுமே அவர் வெளியீட்டுக்கு முன்னே வெளியிடப் பெற்றிருந்தது. அவர் பத்துப்பாட்டை முறையே ஆராய்ந்து வெளியிட்டமையாலேயே அறிஞர் உலகம் பத்துப் பாட்டுகள் எவை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. பழந்தமிழ்ச் சுவடிகளைத் தேடி ஐயர் தொகுத்து ஆராய்ந்த தொடக்ககாலத்தில் அவருக்கே பத்துப் பாட்டுகள் எவை என்பதை அறிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

சிந்தாமணியை ஐயர் பதிப்பித்துவந்தபோது நச்சி னார்க்கினியர் காட்டும் மேற்கோள்கள் வந்துள்ள இடங் களைக் கண்டுபிடிப்பதற்காகப் பழஞ்சுவடிகளை ஆராய்ந் தார். ஒரு நாள் இரவு ஒரு பழஞ்சுவடியை எடுத்தார். அதில் முதலும் இல்லை. ஈறும் இல்லை. 'பொருநராற்றுப்படை' என்ற பெயர் முதலேட்டில் இருந்ததது. பின்னே சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி ஆகியவை தொடர்ந்திருந்தன. அதனைப் பார்க்கும்போது "முருகு பொருநாறு"என்ற தனிப்பாடல் நினைவுக்கு வந்தது. திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய சுவடி அது. தம்மிடமே அச்சுவடி யிருந்தும் அதனைப் பத்துப்பாட்டு என்பதை அப்பொழுது தான் உணர்ந்துகொண்டார். "நான் பத்துப்பாட்டைக் கண்டுபிடித்தேன்" [1] என்று மகிழ்ந்தார். ஓர் அரிய புதையல் கிடைத்ததாகப் பூரிப்படைந்தார்.

சிந்தாமணிப் பதிப்பு செவ்வையாக நிறைவேறியது. அந்நிலையில் இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர்

1. என் சரித்திரம் பக். 821 23

பேரராகிய குமாரசாமி ஐயர் என்பவர், "இந்தாருங்கள் பத்துப்பாட்டு" என்று சொல்லி ஓர் ஏட்டுச் சுவடியைத் தந்தார். அவர் பழம் புலவர்கள் வீடுகளில் பயனின்றிக் கிடக்கும் ஓலைச் சுவடிகளைக் காசில்லாமலோ, ஒரு சிறு தொகை தந்தோ வாங்கித் தக்கவர்களிடம் சேர்ப்பித்து ஒரு தொகை வாங்கிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமிழ் வளர்த்த வழிமுறையில் வந்த அவர் தம் முன்னோர் போலத் தொண்டுசெய்ய இயலவில்லை எனினும் இத் தொண்டைத் தேர்ந்து கொண்டதும் பாராட்டுக்குரியதே. அவர் தொண்டால் சில அரிய சுவடிகள் காக்கப் பட்டிருக்கவும் கூடும். அவர் வழங்கிய பத்துப்பாட்டுச் சுவடியைக் கண்ட சாமிநாதர், "தமிழன்னையே இவர் மூலம் மேலும் தமிழ்த்தொண்டு புரியவேண்டுமென்று கட்டளையிடுகிறாள்" என்று கருதினார். அடுத்துப் பத்துப்பாட்டையே பதிப்பிக்க உறுதி கொண்டார்.

பத்துப்பாட்டுச் சுவடியைத் தேடிக்கொண்டு பல ஊர்களுக்குச் சென்றார். திருநெல்வேலியைச் சேர்ந்த வண்ணார்பேட்டையில் உள்ள திருப்பாற்கடனாதன் கவிராயர் வீட்டில் பத்துப்பாட்டின் பழஞ்சுவடி ஒன்று கிடைத்தது. பின்னே ஆழ்வார்திருநகரி சென்று புலவர்கள் வீடுகளிலெல்லாம் தேடினார். இலட்சுமண கவிராயர் உதவியால் முருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுகள் அடங்கிய சுவடியொன்று கிடைத்தது. ஆயினும் என்ன?

கிடைத்த சுவடிகளை வைத்துக் கொண்டு ஆராய்ந்தார். சிலவற்றில் பத்துப் பாட்டுகளும் இல்லை. ஒன்றிலேனும் தனியே மூலம் இல்லை. திருத்தமான சுவடி எங்கே கிடைக்கும் என்று தேட வேண்டிய நிலைமையே உண்டாயிற்று. திருவாவடுதுறைத் திருமடத்துத் தலைவர் பத்துப்பாட்டுச் சுவடிகளைப் பெற்றுத்தரப் பெரு முயற்சி செய்தார். அவர் முயற்சியால் ஒரு சுவடி கிடைத்தது.

அது வீரபாண்டியக் கவிராயர் சுவடியைப் பார்த்து, தூத்துக்குடி கால்டுவெல் கல்லூரித் தமிழாசிரியர் குமாரசாமிப் பிள்ளை எழுதிய சுவடியாகும். அதிலும் மூலம் இல்லை. ஆனால் பத்துப்பாட்டுகளும் அமைந்திருந்த திருத்தமான சுவடி அது. அதனை ஆராய்ந்த போது, குறிஞ்சிப்பாட்டின் ஒருபகுதி விட்டுப் போயிருந்தது. எல்லாச் சுவடிகளிலும் அப்பகுதி விடுபெற்றே இருந்தது. குறை சிறிதானால் என்ன? பெரிதானால் என்ன? குறை குறைதானே!

சாமிநாதர் தருமபுரத் திருமடத்திற்குச் சென்றார். அரிது முயன்றும் பத்துப்பாட்டுச் சுவடி கிட்டவில்லை. ஆனால் சில ஒற்றையேடுகள் கிடைத்தன. திருவருட் செயலால் அவர் எப்பகுதி இல்லை என்று தேடிவந்தாரோ, அப்பகுதிக்குரிய குறையை நிரப்பும் ஏடு கிடைத்தது.

முதற்பதிப்புக்கு மூலச்சுவடி கிடைக்கவே இல்லை. நச்சினார்க்கினியர் உரையைக் கொண்டே மூலத்தை ஒழுங்கு செய்து பதிப்பித்தார். அப்பதிப்பின் பின்னே ஏடுகள் தேடிய காலத்தில் களக்காட்டில் இருந்து ஒருசுவடி கிடைத்தது. அது பத்துப்பாட்டின் மூலம் முழுவதும் அடங்கிய பழஞ் சுவடியாகும். அதனைத் தெற்கு மடம் சாமிநாத தேசிகர் என்பவர் வழங்கினார்.

பத்துப்பாட்டின் முதற்பதிப்பு 1889 இலும், இரண்டாம் பதிப்பு 1918 இலும் வெளிவந்தன. முதற்பதிப்பினும் இரண்டாம் பதிப்பு 300 பக்கம் மிகுதியாயிற்று. 1931 இல் மூன்றாம பதிப்பும், அதே ஆண்டில் பத்துப்பாட்டின் மூலமும் வெளியாயின.

### மணிமேகலை மூலம்

### 1891

மணிமேகலையின் மூலம் 1891ஆம் ஆண்டில் திருமயிலை சண்முகம் பிள்ளையால் அச்சிடப் பெற்றது [1]

1. என் சரித்திரம் பக். 1018 19

என்னும் செய்தியைச் சாமிநாதர் குறிப்புகளால் அறிய முடிகின்றது. அதனைப் பதிப்பிக்கும் காலத்திலேயே அதைப்பற்றி நன்கு அறிந்திருந்த தி.த. கனகசுந்தரம் பிள்ளை 29.2.1891 இல் ஒரு கடிதம் வரைந்தார். மணிமேகலையில் அச்சிடப் பெற்ற மூன்று படிவங்களைப் பார்த்த பின்னர் அக்கடிதத்தை வரைந்துள்ளார். மணிமேகலைப் பதிப்பைச் சாமிநாதர் எடுத்துக் கொண்டபோது (1898) "அப்பதிப்பு வெளிவந்து ஏழு வருஷங்கள் ஆனமையின் நான் செய்த ஆராய்ச்சியின் பயனாகப் பலவகைக் குறிப்புகளுடன் மணிமேகலையை வெளியிடுவதில் பிழையில்லை என்று கருதினேன்." என்று குறிப்பிடுகிறார். ஆதலால் 1891 இல் சண்முகம் பிள்ளை மணிமேகலையைப் பதிப்பித்தார் என்பது விளங்குகின்றது. ஆனால் அப்பதிப்பு நூலைக் காண்டற்கு இயலவில்லை. 1894 ஆம் ஆண்டில் வெளிவந்த நூலை அறிய முடிகின்றது.

## மணிமேகலை மூலம்
## 1894

கையில் கிடைத்துள்ள அளவில் மணிமேகலையின் முதற்பதிப்பு இதுவேயாகும். புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் மாணவர் திருமயிலை சண்முகம்பிள்ளை தமக்குக் கிடைத்த சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து அச்சுக்கு அணியம் செய்தார். கயப்பாக்கம் இரத்தின செட்டியார் மைந்தர் முருகேச செட்டியார் சென்னை ரிப்பன் அச்சுக் கூடத்தில் பதிப்பித்தார். வெளியிடப்பெற்ற காலம் 'விஜய ஸ்ரீ தனுர் ரவி' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. சண்முகம் பிள்ளையின் 1891 - ஆம் ஆண்டு மணிமேகலைப் பதிப்பையே முருகேச செட்டியார் பதிப்பாசிரியராக இருந்து மீண்டும் பதிப்பித்திருக்கக் கூடும். இந்நூலின் முற் குறிப்பில் விலை 12 அணா என்றுள்ளது. பிற்குறிப்பில் விலை ரூ. க என்றுள்ளது.

சண்முகனார் மணிமேகலை ஏடுகள் சிலவற்றைக் கொண்டு ஆராய்ந்து மூலத்தை ஒழுங்கு செய்து கொண்டார்.

பதிகத்திலும், மணிமேகலை முப்பது காதைகளிலுமாகப் பாடவேறுபாடுகள் 21 காட்டியுள்ளார். பின்னேயும் சில சுவடிகள் கிடைத்தன. அச்சுவடிகளால் மேலும் சில திருத்தங்களும் பாடவேறுபாடுகளும் கிடைத்தன. அவ்வகையால் கிடைத்த பாட வேறுபாடுகள் 51 ஆகும். ஆக மொத்தம் 72 பாடவேறுபாடுகள் இவர் பதிப்பில் காட்டப் பெற்றுள்ளன. ஆனால் டாக்டர் சாமிநாதையர் பதிப்பில் 1357 பாடவேறுபாடுகள் காட்டப் பெற்றுள்ளன. இவற்றால் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் சுவடிப் பெருக்கமும் இனிதின் விளங்கும்.

## மணிமேகலை அரும்பதவுரையுடன்
## 1898

இது டாக்டர் சாமிநாதையர் பதிப்பாகும். நான்கு ஆண்டுகளின் முன்னே திருமயிலை சண்முகம் பிள்ளையின் மணிமேகலை மூலப்பதிப்பு வந்ததைச் சாமிநாதையர் அறிவார். அதனை ஆராய்ந்து பார்த்தார். அதில் திருத்தம் பெறவேண்டிய பகுதிகள் மிகுதியாக இருப்பதை உணர்ந்தார். அவர் தொகுத்து வைத்திருந்த சுவடிகள் அவர் செய்ய வேண்டிய திருத்தங்களை எடுத்துரைத்தன. அன்றியும் அறிஞர்கள் சிலரும் மணிமேகலைப் பதிப்பு உரையுடன் வெளிவருதலை மிக விரும்பி வலியுறுத்தினர். குறிப்பாக யாழ்ப்பாணம் தி.த. கனகசுந்தரம் பிள்ளை "ஏட்டுப் பிரதியில் இருக்கின்றபடியே இருக்கின்றது. ஏட்டுப்பிரதியில் இருப்பது இதிலும் நலமென்று சொல்லலாம். ஏட்டில் சொக்கலிங்கம் என்றிருப்பதை ஒருவர் முழுவதும் கலிங்கமென்று பொருள் பண்ணி வாசித்தபோதிலும், மற்றொருவராவது சந்தர்ப்பம் நோக்கிச் சொக்கலிங்கமென்று வாசிப்பார். இவர்கள் அதனைச் சேரக் கலிங்கமென்று அச்சிலிட்டதன்பின் ஏட்டைக் காணாதவர்களெல்லாம் சேரக் கலிங்கமென்றுதானே படிக்க வேண்டும்? 'எட்டிக் குமரன் இருந்தோன் தன்னை' என்பது 'எட்டிருமானிருந்தோன்' என்றும் 'ஆறறியந்தணர்' என்பது 'ஆற்றியந்தணர்' என்றும்

அச்சிடப்படுமாயின் அதனால் விளையும் பயன் யாதென்பதைத் தாங்களே அறிந்துகொள்ளவும்'' (29.3.1891) என்று எழுதியிருந்தார். தம் வேட்கையும் அன்பர்கள் தூண்டுதலும் மணிமேகலைப் பதிப்பை விரைவு படுத்தின.

## புறநானூறு மூலமும் உரையும்
## 1894

எட்டுத்தொகையுள் எட்டாவதாகிய புறநானூறு 1894 ஆம் ஆண்டில் டாக்டர் சாமிநாதையரால் பழையவுரையுடன் பதிப்பிக்கப் பெற்றது. இதற்கு முன்னே எட்டுத்தொகையுள் பதிப்பிக்கப் பெற்ற ஒரு நூல் கலித்தொகையேயாம்.

கும்பகோணம் கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கியவர் கே.ஆர். துரைசாமி ஐயர் என்பவர். அவர் ஒருநாள் ஓர் ஆங்கிலப் புத்தகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார். அப் பெரிய புத்தகத்தைக் கண்ட சாமிநாதையர் அஃதென்ன புத்தகம் என்பதை அறிய ஆவலுற்றார். 'பைபில்' என்று துரைசாமி ஐயர் கூறினார். ஐயர் 'பைபிள்' புத்தகத்தைப் பார்த்திருக்கிறார். இவ்வளவு தடியாக அஃதிருந்ததில்லை. ஆதலால், 'மிகப் பெரிதாக இஃதிருக்கிறதே' என்றார். துரைசாமி ஐயர் இது சிறந்ததொரு பதிப்பு. ஒரே மாதிரியான சொல்லும் கருத்தும் உள்ள பகுதிகளை அங்கங்கே காட்டிப் பதிப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பக்கத்தின் நடுவிலும் தனியே இந்த ஒப்புமைப் பகுதி இருக்கிறது. இதனைக் 'கன்கார்டன்ஸ்' (concordance) என்று ஆங்கிலத்தில் சொல்வர் என்று கூறி விளக்கினார். அவ் வொப்புமைப் பகுதியால் ஆகும் பயன் என்ன என்றார் ஆர்வமிக்க சாமிநாதர்.

"ஒப்பான பகுதிகளைக் கொண்டு ஆராய்வதால் உண்மையான பொருளும் சில சொற்களின் திருத்தமான வடிவங்களும் புலப்பட்டனவாம்'' என்றார் துரைசாமியார். "அப்போது எனக்குப் புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறை ஒன்று தோன்றியது. புறநானூற்றிலுள்ள விஷயங்களையும் சொற்களையும் முதலிலே அகராதியாகச் செய்துகொண்டு

ஆராய்ச்சி செய்தால் உண்மை உருவத்தைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்குமென்று அறிந்தேன். அங்ஙனமே செய்து வைத்துக் கொண்டேன்"[1] என்று எழுதுகிறார் சாமிநாதர்.

எவ்வளவு பாடுபட்டும் புறநானூற்றின் 267, 268ஆம் பாடல்கள் கிடைக்கவில்லை. அதன் பழைய உரையும் 266ஆம் பாட்டுக்கு மேல் கிடைக்கவில்லை. 1894ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் புறநானூறு பதிப்பிக்கப்பட்டு நிறைவேறியது. இரண்டாம் மூன்றாம் பதிப்புகள் முறையே 1923, 1935 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன.

## புறநானூறு மூலமும் உரையும்
## 1947, 51

புறநானூற்றின் முதல் இருநூறு பாடல்கள் ஒரு தொகுதியாக 1947ஆம் ஆண்டிலும், பின் இருநூறு பாடல்கள் ஒரு தொகுதியாக 1951ஆம் ஆண்டிலும் உரைவேந்தர் ஔவை உரையுடன் கழகப் பதிப்பாக வெளிவந்த பதிப்பாகும் இது.

அரித்துவாரமங்கலம் இர்குநாத ராசாளியார் சுவடி ஔவை பதிப்புக்கு வாய்த்தது. இப் புதிய பதிப்பால் புறநானூறு பெற்றுள்ள விளக்கங்கள் பலப்பல. ஏட்டோடும் ஒப்பிட்ட மறுபதிப்பால் நூல்கள் எய்தும் விளக்கத்திற்கும் செப்பத்திற்கும் இப்பதிப்பு சீரிய சான்றாகும். சங்கப் புலவர்கள் பெயர்களுள் சிலவற்றை உய்த்துணர்ந்தும் பாட வேறுபாடு கண்டும் திருத்தப் பெற்றுள்ளவை வருமாறு:

| | | |
|---|---|---|
| 283 | அடை நெடுங்கல்வியார் | அண்டர் நடுங்கல்லினார் |
| 227 | ஆடுதுறை மாசாத்தனார் | ஆவடுதுறை மாசாத்தனார் |
| 298 | ஆலியார் | ஆவியார் |
| 224 | கருங்குழலாதனார் | கருங்குழவாதனார் |
| 253 | குளம்பாதாயனார் | குளம்பந் தாயனார் |
| 249 | தும்பி சொகினனார் | தும்பைச் சொகினனார் |
| 291 | நெடுங் கழுத்துப் பரணர் | நெடுங்களத்துப் பரணர் |

1. என் சரித்திரம் பக். 986

| | |
|---|---|
| 251 மாற்பித்தியார் | மாரிப்பித்தியார் |
| 296 வெள்ளைமாளர் | வெள்ளை மாறனார் |
| 271 வெறிபாடிய காமக் கண்ணியார் | வெறி பாடிய காமக் காணியார் |

சாமிநாதர் பதிப்பில் 340 ஆம் புறப்பாடலைப் பாடியவர் பெயர் 'அ....' என்னும்அளவில் நின்றுவிட்டது. கழகப்பதிப்பில் 'அள்ளூர் நன்முல்லையார்' எனப் பெயர் முழுமை எய்தியுள்ளது. முன்னைப் பதிப்பில் 337, 346, 357, 362, 370, 377, 379, 384, 393ஆம் பாடல்களில் சிதைவுடன் காணப்படும் சில சொற்களும் தொடர்களும் ' பின்னைப் பதிப்பில் நிறைவுடன் காட்சியளிக்கின்றன. 328, 335, 352, 353, 355, 361, 366, 373, 387, 388, 390, 390, 395, 396, 398, 399, 400 ஆகிய பாடல்களின் சிதைவு இரண்டு பதிப்புகளிலும் மாறும் வாய்ப்பு ஏற்படவில்லை.

267, 268ஆம் பாடல்கள் இரு பதிப்புகளுக்குமே அகப்படாது ஒழிந்தன.

## ஐங்குறு நூறு
## 1903

எட்டுத்தொகையுள் மூன்றாவதாகிய ஐங்குறுநூறு 1903ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதனை முதற்கண் ஆய்ந்து பதிப்பித்தவர் சாமிநாதரே. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இது பதவுரையும் அன்று; பொழிப்புரையும் அன்று. அகத்திணை நூல்களுக்கே உரிய உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் முதலியவற்றை விளக்கிச் சிற்சில இடத்து மட்டும் அருஞ்சொற் பொருளைப் புலப்படுத்துகிறது. இவ்வுரையும் 469ஆம் பாடலுக்கு மேல் இல்லை. இடையேயும் சில பாடல்களுக்கு இல்லை. இவ்வுரை நூலைப் போலவே பொருள் நுணுக்கத்தால் சிறந்தது. இதனைக் கொண்ட சுவடியும் ஒன்றே ஒன்றாம். அது ஆழ்வார்திருநகரி தே. இலட்சுமண கவிராயர் வழங்கியது.

பழையஉரை இல்லாத பகுதிக்கு உரை எழுதிப் பதிப்பிக்கலாம எனச் சாமிநாதர் எண்ணியதுண்டு. ஆனால், "நூலையும், உரையையும் நோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிடடது." என்கிறார். ஐங்குறுநூற்றின் 129, 130 ஆம் செய்யுள்களின இரண்டாம் அடிகளில் சீர்கள் குறைந் துள்ளன. இவற்றை நிறைவு செய்தற்குத் தக்கவாறு சுவடிகள் கிடடவில்லை.

## ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும்

## 1957–58

ஐங்குறுநூற்றின் அருமையும் பெருமையும் விளங்க ஔவை பதிப்பிதத பதிப்பாகும் இது. அண்ணாமலைப் பல்கலைககழக வெளியீடாக முத்தொகுதிகளாய் வெளி வந்தது.

இன்னும தக்க வண்ணம் முயன்றால் பழநதமிழ்ச் சுவடிகள் கிடைக்கக் கூடுமோ என்னும் எண்ணததை ஔவை பதிப்பு உண்டாக்குகின்றது. அவர்தம் ஆய்வுக்கு அவர்தம் இளநதைக கால ஆசிரியரும் திண்டிவனம் ஏ.ஏ.எம். உயர்பள்ளித தமிழாசிரியருமான சீர்காழி கோவிந்த சாமியார் சுவடி ஒன்று கிடைத்தது. அதில் சாமிநாதர் பதிபபில் காணப்படாத சில திருத்தங்கள், சில பாடல் களுககுரிய சில பழையஉரைகள் கிடைததுள்ளன. அவற்றை ஆங்காங்குக் காட்டியுள்ளார ஔவை.

## அகநானூறு மூலமும் உரையும்

## 1904

இப்பதிபபு மதுரைத் தமிழ்ச்சங்கததினின்று வெளி வந்ததாகும். இதனை ஏட்டுச சுவடிகளைக் கொண்டு பழைய வுரையுடன் ஆயந்து வெளியிட்ட அறிஞர இரா. இராகவர் ஆவர இதில் 1 முதல் 36 பாடல்கள் மட்டுமே உரையுடன் உளளன 37ஆம பாடல் மூலமும முதலடிககு மடடும் உரையும அமைநதுள்ளன இப்பதிப்பு 1904ஆம் ஆண்டே

பதிப்பிடப்பட்டது. ஆயினும் 1951ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது என்பது அதன் முகப்பு அட்டையால் புலப் படுகின்றது. இப் பதிப்பின் தொடர்பாகவே இப் பதிப் பாசிரியர் உதவியைக் கொண்டே பின்னே வரும் பதிப்புகள் வந்துள்ளன. ஆசலின் இவ்வுரை பற்றிய குறிப்புகளை மேலே காணலாம்.

## அகநானூறு மூலமும் உரையும்
## 1923

இதனைக் கம்பர்விலாசம் வே. இராசகோபாலர் பதிப்பித்தார். இரா. இராகவர், மு. இராகவர் ஆகிய இருவரும் இப் பதிப்புக்குப் பேருதவி புரிந்துளர்.

சோணாட்டைச் சேர்ந்த இடையள நாட்டு மணக்குடி என்னும் ஊரில் இருந்த பால்வண்ணதேவனான வில்லவ தரையன் என்று பெயர் சிறந்தவர் நெடுந்தொகைக்குக் கருத்து அகவலால் பாடினார் என்ற செய்தி அறியப் பெறுகின்றது. ஆனால் அது கிடைக்கவில்லை. இதற்குப் பழைய உரை ஒன்றுண்டு. அதுவும் முதல் 90 பாடல்களுக்கே கிடைத் துள்ளது. அவ்வுரையேடும் ஒன்றேயாம். அது பற்றி இரா இராகவர், "பழைய்உரையுடன் ஆறுநாட்டுக்குச் சேர்ந்த பெரும் பழனையில் இருக்கும் நல்லையப் புலவர் மகன் பொன்னையன் நெடுந்தொகை" என்று எழுதப்பட்டிருந்தது. திருநெல்வேலியைச் சேர்ந்த நான்குநேரி சேகரத்துப் பெரும்பழஞ்சி என்ற ஊரொன்றுளது. அதுவே இவ்வூர் என்று ஊகிக்கலாம்.

"இப்பழனை ஏடும் 244 ஆம் பாட்டின் 19ஆம் அடி முதல் 292ஆம் பாட்டு முதலடி வரை எழுதப்படாத வெள்ளிதழ் உடையது. இவ்வேடு பிங்கல நிகண்டு அச்சிட்ட ஸ்ரீமான் சிவன் பிள்ளை அவர்களால் தேடி எடுக்கப்பட்டது. இதனை மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனத்திற்கு முன்னே அந்நற்சங்க ஸ்தாபகரும் சிறந்த தமிழபிமானியு

பால்வண்ணநத்தம் ஜமீந்தாருமான ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் ஷெ சிவன் பிள்ளை குமாரரிடத்தினின்று விலை கொடுத்து வாங்கி என்போல் பலரும் கற்றுத் தெளியுமாறு தம் முகவை அரண்மனைப் புத்தக சாலையில் நிலைபெறுவித்தனர்.

இப்படியைப் பெற்று அறிஞர் மு. இராகவர் வழியே படியெடுத்து, ஆராய்ச்சி செய்தவர் இரா. இராகவர். பின்னரச் சங்கத்தில் பதிப்பாசிரியராகவும் செந்தமிழ் இதழாசிரியராகவும் பணியேற்று அகநானூற்றை ஆய்ந்து வெளியிட முயன்றார். அம்முயற்சி நோயால் தடைப்பட்டது. அவ்வேடும் குறிப்பும் பாண்டித்துரையாரால் வாங்கப் பெற்றுச் சாமிநாதர் ஆய்வுக்குத் தரப்பட்டது. அவ்வேடு கொல்லம் 460 இல் எழுதப்பட்டதாகக் குறிப்பு உள்ளமையால் இற்றைக்கு 705 ஆண்டுகளுக்கு முற்பட்ட தெனலாம். இதனை ஆராய்ந்த இராகவர் 1923 ஆம் ஆண்டில் 638 ஆண்டுகளுக்கு முன் என்று குறிப்பிட்டுள்ளார். பனையேட்டின் வாணாள் ஏழு நூற்றாண்டுகளுக்கு உண்டு என்பது வியப்பானதேயாம். அவ்வேட்டைத் தேர்ந்தெடுத்தார் திறமும், பேணிப் போற்றினார் திறமும் அந்நீடு வாழ்வை நல்கினவாம்.

பழையஉரை முதல் 90 பாட்டுகளுக்கு உண்மையால் அவ்வுரையையும் அதற்குமேல் புத்துரையையும் கொண்டு வெளிவந்தது இராசகோபாலர் பதிப்பு. ஆயினும் புத்துரை 90க்கு மேல் 70 பாடல்களுக்கே அமைந்தது. எஞ்சிய பகுதி மூலமாகவே இருந்தது.

இது ருத்ரோத்காரி ஹு ஆனி மீ 13 உ எழுதப் பெற்ற முகவுரையுடன் வெளிவந்தது. இவ்வாண்டு 1923 ஆகும். இதன் பின்னே 1933ஆம் ஆண்டில் (ஸ்ரீ முக ஆவணி) நித்திலக்கோவை மூலப்பதிப்பு இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. அப்பதிப்பை மூலமாகக் கொண்டு கழகப் பதிப்பு '1944, 1946' ஆண்டில் அகநானூறு மூன்று பாகங்களாக வெளிவந்தது.

## பதிற்றுப் பத்து
## 1904

பதிற்றுப்பத்தினைப் பழைய உரையுடன் முதற்கண் வெளியிட்டவர் சாமிநாதரே.

பதிற்றுப்பத்து நூறு பாடல்களையுடையதேனும் முதற்பத்தும் பத்தாம்பத்தும் கிடையாமையால், எட்டுப் பத்துகளுடனும் முதலாம் பத்தையோ பத்தாம் பத்தையோ சார்ந்தனவாய் உரையாசிரியர்களாலும் புறத்திரட்டுத் தொகுப்பாசிரியராலும் குறிக்கப் பெறும் இரண்டு பாடல்களும் மூன்று பாடல் பகுதிகளுமே கிடைத்துள்ளன.

பதிற்றுப்பத்துக்குப் பழையவுரை ஒன்றுண்டு. அது சுருக்கமாக அமைந்த உரையாகும். பதவுரையைப் போன்று விரிவாகவும், குறிப்புரையைப் போன்று சுருக்கமாகவும் இல்லாமல் இடைப்பட்டதாக உள்ளது.

"ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை வண்ணம் தூக்கு பெயர் என்பன உரையில்லாத மூலப் பிரதிகளிலெல்லாம் இருத்தலின் அவை உரையாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்பதும், நூலாசிரியர்களாலோ தொகுத்தாராலோ எழுதப்பட்டன என்பதும், பதிகங்கள் உரைப்படிகளில்மட்டும் காணப்படுதலின் அவற்றை இயற்றினோர் நூலாசிரியரோ தொகுத்தோரோ அல்லர் என்பதும் தெரிகின்றன" என்பார் சாமிநாதர்.

## பதிற்றுப்பத்து மூலமும் உரையும்
## 1950

இப்பதிப்பு உரைவேந்தர் ஒளவை உரையுடன் விளக்கமும் பெற்றுக் கழக வழியே 1950ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்பதிப்புக்கு ஏட்டுச் சுவடிகள் இரண்டு கிட்டிய செய்தியுள்ளது. ஆனால் எவர் ஏடுகள் என்னும் குறிப்புக் காணப் பெறவில்லை. இப்பதிப்பால் பெற்ற திருத்தங்கள் சில. அவற்றுள் ஒன்று:

'அரும்பறை வினைஞர் புல்லிகல் படுத்து' என்பது 'மருபுல வினைஞர் புலவில் படுத்து' என்று திருத்தம் பெற்றுள்ளது. (75)

## நற்றிணை மூலமும் உரையும்
## 1914

*பின்னத்தூர் அ. நாராயணசாமியாரால் உரையுடன் வெளியிடப்பட்ட பதிப்பு ஈதாகும். நூல் அச்சிட்டு முன்னுரையும் முடித்து, பாடினோர் பாடப்பெற்றோர் வரலாறுகளையும் எழுதி வந்தார். பாடப்பெற்றோர் வரலாற்றுள் ஒரு பகுதி எழுதிய அளவில் இயற்கை எய்தினார். அச்சிட்ட படிவத்தை அட்டை கட்டிப் பார்க்கவும் இயலாமல் இயற்கை விளையாடியது! அவர்தம் அருந்தமிழ் அன்புக்கும் அறிவுக் கூர்மைக்கும் நற்றிணை என்றும் அழியாச் சான்றாகும்.*

*234ஆம் பாடலும், 385ஆம் பாடலின் பிற்பகுதியும் கிடையாமையால் மறுபதிப்பில் கிடைத்தால் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதி வெளியிட்டார். இரண்டாம் பதிப்பு 1952 இல் கழகத்தின் வழியே வெளிவந்தது. அதில் 234 ஆம் பாடல் கிடைத்து இணைக்கப்பட்டது.*

## நற்றிணை மூலமும் விளக்கவுரையும்
## 1966

*உரைவேந்தர் ஔவை எழுதிய விளக்கவுரையோடு கூடிய பதிப்பு இஃது. இதனை வெளியிட்டவர் சென்னை அருணா வெளியீட்டகத்தார். ஆய்வுக்குக் கிடைத்த சுவடிகள் நான்குடன் நற்றிணை அச்சுப்படியை ஒப்பிட்டுப் பார்க்கப் பாட வேறுபாடுகள் நிரம்பக் கிடைத்தன. அதனால் புதியதோர் உரையே எழுத வேண்டும் என்னும் எண்ணம் ஔவைக்குத் தோன்றியுள்ளது. "ஏறத்தாழ 1500-க்கு மேற்பட்ட பாட வேறுபாடுகளும் பெயர் தெரியாதிருந்த பல பாட்டுகளின் ஆசிரியர் பெயர்களும் தெரிய வந்தன. சில*

ஆசிரியர்களின் பெயர்கள் திருத்தம் அடைந்தன'' என்று உரையாசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

## குறுந்தொகை மூலமும் உரையும்
## 1915

குறுந்தொகையை அரிதின் ஆய்ந்து முதற்கண் வெளியிட்டவர் திருகண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கனார் ஆவர்.

அய்யம்பேட்டை முத்துரத்தினர் இவரைத் தமிழ்க் கல்வி பெறுமாறு மதுரைக்குச் செல்லத் தூண்டினார். சோழவந்தான் கிண்ணிமடம் சிவப்பிரகாச அடிகளிடமும் அரசஞ் சண்முகனாரிடமும் அருந்தமிழ் கற்றார். வாணியம்பாடி மகமதியர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அரங்கனார்க்குக் கிடைத்த சுவடிகளில் ''ஆய்வளை ஞெகிழவும்'' என்னும் 319ஆம் செய்யுள் கிடைத்திலது. அதனை மதுரைத் தமிழ்ச்சங்கச் சுவடிவழியே பெற்று நிறைவித்தார். முற்றும் உரையெழுதி 1912 இல் முடித்தார்.

ஒருசீர் விடுபட்டது போலும் (24) சிதைந்து காணப்பட்டது (28) அனுமானிக்கப்பட்ட பாடம் (178, 277, 383) இடம் விடப்பட்டுள்ளது (200, 394) வரலாறு புலப்படவில்லை (328, 293) ஒன்பதடிப் பாட்டாக உள்ளது (391) இப்பாட்டு ஆறடியினதாதல் உணர ஒரு பிரதியில் 4,5 அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது (266) எனச் சுவடியில் பாடல் இருந்த நிலையைத் தெளிவிக்கிறார். இன்னவை இவர்தம் பதிப்புச் சீர்மையை உரைப்பன.

மிக முயன்று தேடியும் தகுதி வாய்ந்த சுவடிகள் இவர்க்குக் கிடையாமையால் இவர் பட்டுள்ள இடர்கள் தெளிவாக விளங்குகின்றன. எனினும் குறுந்தொகையுடன் தம் பெயரை நிலைபெறுத்திக்கொண்ட பெருந்தகை அரங்கர் உள்ளமும் உழைப்பும் மிகப் பாராட்டுக் குரியனவாம்.

## குறுந்தொகை மூலம்
## 1920

குறுந்தொகை மூலம் மட்டும் அறிஞர் கா. நமசிவாயரால் 1920இல் வெளியிடப்பட்டது. அது "குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக் கப்பெற்றது. அப்பதிப்பு வெளிப்பட்டு உலாவியதுபற்றி அறியக் கூடவில்லை என்கிறார் வையாபுரியார் (தமிழ்ச் சுடர் மணிகள்).

## குறுந்தொகை மூலமும் உரையும்
## 1930

இராமஇரத்தினம் என்பவரால் எழுதப்பெற்ற புத்துரையுடையது இப்பதிப்பு. இதனைப் புரசபாக்கம் சேசாசலம் என்பார் கலாநிலையம் பதிப்பாக வெளியிட்டார். ஆயினும் புத்தக வடிவில் வெளியாகவில்லை என அறியப்படுகிறது.

## குறுந்தொகை மூலம்
## 1933

இப்பதிப்பு புரசபாக்கம் சர்.எம்.சி.டி. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் சோ. அருணாசலரால் பதிப்பிக்கப் பட்டது. அரங்கனார் பதிப்பைக்கொண்டு வெளிவந்த பதிப்பு இது.

## குறுந்தொகை மூலமும் உரையும்
## 1937

உ.வே. சாமிநாதர் எழுதிய பதவுரை விளக்கவுரை முதலியவற்றைக் கொண்ட பதிப்பு இது. இவர் முழுமையாக உரை விளக்கம் எழுதியது இந்நூலேயாகும். இதன் முகற் பதிப்பு 1937இலும் இரண்டாம் பதிப்பு 1947இலும் வெளிவந்தன.

## பரிபாடல் மூலமும் - உரையும்

## 1918

இதுவும் பெரும்பேராசிரியர் சாமிநாதரால் முதற்கண் வெளியிடப்பட்டதேயாம். எவ்வளவோ முயன்றும் 22 பாடல்களே ஒரு தொடராகக் கிடைத்தன. சில பகுதிகளும், இரண்டு முழுப் பாடல்களும் உரை மேற்கோள்களாலும் புறத் திரட்டாலும் கிடைத்தன. எழுபது பரிபாடல் எனப் பழம் பாடலால் அறியப் பெற்றும் வாய்க்கப் பெற்றவை இவ்வளவே.

முதற்பாடல் அகப்படாத சுவடியில் நூற்பெயர் அறிய வாய்க்குமோ? "பாயிரும் பனிக்கடல் என்னும் பரிபாட் டானுணர்க" என்னும் நச்சினார்க்கினியர் உரை வழியால் (திருமுருகு. 58) பெயர் காணப்பட்ட பெற்றியது இது.

பரிபாடலுக்கு உரையுண்டு. உரையாசிரியர் பெயர் அறியவும் அருமையாயிற்று.

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகப் பெரும்புலவர் இரா. இராகவர் ஆழ்வார் திருநகரி, திருமேனி இரத்தின கவிராயர் வழியில் வந்த தாயவலந்தீர்த்த கவிராயர் வீட்டிலும், தேவர் பிரான் கவிராயர் வீட்டிலும் ஏடுகள் தேடினார். அவர்கள் வீடுகளில் கிடைத்த திருக்குறள் பரிமேலழகர் உரைச் சுவடிகளின்மேல் பரிபாடல் உரையாசிரியரைப் பற்றிய பாயிரச் செய்யுள் ஒன்று கிடைத்தது. அதனால் பரிபாடல் உரை செய்தவர் பரிமேலழகரே என அறியப்பட்டது.

திருமேனிக் கவிராயர் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு 'நுண் பொருள் மாலை' என ஒரு விளக்கவுரை வரைந்திருந்தார். அதில் 'இவ்வுரையாசிரியரே பரிபாடலுள் ஓதியவாற்றான் உணர்க' என்னும் குறிப்பு இருந்தமையால் திருக்குறள் உரையாசிரியரும் பரிபாடல் உரையாசிரியரும் ஒருவரே எனக் கண்டார். அது சாமிநாதர்க்குப் பயன்பட்டது.

பரிபாடல் முதற் பதிப்பு 1918-இலும், இரண்டாம் பதிப்பு 1935-இலும் வெளிவந்தன.

## பெருங்கதை
## 1924

முதலும் இறுதியும் இல்லாத இப்பெருநூலை முதற்கண் வெளியிடும் பேறும் சாமிநாதர்க்கே வாய்த்தது. நூற்பெயர் அறிதற்கு அரும்பாடுபட்டார்; 'பழிப்புரையும் ஒருகால் பயனுரையுாம்' என்பது போல் இதன் பெயர் அறிய வாய்த்தது.'

நெல்லை அம்பலவாண கவிராயர் வீட்டில் இருந்த சுவடிக் கட்டு ஒன்று 'கொங்குவேண் மாக்கதை' என்னும் சீட்டுடன் இருந்தது. இலக்கணக் கொத்தில் "சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேண் மாக்கதை" என்று வரும் உரை நினைவுக்கு வருதலால், சாமிநாதர் எடுத்துக்கொண்டார்.

"சாமிநாத தேசிகர் வெறுத்துக் கூறிய வாக்கியப் பகுதி அப்பொழுது ஞாபகத்திற்கு வரவில்லையேல் இந்நூலை வாங்கி வைத்துக்கொள்வதற்கு இடமில்லை. அவர் வைதது இந்நூலுக்கு வாழ்த்தாக முடிந்தது" என்கிறார்.

அச் சுவடியில் முதல் 80 ஏடுகள் காணப்படவில்லை. 319ஆம் ஏட்டுக்கு மேலும் இல்லை. இடையேயும் சில பகுதிகள் இல்லை. திருப்பாற்கடனாத கவிராயர் வீட்டில் சுவடியொன்று கிடைத்தது. அது முன்னைப்படியில் இருந்து படிஎடுக்கப்பட்டதே ஆகலின் விடுபாடு அதிலும் கிட்டவில்லை.

இதன் முதற் பதிப்பு 1924-இலும், இரண்டாம் பதிப்பு 1935-இலும் வெளிவந்தன.

## சங்க இலக்கியம்
## 1940

இது சைவசித்தாந்த சமாசத்தின் சிறந்த பதிப்பாகும். புலவர் வரிசையில் அமைந்துள்ள இப்பாடல் தொகைப் பதிப்பு ஆய்வார்க்கு அரிய கலைக்களஞ்சியம் ஒப்பது. இதனைப் பதிப்பித்தவர் அறிஞர் ச. வையாபுரியார்.

சங்கஇலக்கியப் பாடல்கள் 3181. பாடிய புலவர்கள் அகம்பன் மாலாதனார் முதல் வேம்பற்றூர் குமரனார் ஈறாக 473 பேர்கள். ஆசிரியர் பெயர் காணாத பாடல்கள் 102. 1443 பாடல்கள் முதற்பகுதியாகவும் எஞ்சியவை இரண்டாம் பகுதியாகவும் வெளிவந்துள.

முதற் பதிப்பு 1940 இலும், இரண்டாம் பதிப்பு பாரி நிலையத்தின் வழி 1967 இலும் வெளிவந்தன. அச்சுப் படிகளுடன், ஏட்டுப் படிகளும் திரட்டி ஆய்ந்த பதிப்பே இஃதாகலின் சுட்டப் பெற்றதாம்.

## பழந்தமிழ் இலக்கியப் பேழை
## 1970

பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை உரையுடன் ஒருவர் ஒருங்கே பெறுவதற்குக் கழகத்தால் தோற்றுவிக்கப் பட்ட திட்டம் ஈதாகும். சில நூல் பதிப்புகளுக்கு ஏட்டுத் துணையும் வாய்த்துள்ளதைக் கண்டுள்ளோம்.

தொல்காப்பிய உரைகள் பதினொரு தொகுதி களாகவும், பத்துப்பாட்டு இரண்டு தொகுதிகளாகவும், எட்டுத்தொகை பதினொரு தொகுதிகளாகவும், பதினெண் கீழ்க்கணக்கு ஏழு தொகுதிகளாகவும், காப்பியங்கள் பதினொரு தொகுதிகளாகவும் அமைந்துள்ளன. பழந்தமிழ்ப் பதிப்புகளைப் பார்த்த நாம் அவற்றின் முழுமைத் தொகுப்பைக் கண்டு பயன்கொள்ளவைத்த தாமரைச் செல்வர் வ. சுப்பையா அவர்கள் எண்ணமும், செயலும் பாராட்டி அமைவாம்.

# 7. செய்யத் தக்கன

பழஞ் சுவடிகளை ஆராய்தல், செவ்விதிற் பதிப்பித்தல் ஆகிய இரண்டு பணிகளும் உடனடியாகச் செய்யத்தக்கன ஆகும். இவை அரசும் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் இணைந்து ஆராய்ந்து செய்யத் தக்கனவாம். 'அரசு செய்க' எனப் பல்கலைக்கழகங்கள் வாளா இருப்பதோ, 'பல்கலைக் கழகங்கள் செய்க' என அரசு புறக்கணிப்பதோ தமிழ் உலகுக்குக் கேடு பயப்பதேயாம். அதிலும் குறிப்பாக அரசின் தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறையும், பல்கலைக் கழகங்களின் தமிழ்ஆராய்ச்சித் துறைகளும் இவற்றில் பங்குபற்றிச் செயலாற்றுதல் வேண்டும்.

பழஞ்சுவடிப் பயனைக் கிடைக்கும் அளவிலேனும் பழுதின்றிப் பெறுவதற்கு முதற்கண் இரண்டு குழுக்களை அமைத்தல் வேண்டும். ஒன்று பழஞ்சுவடிக் குழு; மற்றொன்று பதிப்புக் குழு.

### பழஞ்சுவடிக் குழுவின் கடமைகள்:

### க. பழஞ்சுவடிகள் தொகுத்தல் :

நாட்டில் உள்ள சுவடிகள் எல்லாம் தொகுக்கப்பட்டு விட்டன என்று கூறுவதற்கு இல்லை. இது பழந்தமிழ்ச் சுவடிகளையும் மனத்துக்கொண்டு கூறுவதேயாம்.

தாமோதரனார்க்குக் கிடையாத கலித்தொகைச் சுவடிகள் அனந்தராமர்க்குக் கிடைத்துள. அரங்கனார்க்குக் கிடையாத குறுந்தொகைச் சுவடிகள் சாமிநாதர்க்குக் கிடைத்துள. சாமிநாதர்க்குக் கிடையாத புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்துச் சுவடிகள் ஔவைக்குக் கிடைத்துள; இவர்கள் அனைவர் பதிப்புகளுக்கும் கிடையாத சுவடிகள் வையாபுரியார்க்குக் கிடைத்துள; இவ்வனைவர்

பதிப்புகளுக்கும் எட்டாத குறுந்தொகைச் சுவடி ஒன்று பேராசிரியர் கந்தசாமியார்க்குக் கிடைத்துளது.

இங்குக் கூறியவற்றால் சுருக்கமாக அறியும் செய்தி ஒன்றேயாம். ஏடுகள் அனைத்தும் இன்னும் முற்றாசத் தொகுக்கப் பெற்றில; தொகுத்தற்கு இன்னும் வாய்ப்புண்டு; இதனை இக்காலத்திலேனும் தவறவிடாமல் தொகுத்தல் வேண்டும் என்பதே.

## உ. பழஞ்சுவடிப் பட்டியல் அமைத்தல்:

பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர் செய்யத்தக்க இரண்டாம் செயல் இஃதாகும். தாம் தொகுத்த நூல்களைப் பட்டயலிட்டு விளக்கத்துடன் குறிப்பெழுதுதல் வேண்டும்.

ஏட்டின் பெயர், பக்க எண்ணிக்கை, பாடல் முதலியவற்றின் அளவு, பாடியவர் உரையெழுதியவர் படியெடுத்தவர் பேணிப் போற்றியவர் வழங்கி உதவியவர் காலம், ஆகியனவெல்லாம் அக்குறிப்பில் தவறாமல் இடம் பெறுதல் வேண்டும். மற்றும் தம் தொகுப்புள் இடம்பெறாமல் மற்றை மற்றை அமைப்புகளில் இருக்கும் சுவடிகள் பட்டியலும் தொகுத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வமைப்பினர் பட்டியல் வைத்திருப்பினும், வைக்காதிருப்பினும் பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர் ஆங்குச் சென்று பட்டியல் செய்து கொள்ளுதல் வேண்டும். ஒரு நூலுக்கு இத்தனை சுவடிகள் உண்டு என்னும் தெளிவுக்கும் பயனுக்கும் இப்பணி ஏந்தாம்.

## ங. படி எடுத்தல்:

சுவடிகள் காலத்தின் வாய்ப்பட்டு அழிந்து போதல் இயற்கை. அந்நிலைப்பட்ட சுவடிகளைப் படியெடாமல் வைத்துவிட்டால் தாமோதரனார் கூறுவதுபோல் 'கம்பையும் நாராசமுமே' மிஞ்சும். ஆதலால் படியெடுப்பு தொடர்ந்து நடைபெற வேண்டும் பணியாகும்.

அறிவியல் வளர்சசி மீக்கூர்ந்த காலம் இது; ஒளிப்படி எடுத்தல், ஒளிச்சுருளாக்கல், தட்டச்சிடுதல் என்பன வெல்லாம் இயல்தலும பேணலும் கூடுவதேயாம்.

## ச. ஒப்பிட்டு ஆராய்தல்:

ஒபபிட்டு ஆராயதல் எனனும் இப்பணி இரு கூறுபடடதாகும் ஒன்று, ஏடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பாடவேறுபாடு காணுதல், மறறொன்று, அச்சிடப்பட்ட சுவடிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பாடவேறுபாடும திருத்தமும் காணுதல்.

''ஏரினும் நன்றாம எருவிடுதல கட்டபின்
நீரினும் நன்றதன காப்பு''

என்பதுபோல ஒன்றின ஒன்று உயர்ந்து செல்லும் பெருமையுடையது பழஞ்சுவடி ஆயவுப பணியாகும்.

ஒபபிடடு ஆராய்தல் எனபது ஒத்த உள்ளத்தாரும் உணர்வாரும் விரும்பிச் செய்யும் பணியாகும். ஒபபுக்குச் செயவார பணி பயன தருவதாகாது. ஒருவரே பல படிகளை ஒருங்கு வைத்துககொண்டு ஆராய்தலும இடர்ப்பாடு உடையது மட்டுமன்றிச் செபபமான பணியும் ஆகாது. 'கல்விககு இருவர்' என்பது இவ்வகையால் மிகக் கருததததக்கது. இனனும் ஏட்டுச சுவடிகளின் எண்ணிக்கைககு ஏற்ப, இருவர் என்னும எண்ணும் உயரக கூடியதாம்.

"ஒரே சமயத்தில் நாலைந்து மாணாக்கர்கள் ஆளுக்கு ஒரு பிரதி வைததுக கொண்டு பாடபேதம் பார்ககும போது வேலை மிகவும் வேகமாக நடைபெறும. அதில் சிறிதும் சிரமமே தோனறாது பகலோ இரவோ ஏதாயிருநதாலும சலிப்பினறி ஆராய்ச்சி செய்து வநதேன" என்கிறார சாமிநாதர

ஒபபிடுவதறகு முனனே செப்பமான ஒரு சுவடியைப் படியெடுததுக் கொள்ளுதல் வேண்டும். அதில் ஒபபிட்டால்

அறிய வரும் பாடவேறுபாடுகளையும் திருத்தங்களையும் குறித்துககொணடுவருதல் வேண்டும். விடுபெற்ற பாடல்கேளா அடிகளோ சில சுவடிகளால் நிரமபப் பெறுதலும் உண்டு. இதுவே பொருந்தததககது எனனும திருததங்களுமகிட்டுவது உண்டு. அவற்றை இச்சுவடி வழியே பெறறதென்னும் குறிப்பும் வேண்டும். அககுறிபபு பினனாயவுககும் பயன் செய்யும

நூலின் முன்னும் பினனும், இடைஇடையேயும் ஏடு எழுதியோர் பெயர், எழுதிய காலம், எழுதுவித்தோர் குறிபபுகள் வாயத்தல் உண்டு. அவற்றையும் விடாமல் தொகுததுக் கொண்டால் சுவடி வரலாற்றுப் பயனாம்.

படி எடுத்தல் ஒருவர் செப்பத்தால கைகூடும. ஆனால் ஒப்பிட்டுப் பார்த்தல் பலரின் ஒருமித்த நன்னோககால் நிறைவேறுவதாம் இதற்கேற்பப் பதிப்புக் குழு அமைதல் வேண்டும்.

## ரு. பாட வேறுபாடும் திருத்தமும் தொகுத்தல்:

ஏட்டுச சுவடியொடும் ஆய்ந்து பாட வேறுபாடு காண்டலாலும் திருததங்கள் பெறுதலாலும் பயனென்ன? அவற்றை அச்சிட்டுக் கருவியாக்குதலும் ஆயவுக கருவி யாககுதலும் கட்டாயம் வேண்டுவதாம் இல்லாக்கால் அவ்வரிய முயற்சியால் ஏன்ன பயனுண்டு?

இததகைய முயற்சி இநநூறறாண்டின் தொடககத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் மேற்கொள்ளப பெறறிருககிறது உருப்படியான செயலும செயதிருககிறது பாடவேறுபாடு செநதமிழ் இதழில் முறையே வெளிபபடுததவும பெற றுள்ளது. அவறறுள் இரண்டைக் குறிபபிடுவோம ஒன்று, 'இராமாவதாரச செய்யுட் பாடாந்தரம' எனபது மற்றொன்று, 'மகாபாரதச செயயுட் பாடாந்தரம்' எனபது முனனது யாழ்ப்பாணம் புனனாலைக் கட்டுவன் சி கணேசரால் ஆயநது தரபபெறறது. பின்னது சேற்றூர இரா சுப்பிரமணியக் கவிராயரால் ஆய்நது வெளியிடப்பெற்றது

இம்முயற்சி பழஞ்சுவடி ஆய்வுக் குழுவினர் மேற்கொள்ள வழிவகை காணல் வேண்டும். அவர்கள் கண்டு பதிப்பித்த பாடங்களை மேல்வரும் பதிப்பாளர் எவராயினும் கட்டாயம் ஏற்றுப் போற்றலும் வேண்டும். ஏனெனில், முன்னர் அவ்வாறு காணப்பட்ட செவ்விய பாடங்கள் இதுகாறும் போற்றப் பெறாமலே பல்வேறு பதிப்புகள் பிழைபடவே வந்து கொண்டிருத்தல் எண்ணத்தக்கதாம்.

## சு. பதிப்பாக்கம் செய்தல்:

பதிப்பாக்கம் செய்தலும் இருவகைப்பட்டதாம். அவை, இதுகாறும் அச்சில் வாராத சுவடிகளை ஆய்ந்து அச்சிடல்; அச்சில் வந்தும் மீண்டும் பதிப்புப் பெறாமல் ஒடுங்கியுள்ள நூல்களை அச்சில் மீளக் கொண்டுவருதல்.

முன்னதில் இன்னும் எண்ணற்ற சுவடிகள் உள. சிற்றிலக்கிய வகைகளில் பெயர்தானும் அறியப்பெறாத பலவற்றைப் பிரபந்தத்திரட்டு என்னும் பாட்டியல் நூலால் அறிந்துகொள்ள முடிகின்றது. இலக்கியம் கண்டுதானே இலக்கணம் இயம்பப் பெறும். அவற்றைத் தேடி வெளியிட வேண்டுமே! வெளிவந்தனவும் அழியாமல் காக்கப்படவும் வேண்டுமே!

பதிப்புக் குழுவின் பணிக்கெனத் தனியே ஓர் அச்சகம் இருத்தல் வேண்டும். ஆராய்ச்சிக் குழுவினர் ஆய்ந்து தந்த பாட வேறுபாடு, திருத்தம், சேர்க்கை, நீக்கம் ஆகியவற்றை நூல் வரிசையில் சிறு சிறு வெளியீடுகளாக வெளியிடுதல் வேண்டும். இங்கு இலக்கிய இலக்கணச் சுவடிகளுக்குக் கூறிய குறிப்புகள் மருத்துவம், கல்வெட்டு, இசை முதலிய துறைகளுக்கும் பொருந்துவனவாம். அவற்றுக்குத் தனித்தனிக் குழுக்கள் அமைத்துப் பணியாற்ற வேண்டும்.

இந் நடைமுறை சில காலங்களுக்கேனும் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். ஆதலால், இசை கூத்து முதலியவற்றைத் தனித்துறை எனத் தேர்ந்து பயில்வார்க்குப்

பயிற்சியளித்தலும் பட்டம் வழங்குதலும் போல் சுவடித் துறைக்கும் வழங்குதல் வேண்டும். இவ்வாறு செய்தால், ஆர்வமும் தேர்ச்சியும் மிக்கார் இத்துறைக்குக் கிடைத்து இனிய தொண்டாற்ற இயலும்.

'தமிழ் வாழ்க' 'ஓங்குக' 'உயர்க' என்பன கேட்க இனிக்கலாம்! சொல்ல இனிக்கலாம்! ஆனால் உருப்படியான நன்மையைத் தாரா! உருப்படியான நன்மை வழிதுறைகளை ஆய்ந்து செயலாற்றுதலிலேதான் உள்ளது. "செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும்" அல்லவா!

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

பெருமக்கள் அமைப்புகள் பற்றியது.

நாவலர், தாமோதரர், சாமிநாதர், வையாபுரியார் என்பாரும் பிறரும் பழந்தமிழ்ப் பதிப்பில் ஊன்றியமையைக் கால ஒழுங்கில் கூறுவது ஐந்தாம் கட்டுரை.

திருக்குறள் முதலாகப் பழந்தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பட்ட வரலாறு பதிப்புப் பணி என்னும் ஆறாம் கட்டுரையாம். நூலில் செம்பாதி இக்கட்டுரை எனின் தகும்.

பதிப்புத்துறை சுவடிப்புலம் என்பன செய்யத் தக்கன எவை எவை என்பதைச் சுருங்கக் கூறுவது நிறைவுக் கட்டுரை. அது ஆறு குறிப்புகளைக் கொண்டது.

இவ்வரலாற்றில் ஆயத்தக்கன பிறவும் உண்டெனினும், பொழிவின் காலம், நூலளவு முதலியன கருதி அவை இவண் கருதப் பெற்றில. 'பதிப்பின் நிறையும் குறையும்' தனியே ஆயத்தக்கது என்பதைச் சுட்டுதல் சாலும்

பாவாணர் ஆய்வு நூலகம்,
திருநகர், மதுரை - 6.

தமிழ்த் தொண்டன்
இரா. இளங்குமரன்

